# காலைக்கதிர்

Kālaikkathir

விழியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 23, ஞாயிற்றுக்கிழமை 05.02.2017 | கதிர் 92



புத்தம் புதிய நவீன ஆடைத் தெரிவுகளுக்கு

றோயல் கலெக்ஷன்ஸ்

இல.223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 5573


*போராட்டத்தைக் கைவிடுங்கள் எனக் கோரிய*

## முல்லை. அரச அதிபரின் வேண்டுகோளை நிராகரித்த மக்கள் தொடர்ந்து போராட்டம்

முல்லைத்தீவு,பெப்.05

முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் தமது நிலங்களை விடுவிக்கக் கோரி ஆரம்பித்த போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

கேப்பாபிலவு பிலவுக் குடியிருப்பு மக்களின் காணிகளைவிமானப்படை

பக்கம் 24 »






## நாட்டில் போராட்டங்கள் அதிகரிப்பு தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை

*நல்லாட்சி அரசை சாடுகிறார் மஹிந்த*

கொழும்பு, பெப்.05

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நாட்டின் பிரச்சினைகள், ஆர்ப்பாட்டங்கள், பகிஷ்கரிப்புக்கள் என்பனவற்றை பேச்சுக்களின் மூலமாவது தீர்த்து வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என

பக்கம் 24 »



## சுதந்திரதின நிகழ்வில் தமிழில் தேசிய கீதம்

கொழும்பு, பெப்.05

நேற்று காலிமுகத்திடலில் நடைபெற்ற 69 ஆவது சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டுள்ளது.

மிக நீண்ட தசாப்தங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதைஅடுத்து தென்னிலங்கை அரசியல் களத்தில் பெரும் குழப்பகரமான நிலை ஏற்பட்டது.

பக்கம் 24 »

# நிதி அமைச்சை பிரதமர் ரணிலே பொறுப்பேற்பார்?

*ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக உட்கட்சி அதிருப்தி மிக உச்சமாம்*

கொழும்பு, பெப்ரவரி 05

**உள்நாட்டு நிதி விடயங்கள் மற்றும் அது சம்பந்தமான கொள்கை விவகாரங்களைக் கையாள்வது தொடர்பில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மீது சீற்றமடைந்திருக்கும் ஐ.தே. கட்சிப் பிரமுகர்கள் அந்தப் பதவியை அவரிடமிருந்து பிடுங்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றனராம்.**

இதனையடுத்து பிரதமர், நிதி அமைச்சைத் தாமே பொறுப்பேற்று, அமைச்சு விடயங்களைக் கையாள்வதற்காக ஒரு பிரதிநிதி அமைச்சரை நியமிப்பார் எனத் தெரியவந்துள்ளது.

– இவ்வாறு கொழும்புச் செய்தி வட்டாரங்கள்சிலநேற்றுத்தகவல்வெளியிட்டன.

இது விடயத்தில்பிரதமருக்குஅழுத்தம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

பெரும்பாலும்தற்போது அரசதொழில் முயற்சிகள் பிரதி அமைச்சராக இருக்கும் இரான் விக்கிரமரட்ண பிரதிநிதி அமைச்சராக நியமிக்கப்படலாம் எனப் பேச்சிடிபடுகின்றது.

ரவிகருணாநாயக்காவுக்குபெற்றோலிய வளங்கள் அமைச்சும், தற்போதைய பெற்றோலிய வளங்கள் அமைச்சர் சந்திமவீரக் கொடிக்கு தற்போது

பக்கம் 24 »

## ஜனாதிபதி தலைமையில் சுதந்திர தின நிகழ்வுகள்



இலங்கையின் 69 ஆவது தேசிய சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று காலி முகத்திடலில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர், மாணவப் படையணியினர் ஆகியோரின் அணி வகுப்புக்கள் இடம்

பக்கம் 24 »

## நேற்றைய சுதந்திர தினத்தில் சம்பந்தன், மஹிந்த இல்லை

கொழும்பு, பெப்.05

காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற 69 ஆவது தேசிய சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

திருகோணமலையில் உள்ள ஆலயமொன்றில் இடம்பெறும்கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்ளச்சென்றமையால்எதிர்க்

பக்கம் 24 »

## அளப்பு அருணாசலம்



உவை ரண்டு பேரும் எதிர்க்கட்சி எண்டதை காட்டிப்போட்டினம் பாருங்கோ...!

## சீனாவின் இராணுவ மையங்களை இலங்கையில் அமைக்க முடியாது

*கருணாசேன கொடித்துவக்கு சீனாவில் அறிவிப்பு*

கொழும்பு, பெப்.05

இலங்கையில் சீன இரா ணுவ மையங்களை அமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கையின் சுதந்திரதின நிகழ்வின்போது நேற்று சீனாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்றது. அங்குஉரையாற்றுகையிலேயே சீனா

பக்கம் 24 »

## தனியார் பல்கலை நாட்டுக்குத் தேவை

*கூறுகிறார் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க*

கொழும்பு, பெப்.05

இலங்கையில் உள்ள சர்வதேசப் பாடசாலைகளில்கல்விபயிலும்மாணவர்களுக்குஉயர்கல்வியை வழங்குவதற்கு தனியார் பல்கலைக்கழகங்கள் அத்தியாவுசியமானவை என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கதெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று

பக்கம் 24 »

## வவுனியா இ.போ.ச. பணியாளர்களின் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது

*இன்று முதல் போக்குவரத்து வழமைக்குத் திரும்பும்*

வவுனியா, பெப்.05

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலைப் பணியாளர்கள் மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பு மற்றும் உணவு தவிர்ப்பு போராட்டங்கள் நேற்றுடன் முடிவுக்கு வந்தன.

வர்த்தக வாணிப அமைச்சர்ரிசாத்பதியுதீன்,

பக்கம் 24 »

## தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற இப்போதும் போராடவேண்டி உள்ளது

*கேப்பாபிலவில் வடக்கு முதல்வர் விக்கி*


முல்லைத்தீவு,பெப்.05

இலங்கை சுதந்திரம் அடைந்து 69 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், இன்றும் எமது தமிழ் மக்கள் அவர்களது உரிமைகளுக்காகப் போராட வேண்டியவர்களாக உள்ளனர் என வடமாகாண

பக்கம் 24 »

*யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு சமீபமாக*

## பொலிஸாரின் கெடுபிடிகளையும் மீறி சுதந்திர தின எதிர்ப்புப் போராட்டம்



- எஸ்.நிதர்சன் -

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ். மாவட்டச் செயலகத்துக்குச் சமீபாக கடும் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

பக்கம் 24 »

# தமிழ் இளைஞர்களின் விடுதலைக்கு கட்சி பேதமின்றி உழைக்கவேண்டும்

## முல்லைத்தீவில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் வலியுறுத்தல்



முல்லைத்தீவு பெப்.05

சிறைச்சாலைகளில் வாடும் அப்பாவித் தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக இன, மத, கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக் கடற்கரையில் நேற்று இடம்பெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த மாவட்டத்தில் உங்களோடு வாழ்ந்து, உங்களுக்கு உதவிசெய்து, உங்களைப் போல் அகதியாகவந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் ஜயாவின் புதல் வரும் சிறையில் வாடிக்கொண்டிருக்கின்றார். எனவே, சிறையில் வாடுபவர்களின் விடுதலைக்காக நாம் ஒன்றுபட வேண்டும்.

இந்த நாட்டை அந்நியரிடமிருந்து மீட்டெடுப்பதற்காக தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் என்ற பேதமின்றி தேசப்பற்றுள்ள நமது முன்னோர்கள் இணைந்து போராடினார்கள். அவ்வாறு போராடியே சுதந்திரம் பெற்றனர்.

எத்தனையோ தலைவர்களின் வியர்வைசிந்திப்பெற்றுக் கொண்ட இந்த சுதந்திரத்தை எந்தவிதமான பேதமுமின்றி, முல்லைத்தீவுமண்ணில் இன்று கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிம்மதியற்ற வாழ்வுக்கு மத்தியிலே வாழ்ந்து வந்தோம். யுத்தத்தில் ஆர்வம் காட்டிய 12 ஆயிரம் புலிகள் சமாதானத்தை நோக்கி வந்து சமூக வாழ்க்கையில் இணைந்து கொண்டனர்.

அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு, இப்போது சுமுகமாக வாழ்கின்ற போதும் வாழ்வாதாரங்கள் இல்லாமல், தமது அத்தியாவசிய தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாதவர்களாக இருக்கின்றனர். இவர்களின் வாழ்க்கைக்கு போதிய வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். மனிதாபிமான ரீதியில் இவர்களின்பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் இனவாத சிந்தனையுள்ளவர்களின் செயற்பாடுகளால் எங்களுக்குள் சில பிரச்சினைகள் ஏற்பட்டன. அதனால் பெரிய அழிவை நாங்கள் சந்தித்தோம்.

இப்போது அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து சமுதாயத்தை முன்னேற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. நல்லாட்சியில் பலகட்சிகளைச் சேர்ந்த நல்லபண்புள்ள அரசியல்தலைவர்கள்பங்காளிகளாக இருக்கின்றனர். எனவே, நாட்டை கட்டியெழுப்புவதற்கு இதைவிட ஒரு நல்ல தருணம் கிடைக்காது என்றார். (ம-8)

# பூநகரி பிரதேச வைத்தியசாலையில் சுத்தமான குடிதண்ணீர்த் திட்டம்

## வடக்கு முதலமைச்சர் நேற்று ஆரம்பித்து வைத்தார்



கிளிநொச்சி-பூநகரிபிரதேச வைத்தியசாலையில் சுத்தமான குடிதண்ணீர்த் திட்டம் ஒன்று பகவான் சத்ய சாயிபாபா மத்திய நிலையத்தால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் இத்திட்டத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டத்தினால் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் மற்றும் வைத்திய சாலையைச் சூழவுள்ள மக்கள் பயன்பெறவுள்ளனர்.

இவ்வைத்தியசாலை அமைந்துள்ள பிரதேசம் சுத்தமான குடிதண்ணீரோ, நன்னீரோ இல்லாத பிரதேசமாகும். இத்திட்டம் இவ்விடத்துக்குப் பெரிதும் பயன் உள்ளதாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ம)

# எமது மக்கள் கஷ்டப்படும்போது எமக்கு என்ன சுதந்திரதினம்?

## கேள்வி எழுப்பினார் வடக்கு முதல்வர்



பூநகரி, பெப்.05

"எமது மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது எங்களுக்கு என்ன சுதந்திர தினம்? சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்குச் செல்லாமல் கேப்பாபிலவு மக்களைச் சந்திக்கச் செல்கின்றேன்." - என்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

நேற்று பூநகரி பிரதேச வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அங்கு சென்ற முதலமைச்சரிடம், "நீங்கள் ஏன் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவில்லை" என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கே அவ்வாறு தெரிவித்தார்.

பூநகரியில் இருந்து நேரடியாக கேப்பாபிலவுக்குச் சென்ற வடக்கு முதலமைச்சர் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் கலந்துரையாடினார். (ம-8)

# மூவின மாணவர் பயிலும் பாடசாலை பொலன்னறுவையில் நிறுவ ஏற்பாடு

## இந்தியத் தூதுவர் உடன்பாட்டில் கைச்சாத்து

கொழும்பு, பெப்.05

பொலன்னறுவை மாவட்டத்தில் மும்மொழிப் பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது. அதற்கான உடன்படிக்கையில் இலங்கைக்கான இந்தியத்தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவும் இலங்கைக் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெற்றியாராய்ச்சியும் நேற்று முன்தினம் கைச் சாத்திட்டனர்.

இந்திய அரசு வழங்கும் 300 மில்லியன் இலங்கை நாணயத்தில் பாடசாலை கட்டப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், நூல் நிலையங்கள் என்பன அமைக்கப்படும்.

தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்கள் பயில்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும்–

கூட்டு இன, கலாசாரச் சூழமைவில் பாடசாலை இயங்க வகை செய்யப்படும் என்றும் – தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டில் மீள் நல்லிணக்கம் மற்றும் இன ஒற்றுமையைக் கட்டி எழுப்பவும் இந்த ஒப்பந்தம் வகை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியப் பிரஜை நேற்றுக் கைது

அலரி மாளிகையையும் அதனை அண்டிய பிரதேசத்தையும் புகைப்படம் பிடித்த 36 வயதுடைய இந்தியப் பிரஜை ஒருவர் சந்தேகத்தின் பேரில் நேற்று பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

சுதந்திர தின நிகழ்வுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அழகை ரசிப்பதற்கே அவர் இவ்வாறு படம் பிடித்தார் என பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் வத்தளைப் பிரதேசத்தில் குடியிருப்பவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ)

# ருகுணு பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளாகம் முடக்கம்

கொழும்பு, பெப்.05

ருகுணு பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளாகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்களுக்கும் பல்கலைக்கழகமாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் நிலை காரணமாகவே வெல்லமடம வளாகம் இவ்வாறு மூடப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக ருகுணு பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளாகத்தில் உள்ள 5 கல்விப் பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன எனப் பல்கலைக்கழக நிர்வாகப் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று மாலை 6 மணிக்கு முன்னர் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து மாணவர்கள் அனைவரும் வெளியேற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# இராஜாங்க அமைச்சர் டிலானுக்கு எதிராக கெமுனு விஜயரத்ன வழக்கு

இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவுக்கு எதிராக 'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரியின் பெற்றோர் சங்கத்தின் செயலாளரும், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவருமான கெமுனு விஜேரத்தன 500 மில்லியன் ரூபா மான நஷ்ட வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார் என நேற்று அறிவித்துள்ளார்.

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்புத் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வைத்து கெமுனு விஜேரத்ன கருத்துக் கூறியிருந்தார்.

இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா அன்றைய தினம் நடைபெற்ற மற்றுமொரு ஊடகவியலாளர் சந்திப்பின் போது கெமுனுவின் கருத்தை ஏளனப்படுத்தியும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்துடன் கெமுனுவைத் தொடர்புபடுத்தியும் கருத்து வெளியிட்டிருந்தார்.

டிலான் பெரேராவின் இக் கருத்தால் தனக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது எனவும், இதற்கு எதிராக மான நஷ்டம் கேட்டு வழக்குத் தாக்கல் செய்ய உள்ளார் என்றும் கெமுனு விஜேரத்ன நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (ஒ)

# நல்லூரில் இன்று குருதிக்கொடை நிகழ்வு

நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறும்.

உத்வேகத்துக்கான ஒருங்கிணைப்பு நிறுவனத்தினர் யாழ். இரத்த வங்கியுடன் இணைந்து இந்தக் குருதிக்கொடை நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

18-60 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 50 கிலோவுக்கு அதிகம் எடை கொண்டவர்களும் குருதிக்கொடை செய்யலாம் என்றும் 0768363684 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு விவரம் அறிய முடியும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# கேப்பாபிலவுப் போராட்டத்துக்கு ஆதரவாக கடைகள் பூட்டு



முல்லைத்தீவு – கேப்பாபிலவில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு ஆதரவாக நேற்று முல்லைத்தீவு மாவட்டம் தழுவிய ரீதியில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு நகரம், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய இடங்களில் நேற்று வர்த்தகர்கள் தமது கடைகளைப் பூட்டி போராட்டத்துக்கு ஆதரவை வழங்கியிருந்தனர். (ம-8)

# கிளிநொச்சியில் நேற்று பறக்கவிடப்பட்ட சமாதானச் செய்தியைத் தாங்கிய புறாக்கள்






கிளிநொச்சி, பெப்.05

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 69 ஆவது சுந்திரதினத்தை முன்னிட்டு கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு சமாதானச் செய்தியை தாங்கிய புறாக்கள் பறக்கவிடப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை கிளிநொச்சி ரயில் நிலைய முன்றிலிலிருந்து பதினைந்துக்கும் மேற்பட்ட புறாக்கள் பறக்கவிடப்பட்டுள்ளன. அந்தப் புறாக்கள் சுமார் நான்கு மணித்தியாலங்களில் கொழும்பைச் சென்றடையும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சிறிய துண்டு ஒன் றில் தகவல்கள் எழுதப்பட்டு புறாக்களின் காலில் கட்டப்பட்டு பறக்கவிடப்பட்டன.

புறாக்களின் கால்களில் கட்டப்பட்டுள்ள தகவல் துண்டில் தகவல் எழுதியவர்களின் தொலைபேசி இலக்கமும் எழுதப்பட்டுள்ளது.

புறாக்கள் கொழும்பைச் சென்றடைந்ததும் அங்கிருந்து அந்தத் தொலைபேசி இலக் கத்துக்கு அழைப்பு மேற்கொள்ளப்பட்டு தகவல் தெரிவிக்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சமாதானச் செய்தியைத் தாங்கிய புறாக்களை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிகன்ன, மேலதிக அரச அதிபர் எஸ். சத்தியசீலன், ரயில் நிலைய அதிபர், மாவட்ட திட்டப் பணிப்பாளர், மதகுரு ஆகியோர் பறக்கவிட்டனர். (ஐ-70)

# சுதந்திர தினத்தில் கறுப்புக் கொடி: எதிர்ப்புக் காட்டிய வவுனியா மக்கள்

## மசாஜ் நிலையத்தையும் அகற்றுமாறு ஆர்ப்பாட்டம்






சுதந்திர தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, தேக்கவத்தை ஏ - 9 வீதிப் பகுதியிலேயே வீதியின் இரு பகுதிகளிலும் கறுப் புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் பெரும்பான்மையின மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் தேக்கவத்தை 'சுவசெவன' என்னும் பெயரில் மசாஜ் நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இதனை அகற்றுமாறு பொலிஸார் உள்ளிட்ட பல தரப்பிடமும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்த போதும் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அந்தப் பகுதி மக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட போது, மசாஜ் நிலையம் தொடர்பில் முறைப்பாடு செய்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்தநிலையில் அங்கு வந்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான் இது தொடர்பாக வவுனியா நகரசபையின் செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு நகர சபை செயலாளர் மற்றும் வட மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், ஏ.ஜெயதிலக ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இதனையடுத்து நகர சபைச் செயலாளர் மசாஜ் நிலையம் இயங்கிய இடத்துக்குச் சென்று பார்த்தபோது அங்கு எவரும் இல்லாத நிலையில் குறித்த வீடு பூட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அந்த வீட்டின் முன்பாக எதிர்வரும் திங்கட்கிழமை மசாஜ் நிலையம் நடத்தமுடியாது என்று நோட்டிஸ் ஒட்டப்படும் என்று செயலாளர் தெரிவித்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ-100)

# மஹா கும்பாபிஷேகம்

தென்மராட்சி, பெப்.05

சாவகச்சேரி கிழக்கு முதலாம் கட்டைப் பகுதியில் அருள்பாலிக்கும் மணல் பிட்டி சித்தி விநாயகர் ஆலய புனராவர்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 6.54 முதல் 8.26 வரையுள்ள கும் பலக்கினமும் புநர்பூசநட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் சிவாகம கிரியா நிகழ்வுகள் இன்றுஞாயிற்றுக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளன.

நாளைதிங்கட்கிழமை நவக்கிரகஹோமம், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்திசங்கிரகணம், மூர்த்தி ஹோமம், அக்கினி கார்யம் என்பனவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாக பூஜையும் புதன்கிழமை காலை 8மணி முதல் மாலை 3மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஐ-21)

மணமக்கள் விபரம்
☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

மணமகன் விபரம்

4422 | வே
1968 | காரைநகர் | 176 cm
Business | இலண்டன்
பூரட்டாதி (கும்பம்) | கி.பா: 10 | செவ்: 12

5063 | வே
1957 | இணுவில் | 175 cm
Accountant | இலண்டன்
திருவாதிரை (மிதுனம்) | கி.பா: 21

3431 | கோ + வே
1970 | யாழ்நகர் | 165 cm
Accountant | இலண்டன்
அஸ்வினி (மேடம்) | கிறிஸ்தவம்

3498 | வே
1980 | கொழும்பு | 170 cm
Accountant | இலண்டன்
அத்தம் (கன்னி) | கி.பா: 32 | செவ்: 8

7050 | வே
1978 | கொல்லங்காலடி | 168 cm
Administrator | இலண்டன்
சுவாதி (துலாம்)

மணமகள் விபரம்

5472 | வே
1980 | கிளிநொச்சி | 154 cm
Administrator | இலண்டன்
விசாகம் (விருச்சிகம்)

3404 | வே
1990 | சுளிபுரம் | இலண்டன்
Software Engineer(Student) | 162 cm
பூசம் (கடகம்) | கி.பா: 38

3953 | வே
1992 | வட்டுக்கோட்டை | 170 cm
Doctor | இலண்டன்
ஆய்யிலியம் (கடகம்) | கி.பா:22

7278 | கோ
1988 | சுன்னாகம் | 165 cm
Marketing Executive | இலண்டன்
சுவாதி (துலாம்) | கி.பா: 42

6149 | வே
1977 | காரைநகர் | 162 cm
Technitional Officer | அவுஸ்திரேலியா
ஆய்யிலியம் (கடகம்) | கி.பா: 31

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை
011 406 32 82
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
021 492 75 27

# சுமந்திரன் மீதான கொலை முயற்சிக்குக் கண்டனம்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைப் படுகொலை செய்ய சதி முயற்சி நடைபெற்றது என்ற செய்தி அறிந்து அதிர்ச்சி அடைகின்றோம். இந்தச் சதி முயற்சியோடு தொடர்புடையோரை இனங்கண்டு, சட்டத்தின் முன் நிறுத்தி, பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தி, உரிய தண்டனை வழங்கவேண்டும்.

இவ்வாறு கனடாத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழரது உரிமைகளை வென்றெடுக்கும் பணியில் அயராது உழைத்து வரும் சுமந்திரனது பணியைப் பாராட்டுகின்றோம். அவருக்கு அரணாக விளங்குவோம். என்று மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாரமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## யார் சுதந்திரப் போராட்ட வீரர்கள்?

**இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம் நேற்று இடம்பெற்றது.**

நான்கு தசாப்த காலமாக இந்தச் சுதந்திரதின விழாக்களில் தமிழ்த்தேசியத் தலைவர்கள் பங்குபற்றுவதில்லை. தந்தை செல்வநாயகம் கூட இந்தச் சுதந்திர தின நிகழ்வுகளைப் பகிஷ்கரித்தே வந்தார்.

அந்த நடைமுறையைத் தகர்த்து கடந்த வருடம் நடைபெற்ற சுதந்திரதினவிழாவில் தமது நம்பிக்கைக்குரிய உதவியாளரான சுமந்திரனுடன் பங்குபற்றினார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

இந்தத் தடவை அவர் பங்குபற்றவில்லை. ஆனால், அதற்கு வேறு காரணம் உண்டு. அவர் மிகவும் நம்பிக்கையுடன் வணங்கும் திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில் எண்ணெய்க் காப்பும் கும்பாபிஷேகமும் திருகோணமலையில் நடைபெறுவதால், கொழும்பில் இடம்பெற்ற சுதந்திரதின விழாவில் அவர் பங்குபற்றவில்லை என்று என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், அவர் சார்பில் சுமந்திரன் எம்.பி. பங்குபற்றினார் என்று கூறப்பட்டது.

இலங்கைத் தீவில் வசிக்கும் தொன்மையான இனங்களில் ஒன்றான தமிழினத்தின் இறைமையைக் கபளீகரம் செய்த காலனித்துவக்காரர்கள், அந்த இறைமையை அப்படியே சிங்களவரின் இறைமையுடன் சேர்த்து பௌத்த, சிங்கள பேரினவாதிகளிடம் ஒப்படைத்துச் சென்றமையையும் சேர்த்து இந்தச் சுதந்திர தினம் குறிப்பதால் அது தமிழர்களுக்கு ஏற்புடையதன்று. அது தமிழர்களைப் பொறுத்தவரை 'சுதந்திர தினம்' அல்ல. அடிமைகள் தினமே. அதுதான் தமிழர்களின் ஏகோபித்த நிலைமை. அதனால்தான் கடந்த நாற்பது ஆண்டு காலமாக அந்தத் தினத்தை தமிழர்களின் தலைவர்கள் நிராகரித்து வந்தனர். கறுப்பு தினமாகவும் அனுஷ்டித்தனர்.

ஆனால், தமிழர்களின் தற்போதைய தலைவர் சம்பந்தனோ இவ்விடயத்தில் தமது முன்னைய தலைவர்களுக்கு முற்றிலும் மாறான - தலைகீழான - முடிவை எடுத்தார்.

அதற்குக் காரணம் உண்டு. நீண்ட காலம் நாட்டில் புரையோடிப் போயிருக்கும் தமிழர் பிரச்சினைக்கு ஒரு சுமுகத் தீர்வு காண வேண்டும், ஓர் இணக்கத் தீர்வு எட்டவேண்டும் என்ற முயற்சி இப்போது முழு அளவில் எடுக்கப்படுவதாக அவர் கருதுகிறார். அதற்கு இடமளிக்கும் வகையில் - அதை முன்நகர்த்தும் எத்தனமாக - இந்த நகர்வை அவர் எடுத்தார்.

ஆனால், அதற்குப் பதிலீடான - சமத்துவமான - செய்தியோ, சமிக்ஞையோ தென்னிலங்கையிலிருந்து இன்னும் வரவே இல்லை என்பது தான் வேதனைக்குரிய விடயமாகும்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற மோசமான கொடிய நோய் உள்ளது. அது நாட்டையும், மக்களையும், சமூகத்தையும் சீரழித்து வருகின்றது. அதன் விளைவுதான் இந்த நாட்டில் உள்நாட்டு யுத்தம். இந்த இலங்கைத் தீவைப் புரட்டிப்போட்டு, பல லட்சம் பேரின் உயிர்களைக் காவு கொண்டு, இரண்டு தலைமுறை விருத்தியையே சீரழித்த உள்நாட்டு யுத்தத்துக்கு ஒரே காரணம் - பிரதான காரணம் - இனச் சிக்கல்தான்.

அந்த இனப்பிரச்சினைக்கு நியாயத்தீர்வு காணத்தவறியமையே இனப் பிணக்குத் தீராத பூசலாக மாறியமைக்கு ஒரே மூல காரணமாகும்.

அந்தப் பிரச்சினையின் விளைவுதான் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய உரிமைப்போராட்டம்.

அந்த ஆயுதப் போராட்டத்தை எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் அரசு தோற்கடித்ததாகவே தமிழர்கள் இன்று வரை கருதுகின்றனர்.

அந்த ஆயுதப்போராட்டத்தில் எண்ணிக்கையில் மிகச் சிறிய - சிறுபான்மையினரான - தமிழர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

அதனால் தமிழர் படை 'பயங்கரவாதிகள்' என்றும், வெற்றி கொண்ட சிங்கள அரசுப் படை 'சுதந்திர வீரர்கள்' என்றும் சுதந்திர தினத்தில் பிரகடனம் செய்வது இணக்கத்தைத் தராது. நல்லிணக்கத்தை - சமரசத்தை - ஏற்படுத்தாது.

தமிழர்களை வெற்றி கொண்ட மமதையில் சிங்களவரும், சிங்களவரிடம் தோற்ற மன ஒடுக்கத்தில் தமிழரும் சமரசம் பேச முடியாது. அது சமரசம் அல்ல. அடக்குமுறையின் கீழ் 'அடங்கிப் போன' அல்லது சிங்களவர்கள் 'அடக்கி நிமிர்ந்த' விவகாரமாகவே அது அமையும்.

வன்மொழியில் பேசிய விடுதலைப் புலிகள் இயக்கம், ஆயுத முனையில் ஒடுக்கப்பட்டமையும் -

மென்மொழியில் பேசும் சம்பந்தன் கூழைக் கும்பிடு போடுபவர் போல, சீறிச் சினக்காமல், வார்த்தைகளில் அடக்கமாகப் பேசுகின்றமையும் -

இனப்பிரச்சினை விவகாரத்தைத் தமிழர் தரப்பை 'அடக்கி வைக்கும்' வகையில் தீர்க்கலாம் என்ற முடிவைத் தென்னிலங்கைக்குத் தந்திருப்பது போலத் தோன்றுகின்றது.

தென்னிலங்கைத் தலைவர்களின் பேச்சும், போக்கும், செயற்பாடும், அறிவிப்புக்களும் இன்று அத்தகைய எண்ணத்தையே தந்து நிற்கின்றன.


இந்த இலங்கைத் தீவைத் தமது தாயகமாகக் கொண்ட ஒரு தொன்மையான இனத்தின் இருப்புக்காகவும், கௌரவமான வாழ்வுக்காகவும், சமத்துவமான உரிமைகளுக்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்து போராடியவர்களை 'பயங்கரவாதி'களாகப் பட்டம் சூட்டி, அவமரியாதை செய்தபடி, இந்தத் தீவில் நல்லிணக்கத்தை - புரிந்துணர்வை - சமரசத் தீர்வை - கண்டுவிட முடியாது.

அதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு பட்டவர்த்தனமாக அறிவிக்கும் தாராளம் தென்னிலங்கைக்கு வரவேண்டும்.

எண்ணிக்கை என்ற கணக்கின் மூலம் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு, ஜனநாயகம், ஆயுத வலிமை ஆகிய இரண்டையும் அதன் மூலம் தனக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டு, தான் திணிக்கும் திட்டத்தை தமிழர்கள் ஏற்பார்கள் என்று தென்னிலங்கை கனவு காண்கின்றது.

அந்த நிலைமை நீடிக்கும் வரை இலங்கை ஆயுதப் படைகளின், வீரர்கள் மட்டுமே 'சுதந்திரப் போராளிகள்.' தமிழர்களின் உரிமைக்காகப் போராடிய தமிழ் மறவர்கள் எல்லோரும் 'பயங்கரவாதிகள்' தாம்.

தமிழ்ப் போராளிகள் அனைவரும் 'பயங்கரவாதிகளாக' சித்திரிக்கப்படும் வரை சுதந்திர தினமும் நமக்குரியதன்று. தென்னிலங்கைக்கு மட்டுமே உரியதாகும் - சம்பந்தன், சுமந்திரன் என்ன சொன்னாலும் கூட!




# கட்டாயத்தின் பேரிலேயே சுதந்திரதினக் கொண்டாட்டம்

## பந்துல குணவர்தன எம்.பி. சுட்டிக்காட்டு

சுதந்திர தினத்தை சந்தோசமாகக் கொண்டாடும் நிலையில் நாட்டில் எவரும் இல்லை. இவ்வாறான நிலையிலேயே கொண்டாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இது கட்டாயத்தின் பேரிலேயே கொண்டாடப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவை நேற்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டின் சுதந்திர தினத்தில் உரிமைகளைக் கோரிய பொது மக்கள், மாணவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் என்று பலரும் சிறையில் வாடும் இந்த நிலையில் சுதந்திர தினத்தை எவ்வாறு கொண்டாட முடியும்.

மேலும் விமல் போன்ற மக்கள் தலைவர்கள் அரசியல் பழிவாங்கல்களின் காரணமாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக போராட்டம் செய்தவர்கள் என்று பலரும் இந்த அரசால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த வருட சுதந்திர தினமானது கொண்டாடும் நிலையில் இல்லை.- என்றார்.

இதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் பந்துல குணவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில்:-

மத்திய வங்கி பிணைமுறிகள் விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேர்மையான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும்.

மத்திய வங்கி பிணைமுறிகள் தொடர்பில் போதுமான விவரங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் காணப்படுகின்றது அதற்கான ஆதாரங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

எனவே ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது அவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதன் மூலம் மோசடி தொடர்பான அனைத்து உண்மைகளும் தெளிவாக புரிய வரும். விசாரணைகள் நேர்மையான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி மிகுந்த அவதானத்துடன் உள்ளது.- என்றார். (ஐ)

# கைதாகும் முன்னாள் போராளிகளுக்கு ஆதரவாக நிச்சயம் குரல் கொடுப்பேன்

## டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.05

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள், கைதுகள் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை. அவர்களுக்கு ஆதரவாக நிச்சயம் குரல் கொடுப்பேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முகநூல் ஊடாக வெளியிட்டுள்ள காணொளி பதிவில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

முன்னாள் போராளிகளுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பேன்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, முன்னாள் போராளிகள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், முன்னாள் போராளிகள் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு இந்தக் கைது நடவடிக்கைகளில் இருந்து தம்மைக் காப்பாற்றுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

அத்துடன், முன்னாள் போராளிகளான தம்மை சந்தோசமாகவும், சுதந்திரமாகவும், வாழ முடியாத நிலைமைகளை உருவாக்கி வருகின்றார்கள் எனவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, அதிலிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு முன்னாள் போராளிகள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிலையில், அவர்களின் கோரிக்கைகளை ஏற்று பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளேன்.

எனவே, முன்னாள் போராளிகள் எவரும் அச்சமடையத் தேவையில்லை. அந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் மூலம் இந்த செய்தி உண்மையா பொய்யா என்பது தெரியவரும்.

இது குறித்து நல்லாட்சி அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று நம்புகின்றேன் எனவே, முன்னாள் போராளிகள் அச்சமடைய தேவையில்லை. உங்களுக்காக நான் குரல் கொடுப்பேன்.- என்று தெரிவித்துள்ளார். (ஐ)

டெங்கு நோய் இறப்புக்களை தடுப்போம்.

* எல்லோரும் ஒன்று கூடுவோம்
நுளம்பு பெருகும் இடங்களை அழிப்போம்
* டெங்கிலிருந்து எம்மையும் எங்கள் குழந்தைகளையும்
காப்பாற்றிக் கொள்வோம்.

"[illegible] காப்போம். வளமாக வாழ்வோம்"

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - யாழ்ப்பாணம்

### நாளை

06.02.2017
திங்கட்கிழமை
நட்சத்திரம் : ரோகிணி பி.ப 3.01 வரை
திதி : தசமி பி.ப 3.37 வரை
சுபநேரம் : 12.35 - 2.05 வரை
இராகுகாலம் : 8.05 - 9.35 வரை

# உரிமைக்காகப் போராடி வரும் மக்களுக்கான நீதி கிடைக்கும் வகையில் செயற்படவேண்டும்

## குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

உரிமைக்காகப் போராடும் மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் அரசு செயற்பட வேண்டும் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு மற்றும் புதுக் குடியிருப்பு மக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் அஹிம்சை வழிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கேப்பாபிலவு மக்களும் புதுக் குடியிருப்பு மக்களும் தமது சொந்தக் காணிகளை மீட்கும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.


இவர்கள் அரச காணியையோ அல்லது சட்ட விரோதமான தாம் பிடித்த காணியையோ கோரவில்லை. ஆண்டாண்டு காலமாகத் தாம் வாழ்ந்த, விவசாயம் செய்த காணிகளையே கோரி நிற்கின்றனர்.

யுத்தத்தின் தாக்கத்துக்கு உள்ளான இந்த மக்கள் தமது ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாது பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் அவர்களது விவசாய பூமியை ஆக்கிரமித்து இராணுவ முகாம் அமைத்துள்ளமை அரசின் நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகாது.

நல்லாட்சி என்ற அர்த்தத்தைத் துவம்சம் செய்யும் செயற்பாடுகளை அரசு உடன் நிறுத்தி, அப்பாவி மக்களின் காணிகளை இராணுவ பிரசன்னத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதுடன் அந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளையும் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஐ.நா. அமர்வுகள் வரும் போது மாத்திரம் ஆங்காங்கே சிறிய நிலப் பரப்புக்களை இராணுவத்திடம் இருந்து விடுவித்து மக்களிடம் கையளித்து விழா கொண்டாடும் அரசு, பொன் விளையும் பூமி என்று தெரிவிக்கப்படும் கேப்பாபிலவு காணிகளையும் புதுக்குடியிருப்பு காணிகளையும் இராணுவப் பிடியில் இருந்து மீட்டு அந்த மக்களிடம் கையளிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே கூட்டமைப்பின் நிலைப்பாடாகும். - எனக் குறிப்பிட்டுள்ளார் என்றுள்ளது. (ஐ-100)

## சில இடங்களில் நாளை மின் தடை



யாழ்ப்பாணம், பெப்.05

கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னாரில் குறிப்பிட்ட சில இடங்களில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6.30 மணிவரை மின் தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிரதேசத்தில் கனகராயன் குளம், மாங்குளம், புளியங்குளம், IRCON ஆகிய இடங்களிலும் -

வவுனியா பிரதேசத்தில் சாந்தசோலைக் கிராமம், நேரியகுளத்தில் இருந்து செட்டிகுளம் வரை, செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம் இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், செட்டிகுளம் ப.நோ.கூ சங்கம் ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் உயிலங்குளத்தில் இருந்து பாப்பாமோட்டை வரை, அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம், பள்ளிமுனை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மணற்காடு றோ.கவுக்கு இரு மாடிக் கட்டடம்

## நாளை திறந்து வைப்பு

மணற்காடு, பெப்.05

மணற்காடு றோ. க. த.க. பாடசாலைக்கு புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வேலாயுதன் சிவஞானசோதி திறந்து வைக்கவுள்ளார்.

நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும். இதற்கான நிதியுதவியை மலேசியாவின் புலம்பெயர் தமிழர் மற்றும் தமிழ்மன்ற அமைப்பு, லண்டன் பண்டிதர் நம்பிக்கை நிதியம், புதுவாழ்வும், புனரமைப்பு அமைப்பு என்பனவும் வழங்கியுள்ளன.

இந்த வைபவத்தில் யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் மருதங்கேணிப்பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், புதுவாழ்வும், புனரமைப்பு அமைப்பின் தலைவர் வே.சர்வேஸ்வரன், மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா, பாடசாலை அதிபர் சோ. வாகீசன், புதுவாழ்வும் புனரமைப்பின் இலங்கைக்கான தலைவர் ஹென்றி அமல்ராஜ் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கட்டடம் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகனின் முயற்சியால் புலம்பெயர் அன்பர்களின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டது. இதற்கான அடிக்கல்லை கடந்த வருடம் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-40)

# கேப்பாபிலவு போராட்டம் நடைபெறும் இடத்துக்கு அமைச்சர் ரிசாத் விஜயம்



முல்லைத்தீவு, பெப்.05

கேப்பாபிலவு பிலவுக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை அமைச்சர் ரிசாத் பதியுதீன், மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட விமானப்படை அதிகாரி ஆகியோர் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த நிலையில் காணி விவகாரம் தொடர்பில் கேப்பாபிலவில் நிலைகொண்டுள்ள விமானப்படையினர் மேலிடத்தின் உத்தரவுக்காக காத்திருப்பதாகவும் உத்தரவு கிடைத்ததும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தம்மிடம் தெரிவித்தனர் என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் மக்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மக்களின் போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் கலந்துரையாடவுள்ளார் என்றும் அமைச்சர் ரிசாட் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார். (ஐ-81)

# டெங்கு பரவும் சூழல் வைத்திருந்த 12 பேருக்கு ரூ.24 ஆயிரம் அபராதம்

டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை வைத்திருந்த 12 பேருக்கு 24 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இணுவில் பகுதியில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த 12 வீட்டு உரிமையாளர்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 24 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிவான் இந்த அபராதத்தை விதித்தார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் மற்றும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது இணுவில் மேற்கு மற்றும் இணுவில் கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் அதிகளவு டெங்கு நுளம்பு பரவக்கூடிய வகையில் ரயர், வெற்றுப் பேணிகள், போத்தல்கள் மற்றும் வாய்க்கால்கள் என்பன அவதானிக்கப்பட்டன.

அவற்றைச் சீர் செய்வதற்குக் கால அவகாசம் வழங்கிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படாமையால், அந்த வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# மன்னாரில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வுகள்







மன்னார், பெப்.05

மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தால் 69 ஆவது ஆண்டு சுதந்திரதினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் பாடசாலைகளின் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் இராணுவ, பொலிஸ், கடற்படை, இளைஞர் படை பணி அணிவகுப்புடன் மன்னார் நகர் நுழைவாயிலான பாலத்தடியிலிருந்து தேசியக் கொடிகளை ஏந்திய வண்ணம் மன்னார் செயலகத்துக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்தின் முற்றவெளியில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இலங்கை சுதந்திரம் பெற்ற தினத்தை மன்னாரில் அணிவகுப்புடன் கொண்டாடப்பட்டது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலக அதிகாரிகள், ஊழியர்கள், பிரதேச செயலாளர்கள், மன்னார் மாவட்ட முப்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-112)

# நாங்கள் சுதந்திரத்தை உணரவில்லை; ஒடுக்குமுறை இன்னும் நீங்கவில்லை!

## சுதந்திர தினத்தை முன்னிட்டு விந்தன் கனகரத்தினம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.05

இலங்கையின் சுதந்திரத்தில் தமிழ் மக்கள் மானசீகமாகப் பங்குபற்றுதலுக்கான உரிய அடிப்படை மாற்றங்கள் எதுவும் நல்லாட்சியிலும் நடைபெற வில்லை. இந்த நிலையிலேயே இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினமும் நடைபெற்றது. நல்லாட்சி புரிவதாகக் கூறிக்கொள்ளும் சிங்களத் தலைமைகளுக்கு வெட்கமாகத் தெரியவில்லையா.?

-இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கேள்வி எழுப்பியுள ளார்.

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை அடுத்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை காலனித்துவத்தில் இருந்து 1948 இல் சுதந்திரம் அடைந்தது. அந்தச் சுதந்திரத்தின் பலனை தமிழ் மக்கள் அனுபவிக்கவில்லை. நேரடியாகவே ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்களால் எமது மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டே வருகின்றனர். இதனை ஆட்சியாளர்களின் தவறாக மட்டும் அர்த்தப்படுத்திவிட முடியாது.

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதக் கருத்தை முன் வைப்பவர்களுக்கே சிங்கள மக்களும் ஆணையை வழங்கி ஆட்சிபீடம் ஏற்றினர். இது வரலாறு. சிங்கள மக்களிடையே இடதுசாரி அரசியலை முன் வைத்து சற்று முற்போக்காகச் சிந்தித்த சிங்களத் தலைவர்கள் கூட காலப் போக்கில் வாக்குப் பெறவேண்டுமானால்-ஆட்சி அதிகாரம் வேண்டுமானால் - தங்களை இனவாதிகளாக மாறிக் கொள்ளவேண்டிய துர்ப் பாக்கியம் சிங்கள இனம் சார்ந்த அரசியலில் காணப்பட் டது.

இவ்வாறான துர்ப்பாக்கியம் மிக்க இன ஒடுக்கு முறைக்கான உள்ளுணர்வுகளை வைத்துக் கொண்டு அந்த உணர்வை நாட்டில் உள்ள ஏனைய இனங் கள்மீது பிரயோகித்துக்கொண்டு நாட்டில் சுதந்திரமும் சுபீட்சமும் நிலவுகின்றன எனக் கூறுவது வெறும் கேலிக்கூத்தாகும். இந்த அடிப்படையில் வெகு விமர்சையாக சுதந்திரதினத் தைக் கொண்டாடுவது என்பது தர்மத்துக்கு ஒவ்வாததாகும்.

தமிழ் மக்கள் தமக்கான அரசியல்தீர்வு மற்றும் மனித உரிமைகள்நிலைநிறுத்தப்படும் வரையில் சுதந்திர தினத்தைக் கருத்தில்கொள்ளவில்லை. மாறாகத் தமது துன்பத்தில் இன்னொரு தரப்பு மகிழ்ச்சி ஆரவாரம் புரிவதாகவே சுதந்திர தின நடத்தைகளைப் பார்க்கின் றனர்.

அரச அலுவலகங்களில் கூட தமிழர்கள் சுதந்திர தினத்தை மானசீகமாகக் கொண்டாட வில்லை. சுற்று நிருபங்களின் கோரிக்கைக்கும் உயர் அழுத் தங்களுக்குமாகக் கடமை நிறை வேற்று நிகழ்வாகவே ஏற்றுக் கொள்கின்றனர். இதனை வைத்துக்கொண்டு இனங்க ளின் சகவாழ்வுடன் சுதந்திர தினம் கொண்டாடப்படுவதாக யாராவது அர்த்தப்படுத்த முயற் சித்தால் அது கூட சுதந்திரத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் பெரிய அடக்கு முறை ஆகும்.

தமிழ்மக்களுக்கானநிலைத்த அரசியல் தீர்வென்றை அரசு இன்னும் முன்வைக்க வில்லை. என்றைக்குத் தமிழ் பேசும் மக்க ளுக்குஎதிரானஒடுக்குமுறைகள் சகலதையும் அதிகாரத்தில் உள் ளவர்கள் மேற்கொள்ளாது சரியான ஓர் அரசியல் தீர்வை முன்வைப்பார்களோ அதன் பின் கொண்டாடப்படும் சுதந்திர தினமே, சுதந்திர தின மாகும். – என்றுள்ளது.

(ஐ-8)

## மெய்வன்மைப் போட்டி

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கும்பான் விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.நித்தி யானந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஆஸ்தி ரேலிய பல்கலைக்கழக பொறி யியல்துறை விரிவுரையாளர் ச.கணபதிப்பிள்ளை கலந்து கொள்வர். (ச)

***

வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்குபாடசாலைமைதானத் தில் அதிபர்.சி.நவநீதன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி வ.நடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய முன்னாள் அதிபர் வை.விஜயகுமாரனும், தென்மராட்சி பனைதென்னை வளஅபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர் க.அருட்செல்வனும் கலந்து கொள்வர். (ச)

***

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இல்லங்களுக் கிடையிலான வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.கே.எழில் வேந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய் வேந்திரராஜா கலந்து கொள்ள வுள்ளார். பரிசில்களை திருமதி பாமா தெய்வேந்திரராஜா வழங்கவுள்ளார். (ஐ-54)

***

வடமராட்சி கிழக்குமணற் காடு றோ.க.த.க.பாடசாலை யின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு விளையாட்டு மைதானத்தில் அதிபர் சோ. வாகீசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.புஷ்பலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக மணற்காடு பங்குத்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் டியூக்வின் சன்ற் மற்றும் மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராஜா ஆகியோரும் கலந்து கொள்வார். (ஐ - 40)



*இளவாலை பொலிஸ் நிலையத்தின் வருடாந்த அணிவகுப்பு மரியாதை கடந்த வியாழக்கிழமை பொலிஸ் நிலைய மைதானத்தில் இடம்பெற்றது. காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். ஆர். ரஞ்ஜித் மாசிங்க அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (ஐ-9)*

## பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமை யாளர் கூட்டுறவுச்சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் சங்கத் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் நடை பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தி னராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்வார்.

***

வரணி கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் பாட சாலை அதிபர் க.இளங்கோவன் தலை மையில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

***

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9. மணிக்கு அதிபர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடை பெறும். (இ)

# போலி நாணயத்தாள்களை அச்சிட்ட சந்தேக நபர்களுக்கு பிணை நிராகரிப்பு

வடமராட்சி, பெப்.05

வடமராட்சிப் பகுதியில் போலி நாணயத்தாள்களை அச்சிட்டு அதனைப் புழக்கத் தில் விட்டன எனத் தெரிவித்து நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந் தவர்களின் பிணை மனு நிரா கரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதியரசர் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி உடுப்பிட்டி வன்னிச்சை அம் மன் கோவிலடிப் பகுதியில் போலி நாணயத்தாள்களை அச்சிட்டனர் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்ட ஐவரும், மறுநாள் பொலிஸில் சரண டைந்த ஒருவருமாக ஆறுபேர் நேற்றுமுன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் அவர்கள் முற்ப டுத்தப்பட்ட போது அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தர ணிகள் பிணை விண்ணப்பத் தைக் கோரிய போதும் பொலி ஸாரின் ஆட்சேபனையை அடுத்து பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

(ஐ-40)

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், பெப்.05

யாழ்.மாநகர சபை எல் லைக்குள் அமைந்த நல்லூர்ப் பொதுச் சுகாதாரப் பிரிவுக் குட்பட்ட வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) போடப் பட்டு வருகிறது.

அந்த வரிசையில் திங்கட் கிழமை ஏ.ஆர்.வி தடுப்பூசி போடப்படும் இடங்கள் வருமாறு-

★ பழம் வீதி, ஞானசோதி சனசமூக நிலையத்தில் காலை 9 மணிமுதல் 11 மணிவரை.

★ சிவன் புது வீதியில், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை.

★ மணல்தறை லேனில், பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4 மணி வரை.

**நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை**

★ ஜமுனா வீதி சு.க. மையம், காலை 9 மணி முதல்முற்பகல் 11 மணிவரை.

★ சங்கிலியன் மன்றம், பருத்தித்துறை வீதியில், முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை.

★ செட்டியார் தோட்டம் பகுதியில், பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 4 மணி வரை. (இ)

# இலங்கைக்கான இந்தியத் தூதுவருடன் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பேச்சு!



கொழும்பு, பெப்.05

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அண்மையில் பதவியேற்ற தரன்ஜித் சிங் சந்து, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை முதல் முறையாகச் சந்தித்து, இரு தரப்பு சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் விரைவாக கையெழுத்திடுவது குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து இந்தியத் தூதுவர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் முன்மொழியப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்பாடு கையெழுத்திடப்படும் போது, தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்த முடியும்.

இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது, இரண்டு நாடுகளுக்கும் மிகவும் முக்கியமானது. சுதந்திர வர்த்தக உடன்பாட்டை தாமதமின்றி கையெழுத்திட முடியும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது. முன்மொழியப்பட்டுள்ள இந்த சுதந்திர வர்த்தக உடன்பாடு, இலங்கைக்கு பல்வேறு முன்னுரிமைகளை கொடுக்கும்.

இலங்கை தனது பொருளாதாரத்தை முன்னேற்ற பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது.

இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளுக்கு உதவ, இந்தியா தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# ஜெனிவாவில் சிறப்பு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது இலங்கை!



கொழும்பு, பெப்.05

இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் சிறப்பு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

ஜெனிவாவில் எதிர்வரும் 27ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடர், ஆரம்பமாகவுள்ளது.

இதில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தச் சிறப்பு அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில், இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விரிவான தகவல்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

இந்த அறிக்கை சமர்ப் பிக்கப்பட்ட பின்னர், எதிர்காலத்தில் இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்களைக் குறைக்க முடியும் என்று நம்புவதாகவும் வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை, ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர காலஅவகாசம் கோருவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# புலம்பெயர் தமிழர்களின் பணத்திற்காக புதிய அரசமைப்பு உருவாக்கப்படவில்லை!

*சஜித் பிரேமதாச கூறுகிறார்*



கொழும்பு, பெப்.05

புலம்பெயர் தமிழர்களின் பணத்திற்காக புதிய அரசமைப்பு உருவாக்கப்படவில்லை என்று வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட வெலிவெவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய அரசாங்கம் புலம்பெயர் மக்களின் பணத்தைக் கொண்டு வாழ்ந்து வருகின்றது என்றும், அவர்களின் தேவைக்காக புதிய அரசமைப்பை உருவாக்கின் வருகின்றது என்றும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

பௌத்த மதத்திற்கான முன்னுரிமையை இல்லாமல் செய்யவோ, நாட்டின் ஐக்கியத்திற்கு குந்தகம் ஏற்படுத்தவோ எவ்வித அவசியமும் கிடையாது.

பௌத்த மதத்திற்கு உச்சளவு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லாட்சி அரசாங்கத்துடன் கடும் கோபம் கொண்டுள்ள புலம்பெயர் சமூகத்துடன் இணைந்து அரசமைப்பு திருத்தங்கள் செய்யப்படமாட்டா.

ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கில் மட்டுமே அரசமைப்பு திருத்தி அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் மைதான நிர்மாணப் பணிகளின் போதும் பெரியளவில் மோசடி இடம் பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் சிறைச்சாலைகளிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கவேண்டும்!

*நரேந்திர மோடிக்குத் தமிழக முதலமைச்சர் மீண்டும் கடிதம்*

சென்னை, பெப்.05

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 25 தமிழக மீனவர்களையும், 119 படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழக முதலமைச்சர் மீண்டும் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் மற்றொரு நிகழ்வை இந்தக் கடிதம் மூலம் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாபட்டினம் மீன்பிடித் தளத்தில் இருந்து யந்திரப்படகில் மீன்பிடிக்கச் சென்ற 5 தமிழக மீனவர்களைக் கடந்த 2 ஆம் திகதி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களை காங்கேசன்துறைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.



பாக்கு நீரிணைப் பகுதியில் ஆண்டாண்டு காலமாக எங்கள் மீனவர்கள் அனுபவித்துவந்த வரலாற்றுப்பூர்வமான உரிமையில் இலங்கையின் அரச அதிகாரிகள் தலையிடுகின்றமை தொடர்ந்தும் இடம் பெறுகிறது.

இலங்கை அரசின் பிடியில், தற்போது 119 படகுகள் உள்ளன. அவை ஆபத்தான சூழ்நிலையில் இலங்கை கடற்கரைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இலங்கை அரசு அதிகாரிகளிடம், மத்திய அரசு கொண்டு சென்று, சேதமடையக்கூடிய சூழலில் உள்ள அந்தப் படகுகள் அனைத்தையும் உடனடியாக விடுவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

அத்தோடு, இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 25 தமிழக மீனவர்களையும், பிடித்து வைக்கப்பட்டுள்ள 119 படகுகளையும் விடுவிப்பதற்கு, இலங்கை அரசிடம் எடுத்துரைக்கும்படி நீங்கள் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனிமைப்படப் போகிறார் மஹிந்த ராஜபக்ஷ!

*அமைச்சர் மஹிந்த அமரவீர எச்சரிக்கை விடுக்கிறார்*

கொழும்பு, பெப்.05

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிரந்தரமாக தனிமைப்பட நேரிடும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிளவடைந்து தனித்து போட்டியிட மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தால் அவர் நிரந்தரமாக அரசியலில் தனிமைப்பட நேரிடும். இது ஓர் எதிர்வு கூறலாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்து தனித்து அரசியல் பயணங்களை ஆரம்பித்த எவரும் வெற்றியடையவில்லை.

அனுர பண்டாரநாயக்க, மைத்திரிபால சேனாநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க போன்றவர்கள் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி மீளவும் கட்சியில் இணைந்து கொண்டனர்.

சுதந்திரக் கட்சியை விட்டு விலகிச் சென்றால் எதிர்காலம் கிடையாது என்பதனை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

கட்சியை ஒற்றுமைப் படுத்த நாம் எடுத்து வரும் முயற்சிகளைச் சிலர் பிழையாக விளங்கிக் கொண்டு செயற்பட்டால் அது ஓர் இழிவான செயற்பாடாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்ய இடமளிக்க முடியாது.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆயத்தமான நிலையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

துர்முகிவருஷம் 2017ம் ஆண்டு தைத் திங்கள் 23ம் நாள் ஞாயிற்றுக்கிழமை

துவிதியை: நவமி மாலை 6.30 வரை. பின்தசமி கார்த்திகை மாலை 5.07 வரை. பின்ரோகினி. சித்தயோகம் முழுவதும்.

ராகுகாலம்- மாலை 4.47 -6.15 வரை. சுபநேரம்- பகல் 9.34 - 11.04 வரை. திவசம் செய்ய வேண்டிய திதி : தைமாத வளர்பிறை நவமி.

சந்திராட்டம நாள்: சித்திரை 3,4, ஆம் கால் சுவாதி. விசாகம் 1,2,3 ஆம் கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இத் தினத்தில் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ. சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.



**மேடம் :** இவ்வாரம் நன்மையான வாரம். எண்ணியவை நிறைவேறும். சிலருக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். சிலருக்கு சுயதொழில் வாய்ப்புகள் அமையும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் அமையும். கொடுக்கல், வாங்கலில் சுமுகநிலை உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும்.



**இடபம் :** இவ்வாரம் இனிமையான வாரம். செய்யும் தொழில் முன்னேற்றம் அடையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுடன் வசதியான இடமாற்றமும் கிடைக்கும். சிலருக்குத் திருமண வாய்ப்புகள் கனிந்து வரும். சிலர் குடும்ப நண்பர்களுடன் சேர்ந்து சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வார்கள். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் திருப்தியாக நடக்கும்.



**மிதுனம் :** இவ்வாரம் யோசனையான வாரம். தொழில் செய்யும் இடங்களில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமையும் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகரிக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். கொடுக்கல், வாங்கல்களில் சிக்கல்கள் உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள்.



**கடகம்:** இவ்வாரம் சுபீட்சமான வாரம். எதிர்பார்த்த வெளிநாட்டுச் செய்திகள் நற்பயனைத்தரும். தடைப்பட்ட திருமண காரியம் சுபமாய் ஒப்பேறும். ஆடை, அணிகலன்கள் வந்து சேரும். தாயார் வழிச் சொத்துகள் சேரும். மாணவர்கள் சிலர் உயர்கல்வி நிமித்தம் வெளிநாடு செல்ல ஆயத்தமாவார்கள். கொடுக்கல், வாங்கலில் இணக்கம் உண்டாகும்.



**சிங்கம் :** இவ்வாரம் மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தொழிலில் அலைச்சல்களால் உடலும், மனமும் சோர்வடையும். அடுத்தவர்களின் விவகாரங்களில் கூடியவரை தலையிடாமல் இருப்பது நன்மை தரும். நண்பர்கள், உறவினர்கள் உதவியாக இருப்பார்கள். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் தாமதமாகும்.



**கன்னி :** இவ்வாரம் யோகமான பலன்கள் காணப்படுகின்றன. புதிய தொழில்வாய்ப்புகள் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் கிடைத்து மனமகிழ்ச்சி அடைவார்கள். திருமணயோகம் உண்டாகும். பூர்வீக சொத்துக்களால் வருமானம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். கொடுக்கல், வாங்கல்களில் திருப்தி உண்டாகும்.



**துலாம் :** இவ்வாரம் கவலையான வாரம். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறுவது கடினம். மனதில் இனம் தெரியாத கவலைகள் உண்டாகும். உத்தியோகத்தில் சிறுசிறு இடர்பாடுகளைச் சமாளிக்க வேண்டி இருக்கும்.



**விருச்சிகம் :** இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகள் தடைப்படும். செய்யும் தொழில்களில் குறைபாடுகள் ஏற்படும். கொடுக்கல், வாங்கல்களைத் தவிர்ப்பது நல்லது. பயணங்களின் போது உடைமைகளில் கவனம் தேவை.



**தனுசு :** இவ்வாரம் ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. எதிரிகளை வெற்றி கொள்ளும் ஆற்றலும் ஏற்படும். வெளியூரில் பணியாற்றிவர்கள் சொந்த ஊருக்கு வரும் சூழ்நிலை உண்டாகும். செய்யும் தொழிலில் விருத்தி உண்டாகும். சிலருக்கு அதிக வருமானமுள்ள புதுவேலை கிடைக்கும். கொடுக்கல், வாங்கல்களில் புத்துணர்வு அதிகரிக்கும்.



**மகரம் :** இவ்வாரம் அனுகூலமான வாரம். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்வார்கள். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். தொழில் வளம் சிறப்படையும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பன கிடைக்கும். திருமண காரியங்கள் அனுகூலமாகும்.



**கும்பம் :** இவ்வாரம் அலைச்சல் மிகுந்த வாரம். வாழ்க்கைச்செலவைச் சமாளிக்க முடியாமல் கடன் வாங்க அலைவார்கள். சிலர் வாடகை வீடு தேடி அலைந்து திரிவார்கள். வியாபாரிகள் வெளிநாட்டு வியாபார ஒப்பந்தத்துக்காக அலைந்து திரிவார்கள்.



**மீனம்:** இவ்வாரம் விருத்தியான வாரம். எண்ணிய கருமம் நிறைவேறும். இதுவரை நோய் வாய்ப்பட்டிருந்தவர்கள் நோய் நீங்கி, ஆரோக்கியமடைவார்கள். சுயதொழில் விருத்தியடையும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத வகையில் உயர்ச்சிகள் கிடைக்கும்.

# மக்களது உரிமைகளில் ஒன்று தகவல் அறியும் உரிமை...

ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களில் தகவல் அறியும் சட்டம் இலங்கை மக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு சட்டமாகும்.

மக்கள் நலன் சார்ந்த பல சட்டங்கள் நாடாளுமன்றத்தின் ஊடாக உருவாக்கப்படுகின்ற போதும் அது தொடர்பான விழிப்புணர்வு அற்ற அல்லது தெளிவில்லாத தன்மை பெரும்பாலான மக்களிடம் காணப்படுகின்றது.

அதேபோல் புதிதாகக் கொண்டுவரப்படும் தகவல் அறியும் சட்டம் தொடர்பிலும் மக்களிடம் தெளிவில்லாத நிலைப்பாடு காணப்படுகின்றது.

தகவலுக்கான உரிமை அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதும் நாடாளுமன்றத்தில் தகவலுக்கான உரிமை தொடர்பான சட்டமொன்றை நிறைவேற்றிய பின்னரே அதனை நடைமுறைக்குக் கொண்டுவர முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை 1996 ஆம் ஆண்டு முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் அறியும் கோரிக்கை 2001 ஆம் ஆண்டு சட்டமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை. அதன் பின் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படாத நிலையே இருந்துவந்தது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் மீண்டும் அது தொடர்பான கவனம் ஏற்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டு 2015 டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டது.

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தத் தகவல் பெறும் உரிமைச் சட்டம் நேற்று முன்தினம் 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

தகவல் உரிமைச் சட்டம் ஊடகவியலாளருக்கு நன்மை பயக்கும் ஒரு சட்டம் எனப் பலரும் கருதினாலும் உண்மையில் அது பொது மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய ஒரு சட்டமாகும்.

சிவில் உரிமையின் கீழ் ஒவ்வொருவரும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை இருக்கின்றது. அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே இது உள்ளது.

மேலைத்தேச நாடுகள் பலவற்றில் இது நடைமுறையில் உள்ளது. இலங்கைக்கு அருகில் உள்ள இந்தியாவிலும் இது நடைமுறையில் உள்ளது.

இந்தியாவில் இந்தச் சட்டத்தின் மூலமே இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் ஒருவரான நேதாஜி மரணமடைந்தமை, கச்சதீவு ஒப்பந்தம் பற்றிய தகவல்களுக்கு விளக்கம் கோரப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் தகவல் பெறும் சட்டமென்பது ஒவ்வொருவரும் அரச திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு வாய்ப்பைக் கொடுக்கின்றது.

எனினும், இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதுதான் அதில் உள்ள கட்டுப்பாடுகள் தொடர்பாகத் தெளிவாக அறியமுடியும்.

ஆனால், தகவல் அறியும் சட்டத்தின் மூலம் ஒரு சமூகம் சார்ந்த அல்லது மக்கள் கூட்டம் சார்ந்த பிரச்சினைகளை அறியுமிடத்து அதற்கு எதிராகப் பொது நல வழக்குகள் போடக் கூடிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அதன் மூலம் இச் சட்டத்தைப் பயனுள்ளதாக்க முடியும். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய விதி முறைகள், ஒழுங்குச் செயற்பாடுகள் என்பன இன்னும் முறையாக ஏற்படுத்தப்படவில்லை.

திணைக்களங்களுக்குத் தகவல் வழங்கும் உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது இன்னும் முழுமை பெறவில்லை. இதனால் இந்தச் சட்டம் எவ்வாறு செயற்பட போகின்றது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் ஒரு தனிநபருக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய அந்தரங்கத் தன்மையைப் பாதிக்கக் கூடிய தகவல்கள், அரசின் பாதுகாப்பு மற்றும் ஆட்புல இறைமையை பாதிக்கக் கூடிய தகவல்கள், சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் வெளிப்படுத்த இயலாத தகவல்கள், தனிப்பட்ட வைத்திய அறிக்கை, சட்ட மா அதிபரின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள், நீதிமன்றம்- நாடாளுமன்றத்தை அவமதிப்பதாக உள்ள தகவல், வெளிப்படுத்துவதால் குற்றத்தைத் தடுப்பதற்குத் தடையாக உள்ள தகவல் என்று சில தகவல்களை இதன் மூலம் பெற முடியாது.

பொது மக்களுக்கு நன்மை தரக்கூடிய தகவல்களை வழங்குவதே இதன் நோக்கம் என்று கூறப்பட்டுள்ள போதும் மேற்கண்ட விடயங்களின் கீழ் சில தகவல்களை மறைத்துப் பொதுமக்கள் நலன்சார்ந்த சில தகவல்களைப் பெற முடியாத நிலையையும் இது உருவாக்கக்கூடும் என்று அவதானிகள் கூறியுள்ளனர்.

பொதுமக்கள் தகவல்களைப் பெறுவதற்கு விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து வழங்கினால் குறைந்த பட்சம் 15 நாள்களுக்குள் அதற்கான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறான நடைமுறையே இந்தியாவில் உள்ள போதும் இலங்கையில் அது நடைமுறைக்கு வந்த பின்னரே இது தொடர்பில் கூறமுடியும்.

அரச திணைக்களம் மற்றும் அதிகார சபையிடம் தகவல்களைக் கோருமிடத்து அதற்குரிய உத்தியோகத்தரிடம் இருந்து பதில் கிடைக்காவிடின் மேன்முறையீட்டு உத்தியோகத்தர் அல்லது தகவல் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகளும் இந்தச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது.

தகவல்களை வழங்க மறுக்கும் அதிகாரி அல்லது உத்தியோகத்தர் ஆணைக்குழு முன் அழைக்கப்பட்டு விளக்கம் கோருவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் அதிகாரிகள் அல்லது உத்தியோகத்தர்களுக்குச் சுமையைக் கொடுத்திருப்பினும் பொறுப்புக்கூறும் பண்பாட்டை பேணி வளர்த்து அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்து நிற்றல் மற்றும் நல்லாட்சியை மேம்படுத்த இது உதவுகின்றது.

தகவல் பெறும் உரிமை என்பது பொதுமக்களுக்கு கிடைக்க கூடிய ஓர் உரிமையாகும்.

இதனை பொதுமக்கள், பொது மக்கள் நலன்சார்ந்து செயற்படுபவர்கள் நல்ல நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதன் ஊடாக மேலும் பல தகவல்களைப் பெறக் கூடியதும் அதனை பயனுள்ள ஒரு சட்டமாகத் தொடர்ந்தும் அரசால் மாற்றியமைக்கக் கூடியதுமான சந்தர்ப்பத்தைப் உருவாக்க முடியும்.

மாறாக இந்தச் சட்டத்தைத் தவறான நோக்கத்துக்காகவும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் பயன்படுத்தப்படுமிடத்து அதில் சில கூடிவாளங்கள் பூட்டப்படவே வாய்ப்புள்ளது. இந்த உரிமை தொடர்பில் மக்கள் தெளிவுபட வேண்டியமை அவசியமே.





# பீட்சாவை திருமணம் செய்த பெண்

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் பீட்சா உணவு அதிகம் பிடிக்கும் என்பதால் அதனை திருமணம் செய்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் பீட்சா உணவு அதிகம் பிடிக்கும் என்பதால் அதனைத் திருமணம் செய்துள்ளமை விநோதத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாநிலத்தில் உள்ள பால்டிமோர் நகரைச் சேர்ந்தவர் கிறிஸ்டின் வாக்னர்(வயது 18).

பீட்சாவை அதிகம் விரும்பிச் சாப்பிடும் இவர், அதனை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளார். அதன்படி தனது பாட்டியின் திருமண ஆடையை எடுத்து உடுத்திக்கொண்டு, பீட்சாவுக்கும் டை கட்டி மாப்பிள்ளை போன்று அலங்கரித்துள்ளார்.

அதன் பின்னர் பீட்சாவு டன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை பேஸ்புக்கில் பதிவேற்றி, எனக்குத் திருமணம் நடந்துவிட்டது. ஆண்களே என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறியுள்ளார்.

இதனைப் பார்த்த புகைப்படக் கலைஞர் மார்சி ஹாரிஸ், கிறிஸ்டினாவின் பண்ணை வீட்டில் வைத்துப் போட்டோஷீட் ஒன்றையும் நடத்தியுள்ளார்.

இந்தப் புகைப்படங்கள் இணையத்தளங்களில் பரவி வருகின்றன.

# அதி நவீன சொகுசு பஸ்

வரவேற்பு அறை, சமையலறை, படுக்கையறை, குளியலறை, வெந்நீர் நீச்சல் குளம் மற்றும் ஹெலி வசதியுடன் அதிநவீன சொகுசு பஸ் தொடர்பான காணொலிக் காட்சிகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் உள்ள லொஸ் வேகாஸ் நகரில் அண்மையில் புதியரக மின்னணுப் பொருள்கள் மற்றும் வாகனங்களை அறிமுகப்படுத்தும் கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் இடம்பெற்ற அகஸ்டா நிறுவனத்தின் புதிய தயாரிப்பான 'ஆர்.வி.' என்னும் அதிநவீன வசதிகளுடன் கூடிய சொகுசு பஸ் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

ரதம் போன்ற வடிவமைப்புடன் காட்சி அளிக்கும் இந்தப் பஸ்ஸுக்குள் வரவேற்பு அறை, சமையலறை, படுக்கையறை, குளியலறை உள்ளிட்ட ஒரு சொகுசு பங்களாவுக்குத் தேவையான அனைத்து வசதிகளும், மிகச்சிறிய இடத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், பஸ்ஸின் மேல்தளத்தில் வெந்நீர் வசதியுடன் கூடிய நீச்சல் குளம் மற்றும் ஹெலி நிறுத்தும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த ஹெலியை கூடுதலாகப் படுக்கை அறையாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஸ்பெயினிலும் இப்படியும் ஓர் உணவகம்

ஸ்பெயினில் வாடிக்கை யாளர்களைக் கவர வேண்டும் என்பதற்காக முதன் முறையாக நிர்வாண உணவகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந்த உணவகத்துக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் நிர்வாண முறையில் உணவு சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி இந்த உணவகத்தின் சிறப்பு மெனுவாக aphrodisiac என்ற மெனு கார்ட் ஒன்று உள்ளதாகவும் அதன் சிறப்பம்சமே வேறு மாதிரி இருக்கும் என்று கூறப்படுகிறது. சாப்பிட வரும் வாடிக்கையாளர்களுக்கு நிர்வாண முறையில் பணிப் பெண்கள் மற்றும் ஆண்கள் பரிமாறுவார்கள் என்று கூறப்படுகிறது.

மேலும் ஒருவர் இந்த உணவகத்தில் சாப்பிடுவ தற்கு 150 யூரோ செலவாகும் என்று கூறப்படுகிறது. இதில் சிறப்பம்ச உணவுகளாகக் கடல் நண்டு, மாம்பழம், ஆக்டோபஸ், உருளைக் கிழங்கு மற்றும் பிராந்தி போன்றவைகளும் அடங்கும் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பில் உணவகத்தின் உரிமையாளர் கூறுகையில், இது ஆரம்பிப்பதற்கு காரணமே லண்டன் நகரத்தில் உள்ள The Bunyadi உணவகம் தான் என்று கூறியுள்ளார்.



# மணி பிளான்டை எந்தத் திசையில் வளர்க்க வேண்டும் தெரியுமா?

மணி பிளான்ட் செடியை வளர்ப்பதால் வீட்டில் செல்வம் பெருகும், கடன் தொல்லை தீரும் என்ற நம்பிக்கை எமது மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. இதை வீட்டில் வளர்த்தாலே பணம் பெருகும் என்று சிலர் நினைப்பது உண்டு. ஆனால், இந்தச் செடியை எப்படி வளர்க்க வேண்டும் என்று பலருக்கும் தெரிவதில்லை.

மணி பிளான்ட்டை வீட்டில் வளர்க்க விரும்புவோர் அதைச் சரியான திசையில் வளர்க்க வேண்டும்.

மணி பிளான்ட்டை தென்கிழக்குத் திசை நோக்கி தான் வளர்க்க வேண்டும் என்று வாஸ்து நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தென்கிழக்குத் திசையில் தான் அதிகம் நேர்மறையான ஆற்றல் கிடைக்கிறது என்பதால், இந்தத் திசையில் தான் மணி பிளான்ட் நன்கு வளரும் மற்றும் இதனால் செல்வம் பெருகும் யோகம் பெற முடியும் என்று வாஸ்து நிபுணர்கள் கூறுகிறார்கள்.

தென்கிழக்குத் திசை விநாயகருக்கு உகந்த திசையாகும். மற்றும் இது சுக்கிரனைப் பிரதிநிதித்துவம் செய்யும்திசைஎன்று கூறப்படுகிறது. இதன் காரணங்களுக்காக தான் மணி பிளான்ட்டை தென் கிழக்குத் திசையில் வைக்கச் சொல்லி கூறுகிறார்கள்.

தென்கிழக்குத் திசையில் மணி பிளான்ட்டை வைப்பதால், விநாயகர் தீயதை நீக்குகிறார் என்றும், சுக்கிரன் செல்வம் பெருகச் செய்கிறார் என்ற நம்பிக்கை நிலவுகிறது என்று வாஸ்து நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எந்தக் காரணம் கொண்டும் மணி பிளான்ட்டை வடகிழக்குத் திசையில் வைக்கக் கூடாது. ஏனெனில் இது எதிர்வினையை அதிகரிக்கும் திசை என்று கூறுகிறார்கள். வடகிழக்கு குருவின் திசையைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

சுக்கிரனும், குருவும் எதிரிகளாகக் கருதப்படுகிறார்கள். இந்தத் திசையில் வைத்தால் நஷ்டம் ஏற்படும் என்று வாஸ்து நிபுணர்கள் கூறுகிறார்கள்.



தென்கிழக்குத் திசையில் மணி பிளான்ட்டை வைப்பதால், விநாயகர் தீயதை நீக்குகிறார் என்றும், சுக்கிரன் செல்வம் பெருகச் செய்கிறார் என்ற நம்பிக்கை நிலவுகிறது.




பொன்.வேணு கிருஷ்ணா

### அமெரிக்க தடை ஐ.நா ஆதரவு பெற்ற ஒப்பந்தத்துக்கு எதிரானது - ஈரான் கண்டனம்

அமெரிக்கா விதித்துள்ள புதிய தடை நடவடிக்கைகளை கண்டித்துள்ளதோடு, இதற்கு பதிலடி நடவடிக்கையை தானும் எடுக்கப் போவதாக ஈரான் உறுதி அளித்திருக்கிறது.


File photo from December 2016, provided by an Iranian news agency, of a missile being fired

ஞாயிற்றுக்கிழமை(29.01.2017) ஈரான் மேற்கொண்ட பேலிஸ்டிக் ஏவுகணை சோதனைக்கும், பயங்கரவாதத்துக்கு தெஹ்ரான் தொடர்ந்து அளிக்கும் ஆதரவு என்று அமெரிக்கா விவரித்திருக்கும் நடவடிக்கைக்கும் பதில்டியாக இந்த தடைகளை விதித்திருப்பதாக அமெரிக்கா கூறுகிறது.

http://www.bbc.com/
US sanctions Iran after missile test
Donald Trump's administration has imposed sanctions on Iran following its recent ballistic missile test. The sanctions target 13 people and 12 companies, including groups in China, Lebanon and the United Arab Emirates. President Trump tweeted earlier: "Iran is playing with fire - they don't appreciate how 'kind' President Obama was to them. Not me!" Iran called the threats from "an inexperienced person" useless, vowing to impose reciprocal measures. John Smith, the US Treasury Department's acting sanctions chief, said in a statement on Friday: "Iran's continued support for terrorism and development of its ballistic missile programme poses a threat to the region, to our partners worldwide and to the United States."


அதிபர் ஒபாமாவின் நிர்வாகம் ஈரான் நாட்டிடம் எவ்வளவு அன்பாக இருந்தது என்பதை அவர்கள் உணரவில்லை: ஜாவாத் ஸரீஃப்

நெருப்புடன் ஈரானியர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று முன்னர் ட்ரம்ப் கூறியிருந்தார்.

அதற்கு பதில் கூறியுள்ள ஜாவாத் ஸரீஃப் , அதிபர் ஒபாமாவின் நிர்வாகம் ஈரான் நாட்டிடம் எவ்வளவு அன்பாக இருந்தது என்பதை அவர்கள் உணரவில்லை என்று கூறியுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஈரானின் நடத்தையை மாற்றுகின்ற புதிய உத்தியை செயல்படுத்தும் நேரம் வந்துவிட்டது என்று சவுதி அரேபிய இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்திருக்கிறார்.



### அமெரிக்காவின் அச்சுறுத்தல்களை பற்றி கவலையில்லை : ஈரான் பதிலடி


அமெரிக்காவின் அச்சுறுத்தல்களை பற்றி கவலையில்லை என்றும், ஆனால் தான் ஒரு போரை முதலில் தொடங்கப் போவதில்லை என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

அதிபர் ஒபாமாவின் நிர்வாகம் ஈரான் நாட்டிடம் எவ்வளவு அன்பாக இருந்தது என்பதை அவர்கள் உணரவில்லை : ஜாவாத் ஸரீஃப்

அதிபர் ட்ரம்ப் ட்விட்டரில் தெரிவித்திருந்த கருத்துக்கு பதிலளிக்கும் விதமாக ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜாவாத் ஸரீஃப் டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார்.



### ட்ரம்ப் கொள்கை எதிர்ப்பாளர்களுக்கு ஐ.நாவுக்கான புதிய அமெரிக்க தூதர் எச்சரிக்கை விடுப்பு


Donald J. Trump
@realDonaldTrump
Follow
Iran is playing with fire - they don't appreciate how "kind" President Obama was to them. Not me!
RETWEETS 39,491 LIKES 126,560

ஐக்கிய நாடுகள் சபைக்கான புதிய அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டவர், நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் தன் முதல் நாள் உரையின் போது அதிபர் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிராக செயல்படுவோருக்கு எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.


தன்னுடைய அணியானது அமெரிக்க கூட்டணி நாடுகளை ஆதரிக்கும் என்றும், அமெரிக்காவுக்கு அவர்கள் அதே ஆதரவை திருப்பி வழங்குவதை உறுதிப்படுத்துவோம் : நிக்கி ஹலே

செய்தியாளர்களிடம் பேசிய தூதுவர் நிக்கிஹலே, தன்னுடைய அணியானது அமெரிக்க கூட்டணி நாடுகளை ஆதரிக்கும் என்றும், அமெரிக்காவுக்கு அவர்கள் அதே ஆதரவை திருப்பி வழங்குவதை உறுதிப்படுத்துவோம் என்றும் கூறியுள்ளார்.

மேலும், எங்களுடைய ஆதரவு இல்லாத நாடுகளின் பெயர்களை நாங்கள் வெளியிட்டு வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகமானது ஐ.நா.வின் செயல்பாடுகளை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடும் என்று தெரிவித்துள்ளார்.

### நாடு கடத்தல் தொடர்பாக ட்ரம்ப் விதித்த ஆணைக்கு நீதிமன்றம் தற்காலிகத் தடை



இது தொடர்பாக ட்ரம்ப் கையெழுத்திட்ட ஆணையின் விளை வாக கைது செய்யப்பட்ட யாரையும் நாடு கடத்தக் கூடாது என்று தற்காலிகத் தடை விதித்து நியூயோர்க்கில் உள்ள ஒரு மத்திய நீதிமன்ற நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

இந்தத் தீர்ப்பு அமெரிக்க ஜனநாயகத்துக்கு அரணாக நீதிமன்றங்கள் உள்ளன என்பதை நிரூபிப்பதாக அமெரிக்க சிவில் உரிமைகளுக்கான ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா எங்கும் உள்ள விமான நிலையங்களில் இந்த தடை உத்தரவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

முன்னதாக, இந்த புதிய சட்ட விதிகள் மிகவும் நன்றாக அமுல்படுத்தப் படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

### வலிமையான அமெரிக்க எல்லைக்காக தடை நடவடிக்கை - ட்ரம்ப்

அமெரிக்காவின் எல்லைகள் வலிமையாக இருக்க வேண்டியது அவசியம் என்றும், நாட்டுக்குள் நுழைவோரைப் பற்றிய தீவிர ஆய்வு தேவை என்றும் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ள ட்ரம்ப், தன்னுடைய நடவடிக்கைகளை நியாயப்படுத்தியுள்ளார்.

ஐரோப்பாவின் குடியேற்ற சூழ்நிலை மிக மோசமான நிலையை ஏற்படுத்தியிருப்பதாக ட்ரம்ப் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருப்பினும், அதிபரின் இந்த ஆணையை நடைமுறைப்படுத்துவதில் கவனம் தேவை என்று அமெரிக்க செனட் சவையில் பெரும்பான்மையாக இருக்கும் குடியரசு கட்சியின் தலைவர் மிட்ச் மெக்கோனெல் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்லாமிய தீவிரவாத குழுக்களுக்கு எதிரான போரில் சில சிறந்த ஆதாரமாக முஸ்லிம்கள் இருந்திருக்கிறார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விதித்திருக்கும் கட்டுப்பாடுகள் சட்டபூர்வமற்றவை, தூண்டக் கூடியவை, ஆபத்தானவை என்று உள்ளூர் தலைவர்களும், மாகாண ஆளுநர்களும் கண்டித்துள்ளனர்.

(கேள்வி தொடரும்...)

# இலங்கையில் பாரதி 12



● முருகபூபதி - ஆஸ்திரேலியா

கண்ணுக்கு இமை தெரிவதில்லை. கண்ணாடியில் பார்த்தால்தான் கண்ணைப் பாதுகாக்கும் இமை எமக்குத் தெரியும். எமது உடலமைப்பின் பிரகாரம் கண்ணுக்கு இமை தெரியவாய்ப்பில்லை.

அதுபோன்று அருகிலிருக்கும் மனிதநேய ஆளுமைகளும் சமூக மாந்தர்களுக்குத் தெரிவதில்லை. அவ்வாறே பாரதியும் அவர் வாழ்ந்த காலத்திலேயே அவர் பற்றிய அருமை பெருமை தெரியாமல்தான் அவர் பிறந்த எட்டயபுரத்து மக்கள் இருந்தார்கள்.

சிறுவன் சுப்பிரமணியனின் பால்ய காலத்தின் வாக்கு வசீகரத்தினால் கவரப்பட்ட எட்டயபுர மன்னர், பாரதியாக்கினார். எனினும் வளர்ந்த பாரதியின் நடையுடை பாவனைகளையும் அவர் கூடித்திரிந்த நண்பர்களையும் அவதானித்த எட்டயபுரத்து பிராமண சமூகம் 'கோட்டி' என்றே எள்ளி நகையாடியிருக்கிறது.



எட்டயபுரம் அரண்மனை

'கோட்டி' என்றால் கிறுக்கன், விசரன், பைத்தியக்காரன் என்று பொருள்படும். பாரதியார் சித்தனாக வாழ்ந்திருப்பவர். அதனால்தான் அவரால் எவருடனும் ஏற்றத் தாழ்வின்றி, சாதி வித்தியாசம் பாராமல் சரி சமமாக உறவாட முடிந்திருக்கிறது. காக்கைக்கும் குருவிக்கும் வீட்டில் சமையலுக்கு வைத்திருந்த அரிசியையும் அள்ளித்தூவ முடிந்திருக்கிறது. குழந்தைக்குட்டியைச் சுமந்து கொண்டு எட்டயபுரத்தின் அக்ரஹாரத்தெருக்களில் ஆடிப்பாட முடிந்திருக்கிறது. ஹரிஜனச் சிறுவன் கனகலிங்கத்தைத்தனது வீட்டின் நடுக்கூடத்தில் இருத்திவைத்து அவனுக்கு உபநயனம் செய்து பூணூல் அணிவித்து அவனையும் ஒரு பிராமணனாக்க முடிந்திருக்கிறது. அத்துடன் அவர் நிற்கவில்லை. "கனகலிங்கம், இன்று முதல் நீயும் ஒரு பிராமணன்தான். எவரிடமும் துணிந்து சொல்." என்றும் சொல்லியனுப்பியவர்.

சித்தர்களுக்குரிய இயல்புகளுடன் வாழ்ந்த இந்த தீர்க்கதரிசியை எட்டயபுரத்து மக்கள் 'கோட்டி' என்றே விளித்திருக்கும் செய்தியை இலங்கையிலிருந்து வெளியான மல்லிகை இதழில் தெரிந்துகொண்டோம்.

இந்த அரிய தகவல்கள் அடங்கிய விழிகள் என்ற சிறு சஞ்சிகை பற்றிய குறிப்பினை பேராசிரியர் க. கைலாசபதி 1982 ஜூலை மாதம் வெளியான மல்லிகையில் பதிவுசெய்துள்ளார்.

"சிறு சஞ்சிகைகளில் பாரதி ஆய்வு" என்ற அக்கட்டுரையைபாரதி நூற்றாண்டு காலத்தில் அவர் எழுதியிருந்தார். அத்துடன் அந்த இதழின் முகப்பினை அலங்கரித்தவர் தமிழகத்தின் மூத்த எழுத்தாளரும் பாரதி இயல் ஆய்வாளருமான தொ.மு. சி. ரகுநாதன். அவர் பற்றிய சிறந்த கட்டுரையையும் கைலாசபதியே எழுதியிருக்கிறார்.

"இவ்வாண்டு ( 1982) பாரதி நூற்றாண்டையொட்டி தமிழ்நாட்டிலே வெளிவந்துகொண்டிருக்கும்நூல்களை நோக்கும்பொழுது மொத்தத்தில் ஏமாற்றமே எழுகின்றது. அரசின் பல்வகைப்பட்ட ஆதரவுடனும் - அல்லாமலும் மகாகவியின் படங்களை வெளியிடுவதும், ஏலவே வெளிவந்துள்ள நூல்களை - கவிஞனது படைப்புக்களை - வெவ்வேறு வடிவத்திலும் ரூபத்திலும் வெளிக்கொணர்வதும் வணிக நோக்கின் மேலாதிக்கத்தையே துலாம்பரமாகக் காட்டுகின்றன. ஆரவாரம் அடங்குவது போலத் தோன்றினாலும், ஆழமான முயற்சிகள் அருந்தலாகவே உள்ளன." என்று அக்கட்டுரையின் தொடக்கத்திலேயே தனது கவலையையும் ஏமாற்றத்தையும் கைலாஸ் பொதுமைப்படுத்தியிருந்தார்.

அதேசமயம், குறிப்பிட்ட காலகட்டத்தில் தமிழகத்தில் பாரதி தொடர்பாக ஆரவாரம் ஏதும் இன்றி நடந்திருக்கும் சில அருஞ்செயல்களையும் அக்கட்டுரையில் விவரிக்கிறார்.




பாரதி ஆய்வுகள்

எட்டயபுரத்து மக்கள் என்ன நினைப்பார்களோ என்று தயங்காமல் மனைவி செல்லம்மாவின் தோளில் கைபோட்டும் கைகோர்த்தும் அவர் அங்கு வீதிகளில் வலம் வந்தவர். இந்தக் காட்சிகளை இதனைப் படிக்கும் வாசகர்கள் பாரதி திரைப்படத்திலும் காணமுடியும்.

மதுரையிலிருந்து 1982 ஜனவரியில் வெளியான விழிகள் இதழில் ராமசாமி என்பவர் "எந்நாளும் அழியாத சோதிமிக்க நவகவிதை யாத்த ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதிக்கு நூறு வயசு" என்ற தலைப்பில் எழுதியிருந்த அக்கட்டுரையை கைலாஸ் சிலாகித்து பதிவுசெய்திருக்கிறார்.

பாரதியின் எட்டயபுர வாழ்க்கைக் காலத்தில் அவருடன் பழகியவர்கள், அவர்கள் குடும்பத்தைச்சேர்ந்த இளைய தலைமுறையினர், இவர்களிற் சிலரைப் பேட்டிகண்டு அறிந்து எழுதியிருப்பவை சுவையாக இருக்கின்றன என்னும் தகவலையும் கைலாஸ் சொல்கிறார்.

"இந்தத் தேசியக்கவி உள்ளூர் ஜனங்களால் 'கோட்டி' என்றுதான் கணிக்கப்பட்டிருக்கின்றார். அய்யர் வீட்டுப்பிள்ளை அக்ரகாரத்தில் அடக்கமாக இருக்காமல், கிடாய் மீசை வளர்த்தால் கோட்டி- அய்யர்வீட்டுப்பிள்ளை அந்நிய ஜாதிக்காரர்களின் வீட்டில் சாப்பிட்டதால் கோட்டி - ஜமீன்தாரிடம் கைகட்டி சேவகம்செய்யாமல் 'வந்தே மாதரம்' காரணமாக வெளியேறி ஒரு கோட்டிக்காரனுடன் சுற்றிக்கொண்டிருந்ததால் கோட்டி - பாரதி சுற்றிக்கொண்டிருந்த கோட்டிக்காரன்கட்டையபமணியக்காரரையும் பாரதியையும் சேர்த்தே குறிப்பிடுகின்றனர். 'பாரதி பிறந்த வீடு' என்று எட்டயபுரத்தில் பாரதி மாமா சாம்பசிவ அய்யர் வசித்த வீட்டை அரசுதத்தெடுத்து (தொல்பொருள் ஆய்வுத்துறை மூலம்) அதில் முதல் அறையில் பாரதி பிறந்த இடம் என்றெழுதிய அட்டையையும் வைத்திருக்கிறது. அரசு எடுத்திருப்பது உண்மையில் பாரதியார் பிறந்த வீடு அல்ல"

மல்லிகையில் கைலாஸ் தரும் மேற்குறித்த தகவலுடன் மேலும் சில செய்திகளையும் இங்கு சொல்ல விரும்புகின்றோம். பாரதியுடன் இளமைக்காலத்தில் எட்டயபுரத்தின் வீதிகளில் அலைந்து திரிந்து அவ்வூரிலேயே வாழ்ந்து கொண்டிருந்த ஒருவரையும் (முதுமைக்காலத்தில்) மற்றும் ஒரு 'இலக்கிய'ச் சிற்றிதழ் பேட்டிகண்டு எழுதியது.


அந்த முதியவருக்கு கட்புலனும் செவிப்புலனும் மங்கியிருந்தபோதிலும் பாரதியைப்பற்றி கேட்டதும் அவர் ஆர்வத்துடன்பேசியிருக்கிறார்.

"அவன் ஒரு கோட்டி. நானும் அவனுடன் சுற்றியதால் என்னையும் இங்கு கோட்டி என அழைத்தார்கள். அதிகாலையில் நாமிருவரும் எங்காவது வெளியில் 'கொல்லைக்கு' போவோம். (இங்கு கொல்லைக்குப்போதல் என்பது காலைக்கடன் கழிக்கச்செல்லுதல் என்று அர்த்தப்படும்) நான் வீடு திரும்பி விடுவேன். ஆனால், பாரதி சூரியோதயத்திற்காக காத்திருப்பான். முழு நிர்வாணமாக நின்று சூரிய நமஸ்காரம் செய்வான். அதனால் உடலுக்கு சுறுசுறுப்பு கிடைக்கும் என்பான்." என்று தெரிவித்துள்ளார்.



பாரதியார் குடும்பம்

இந்தக் காட்சியை பாரதி திரைப்படத்தில் வேறு ஒரு ரூபத்தில் காண்பித்திருப்பார்கள். அதில் வரும் 'நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே' பாடல் (இசை: இளையராஜா - இயக்கம் ஞான ராஜசேகரன் - நடிப்பு சாயாஜி ஷிண்டே என்ற கன்னட நடிகர்) காட்சியில் பாரதியார் இவ்வாறு நுட்பமாகக் காண்பிக்கப்படுவார்: சிறிய நீர்வீழ்ச்சியில் நீராடும்போது அவரது அரையில் இருக்கும் துண்டு அவிழ்ந்து தண்ணீருடன் அடித்துச்செல்லும். பாரதியின் சூரிய நமஸ்காரக்காட்சி இவ்வாறு வேறு ஒரு கோணத்தில் தத்ரூபமாக காண்பிக்கப்படும்.



எட்டயபுரம் பாரதியார் இல்லம்

இலங்கையில் பாரதி என்னும் இந்தத்தொடரை எழுதும் கட்டுரையாளர் 1984 இல் எட்டயபுரத்தை தரிசிப்பதற்காக சென்றபோது, குறிப்பிட்ட 'பாரதி பிறந்த வீடு', அவருக்கு பாரதி பட்டம் வழங்கப்பட்ட - அத்துடன் அவர் சிறிதுகாலம் வேண்டா வெறுப்பாக சும்மா இருந்துவேலை செய்த அரண்மனை, கவிதைகள் புனைவதற்காக அமர்ந்திருந்த தெப்பக்குளத்தின் படிக்கட்டுக்கள், மனைவி செல்லம்மாவின் தோளில் கைபோட்டு அலைந்து திரிந்த மாடவீதி, பாரதியார் மணி மண்டபம் முதலானவற்றைத் தரிசித்து வந்து வீரகேசரியில் விரிவான கட்டுரையும் எழுதியிருக்கிறார்.

பாரதியின் இல்லமும் மணிமண்டபமும் தமிழக அரசினால் பராமரிக்கப்பட்டாலும், குறிப்பிட்ட எட்டயபுர அரண்மனையை அரசிடம் ஒப்படைப்பதற்கு மன்னரின் சந்ததி எனச்சொல்லிக்கொண்டிருப்பவர்கள் மறுத்துக்கொண்டிருந்தார்கள். அதனால் உரிய கவனிப்பின்றி அந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அரண்மனை பரிதாபத்திற்குரியதாக காட்சியளித்தது.

33 வருடங்களின் பின்னர் இன்று அங்கு நிலைமை எப்படி என்று தெரியவில்லை. மேலைநாடுகளாயின் என்ன நடந்திருக்கும்...? அருங்காட்சியகமாக மாற்றியிருப்பார்கள்.

இவ்வாறு இந்தியாவில் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் பாதுகாத்துப் பேணப்படாமல் அழிந்து கொண்டிருக்கின்றன.

மல்லிகை, இலங்கையில் பாரதி நூற்றாண்டிற்காக மாத்திரம் சிறப்பிதழ் வெளியிடவில்லை. வெளிவரத் தொடங்கிய காலம் முதலே பாரதிஆய்வுகளுக்கு சிறந்த களம் வழங்கியது.


விமர்சகர்கள் சபா.ஜெயர்ராசா ( பாரதியின் புதிய ஆத்திசூடி), க. அருணாசலம் ( பாரதியார் - ஆஸ்தீகன் - முற்போக்காளன் - பொதுவுடைமையாளன்), நாவேந்தன் ( பாரதியின் மரபு மீறல்), மரகத சிவலிங்கம் ( சாக்தன் பாரதி), சேதுகாவலர் ( பாரதி புதுமைச்சாரதி ), மனோன்மணி சண்முகதாஸ் ( பாரதியின் சுயசரிதை), அ. சண்முகதாஸ் ( கண் திறந்திட வேண்டும்), மேமன் கவி காலவழிப்போக்கனும் ஒரு கிருதயுகப்பாடகனும் - கவிதை) என்பனவற்றுடன் பாரதி வாழ்வில் இடம்பெற்ற சில சம்பவங்களின் தொகுப்பு உட்பட பல ஆக்கங்கள் மல்லிகையில் வெளியாகியிருக்கின்றன.

பேராசிரியர் கைலாசபதி மல்லிகையில் பாரதி தொடர்பாக பல ஆய்வுகளை மரணிக்கும் வரையில் அடிக்கடி எழுதியிருக்கிறார். அவர் 'மல்லிகையில் எழுதியிருந்த இலங்கை கண்ட பாரதி என்ற கட்டுரையை தமிழ்நாட்டின் தாமரை இதழ் அவரது மறைவுக்குப்பின்னர் அவரது நினைவாக மறுபிரசுரம் செய்தது.

மல்லிகையில் தமிழக எழுத்தாளர் தி.கா. ராஜூவின் மானுடத்தின் மகா கவி, தமிழகத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்த தா. பாண்டியனின் அயலாளர் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன் முதலான கட்டுரைகளும் இடம்பெற்றன.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்



# கம்பன் விழா - 2017

(கொழும்பு)

2017 பெப்ரவரி 09, 10, 11, 12 திகதிகளில்
தினமும் காலையும் மாலையும்
கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில்


## விழாவில் பங்கேற்கும் தமிழ்நாட்டு அறிஞர்கள்


புலவர். சுப்பிரமணியம்


பேராசிரியர் வி. அசோக்குமாரன்



திரு.எஸ்.ராஜா


திருமதி பாரதி பாஸ்கர்


பேராசிரியர் ரி.ரெங்கராஜன்

## கம்பன் புகழ் விருது - 2017 பெறும் சான்றோர்

பேராசிரியர் சாலமன் பாப்பையா
மூத்த தமிழறிஞர், தமிழ்நாடு



## விழாவிற்கு வருகை தரும் பிற நாட்டு அரசியற் பிரமுகர்கள்


மாண்புமிகு
டத்தோ எம்.சரவணன்
இளைஞர், விளையாட்டுத்துறை
துணை அமைச்சர், மலேசியா.


கௌரவ
வெ.வைத்திலிங்கம்
முன்னாள் முதலமைச்சர், இந்நாள் சபாநாயகர்,
புதுச்சேரி சட்டசபை.


கௌரவ
வி.பி.சிவக்கொழுந்து
துணை சபாநாயகர்,
புதுச்சேரி சட்டசபை.

## விழாவிற்கு வருகை தரும் நம் நாட்டு அரசியற் பிரமுகர்கள்


மாண்புமிகு
அமைச்சர்
டி.எம்.சுவாமிநாதன்


மாண்புமிகு
இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
இரா.சம்பந்தன்



மாண்புமிகு
அமைச்சர்
மனோ கணேசன்


கௌரவ
நாடாளுமன்ற உறுப்பினர்
எம்.ஏ.சுமந்திரன்


வடமாகாண சபை
எதிர்க்கட்சித் தலைவர்
கௌரவ சி.தவராசா

## கௌரவம் பெறும் பெருமக்கள்


வண.மரிய சேவியர் அடிகள்
நிறுவுநர். திருமறைக்கலாமன்றம்


திரு. அருள் சுப்பிரமணியம்
எழுத்தாளர்.


திரு.விக்டர் ஐவன்
'ராவய' பத்திரிகை ஆசிரியர்


பேராசிரியர் எம்.எம்.நாஜிம்
துணைவேந்தர், தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்


திரு.பி.சுந்தரலிங்கம்
அறங்காவலர், மயூரபதி அம்மன்
ஆலயம்


வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி
பணிப்பாளர், யாழ்.போதனா
வைத்தியசாலை

## இவ்வாண்டு அறக்கட்டளை விருதுகள் பெறும் ஆற்றலாளர்கள்

'நாவலர் விருது' பெறுபவர்


சைவப்புலவர்
மு.திருஞானசம்பந்தபிள்ளை

'விபுலானந்தர் விருது' பெறுபவர்


சங்கீத பூஷணம், கலாநிதி
நா.வி.மு.நவரட்ணம்

'நுழைபுல ஆய்வு விருது' பெறுபவர்


தமிழ்மணி
அகளங்கன்

'மகரந்தச்சிறகு விருது' பெறுபவர்


இலக்கிய சாகரம்
அல். அஸூமத்

'ஏற்றமிகு இளைஞர் விருது' பெறுபவர்


நாதஸ்வர வித்துவான்
கே.பி.குமரன்

# திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் கும்பாபிஷேகம் நாளை (06.02.2017)





ஸ்ரீமத் பிரம்மாண்டத்தின் இடை நாடிஸ்தானம் எனவும் சிவபூமி, ஸ்வர்ணபூமி என்று திருமூலரால் கூறப்பட்டதும் ஞானப்பாலுண்ட திருஞானசம்பந்தரால் போற்றிப் பாடப்பட்ட பல திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்டதும் பிரபஞ்சம் எங்கும் அணுவுக்கும் ஆன்மாவுக்கும் அசைவைக் கொடுத்து அகில லோகங்களையும் தன் அருளால் ஆட்சிசெய்யும் பரம்பொருள், இந்தப் பூவுலகில் சீரும் திருவும் பொலிய இந்து சமுத்திரம் ஈன்றெடுத்த முத்தென மிளிரும் தெய்வீகத் திருநாடாம் ஈழமணித் திருநாட்டில் தட்சண கைலாசம் எனப் போற்றப்படும் திரிகோணமலையின் மத்தியில் வேண்டுவார்க்கு வேண்டும் வரமளித்துக் காத்து இரட்சித்தும் 51 சக்தி பீடங்களில் ஒன்றானதுமான அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு இலங்கையிலேயே முதலாவது கலைக் கோவிலாகத் திகழ்கின்றது.

மேற்படி அம்பாளின் ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது. அவ்வண்ணம், நரசிம்மாசனத்தில் வீற்றிருந்துஅருள்பாலிக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கும் சுந்தா இராஜகோபுர விமானங்களுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் வேதசிவாகம விதிவழுவா நெறிமுறைநின்று அறநெறி காக்கும் சிவாச்சாரியார்களைக் கொண்டு ஆகம பிரமாணங்களைப் பற்றியமைந்த குண்ட மண்டல வேதிகாசம்யுக்த மஹா யாகசாலையிலே 33 குண்டங்களை அமைத்து கற்றாங்கு எரியோம்பி அவிசொரிந்து ஆகுதி நல்கி ஸவஸ்திஸ்ரீ நிகழும் துர்முகிவருடம் தைத்திங்கள் 24 ஆம் நாள் நாளை (06-02-2017) திங்கட்கிழமை தசமித் திதியும் ரோகிணி நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய புண்ணிய சுப தினத்தில் காலை 09:36 மணிமுதல் 10:28 மணி வரையுள்ள மீனலக்கின் சுப முகூர்த்தத்தில் புனராவர்த்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

கடந்த ஜனவரி 29 ஆம் திகதி (ஞாயிறு பின்னிரவு) கர்மாரம்பம் இடம்பெற்றுக் கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

அவ்வண்ணம் அடியார்கள் மேற்படி கும்பாபிஷேகத்தைத் தரிசித்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ அம்பிகை அருள்புரிவாராக.



## ஆலய வரலாறு



ஈழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வர சிவபூமியில் கோயில் கொண்டருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஈழத்திலுள்ள சக்தி பீடங்களில் தொன்மையும், முதன்மையும், மேன்மையும் உடையதாக விளங்குகின்றது.

மதுரையம்பதியில் பிறந்த பிராமண குலத்தைச் சேர்ந்த ஒருவர் இராமேஸ்வரத்துக்கு வந்து இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தார். இவ்வாறு இருக்கும் காலத்தில் தெய்வ விக்கிரகம் ஒன்று பற்றி தெய்வீக வாக்கு அவருக்குக் கிடைத்தது. திருகோணமலையிலுள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தெற்கு வீதியில் தொங்கு செவ்வரத்தை மரமொன்று இருக்கின்றது. இந்த மரத்தின் அடியில் நிலத்தினுள் ஒரு தெய்வ விக்கிரகம் இருக்கிறது என்ற தெய்வ வாக்கின்படி அந்தப் பிராமண பக்தர் திருக்கோணமலைக்கு வந்தார். அந்த இடத்தை அகழ்ந்து பார்த்த போது ஒரு செப்புக் கிடாரத்தினுள் (தாளி) காளி அம்பாளின் விக்கிரகம் இருப்பது கண்டறியப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை இந்தக் கோவிலில் நடைபெறும் பிரதான விழாக்களில் இந்தக் காளியம்பாள் விக்கிரகம் சிறப்பிடம் பெற்று வருகின்றது. காளி அம்பாளின் விக்கிரகம் தாளியிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட காட்சி இந்தக் கோயிலின் சித்திரத் தேரில் படைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இராஜ கோபுரத்திலும் இந்தச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

அகழ்ந்தெடுக்கப்பட்ட செப்புக் கிடாரமும் அதற்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருந்த பத்திரகாளி அம்பாளின் விக்கிரகமும் இந்தக் கோவிலின் தோற்றக்காலம் பற்றிய தரவுகள் சிலவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கின்றன. செப்புக் கிடாரத்தின் வடிவமைப்பையும் உலோக வார்ப்பு முறையையும் அவதானிக்கையில் மிகப் பழமை வாய்ந்த தொன்றாகவே இந்தக் கிடாரம் காணப்படுகின்றது. பத்திரகாளி அம்பாள் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழ 11 ஆம் 12 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்க் கோவில்களில் காணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாகக் காணப்படுகின்றது. இந்த விக்கிரகத்தின் காலத்தை திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் அது மிகப் பழமை வாய்ந்த ஒன்றெனக் கூறிக்கொள்ள முடியும்.

இந்தக் கோவில் பற்றிய கதை மரபில் வரும் செய்தி இலங்கையில் காலத்துக்குக் காலம் நடைபெற்ற போர்த்துக்கீச, ஒல்லாந்தப் படையெடுப்புக்களாலும் பௌத்த சமணத் தாக்கங்களாலும். இந்துக் கோவில்களுக் கேற்றப்பட்ட அழிவுகளை நினைவூட்டுகின்றன. அந்நியரின் ஆக்கிரமிப்பிலிருந்து தற்காலிகமாகப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் கோணேசர் கோவிலின் விக்கிரகங்கள் கிணற்றினுள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தமையும் பொலநறுவை இந்துக் கோயில்களின் திருவுருவங்களை அதிசயிக்கத்தக்க வகையில் நிலத்தடியில் கல்லறை அமைத்துப் பாதுகாத்து வைத்திருந்தமையும் அறிகின்றோம்.

இத்தகைய நடவடிக்கையாளேயே அந்நியரின் இந்து மத விரோதச் செயல்கள் நடைபெற்ற 17 ஆம் நூற்றாண்டில் காளி கோயில் அம்மன் விக்கிரகமும் செப்புக் கிடாரத்தினுள் பாதுகாத்து வைத்து மண்ணுக்கடியில் மறைத்து வைக்கப்படிருந்ததென எண்ண வேண்டும்.

இன்று ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலிருக்கும் இடத்தில் சோழர் காலக் கோயில் ஒன்று இருந்தது எனவும் இந்தக் கோயிலுக்கு உரிய தூண் ஒன்றில் கல்வெட்டொன்று காணப்பட்டதையும், அதனைப் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி செ.குணசிங்கம் அவர்கள் ஆய்வு செய்துள்ளார் என்பதனையும் அறிவோம். போர்த்துக்கீசரின் காலத்தில் இந்தக் கோயில் அழிக்கப்பட்டு மறுபடியும் இந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







### பேதுருவளாகத்தின் காவல்தூதர்கள்

வத்திக்கான் காவல்துறையினரைச் சந்தித்த திருத்தந்தை வத்திக்கானிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாதுகாப்புப் பணிகளை ஆற்றிவரும் காவல்துறையினர் ஒருவகையில் வத்திக்கான் தூய பேதுருவளாகத்தின் காவல்தூதர்கள் எனபாராட்டினார்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா 18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### உலகிலே மிக உயரமான இறை இரக்க யேசுவின் திருவுருவம்

பிலிப்பைன்ஸில் நிறைவடைந்த இரக்கம் பற்றிய நான்காவது உலக திருத்தூது மாநாட்டின் இறுதியில் மாறியலோ நகரில் உலகிலே மிக உயரமான இறை இரக்க யேசுவின் திருவுருவம் திறக்கப்பட்டுள்ளது. இது 38 மீற்றர் உயரமானது.

# வியப்பும் பெருமையும் ஏற்படுத்தும் சாதனைகளை உங்கள் கல்லூரிக் காலத்தில் படைத்து மகிழுங்கள்!

## யாழ்.பத்திரிசியார் கல்லூரி மெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினர் அழைப்பு



''உலகெங்கும் வாழும் பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள் உங்கள் சாதனைகளைப் பார்த்து பெருமையடையச் செய்யுங்கள்'' - இப்படித் தெரிவித்தார் யாழ். பத்திரிசியார் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் அருளானந்தம் ஜெயராசா. அண்மையில் நடைபெற்ற கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''எழுபதுகளில் இக்கல்லூரியின் மாணவனாக இருந்த இனிமையான நினைவுகள் இன்னும் என் மனதில் பசுமையாக உள்ளன. உதைபந்தாட்டம், கிரிக்கெட், பாஸ்கற்போல் போன்ற போட்டிகளில் நான் பங்குபற்றி தலைமை தாங்கியுள்ளேன். கிரிக்கெற் போட்டியில் 1971 ஆம் ஆண்டு லாஸ்ற் விக்கெற் இணைப்பாட்டத்தில் நானும் லவல் என்ற நண்பரும் நிகழ்த்திய இணைப்பாட்ட சாதனை இன்னும் முறியடிக்கப்படாமல் உள்ளது. அதனை முறியடிப்பவர்களுக்கென வழங்கப்பட்ட கிண்ணம் இன்னும் யாராலும் பெறப்படாமல் உள்ளது. டண் ஹவுஸின் தலைவராக விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றினேன். கல்லூரியின் தலைமை மாணவனாக செயலாற்றியுள்ளேன். இக்கல்லூரித்தாய் தந்த கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு, விளையாட்டு மற்றும் பயிற்சிகள் இன்று லண்டனில் தொழில் அதிபராக இருக்க வழிசெய்துள்ளது. இன்று புனித பத்திரிசியார் கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவராகப் பணிபுரிகிறேன். எமது கல்லூரியின் இன்றைய நிலை, கல்வி, விளையாட்டு மற்றும் சாதனைகளைக் கண்டு மகிழ்கிறேன்.இந்நிலையை அடைய அன்றாடம் ஓயாது பணியாற்றும் கல்லூரி அதிபர் ஜெறோ செல்வநாயகம் அடிகளாரையும் மற்றைய குருக்கள் பணியாற்றும் ஆசிரியர்களையும் அன்புடன் பாராட்டி நன்றிகளையும் வாழ்த்துக்களையும் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் பெயரால் தெரிவிக்கிறேன்.

மாணவச்செல்வங்களே! கல்லூரி நாள்கள் இனிமையான நாள்கள். திரும்பி பெற்றுக்கொள்ள முடியாத நாள்கள். கல்லூரி நாள்களின் பழைய நினைவுகளை மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும். அந்த நினைவுகள் எப்போதும் இனிமையானவையாக இருக்கத் தக்க விதமாக உங்கள் கல்லூரி நாள்களை அமைத்துக் கொள்ளுங்கள். விளையாட்டில் நீங்கள் காட்டிய போட்டி மனப்பான்மையையும் வீரத்தையும் பார்த்து மகிழ்ந்தேன். வெற்றியை நோக்கிப் போராடும் மனப்பான்மையை நீங்கள் கல்வியிலும் காட்டி கல்லூரித் தாய்க்கு பெருமை சேருங்கள். உலகம் முழுவதிலும் வாழும் பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள் உங்கள் சாதனைகளைப் பார்த்து பெருமையடையச் செய்யுங்கள்.

மேலும் நீங்கள் சாதனை புரியஉதவவும் வழிசெய்யுங்கள். -என்றார்.

## ட்ரம்பின் எல்லைச் சுவர் திட்டம் மெக்ஸிக்கோ ஆயர்கள் கண்டனம்

அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் மெக்சிக்கோ நாட்டுக்கும் இடையே சுவர் எழுப்பும் திட்டத்துக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளமைக்கு தங்களது கண்டனத்தை மெக்சிக்கோ ஆயர்கள் வெளியிட்டுள்ளனர். இவ்விரு நாடுகளுக்கும் இடையே சுவர் எழுப்புவதால் ஏராளமானவர்கள் தங்கள் குடும்பங்கள், வேலைகள், விசுவாசம் மற்றும் நட்புகளை இழக்க வேண்டியிருக்கும். எல்லைச் சுவரைக் கட்டுவதற்குப் பதிலாக பாதுகாப்பையும் வேலைவாய்ப்பையும் உருவாக்குவது தொடர்பாகச் சிந்திக்க வேண்டும் என மெக்சிக்கோ ஆயர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகக் கூறிய மெக்சிக்கோ அரசுத்தலைவர் பெனா நீயடோ எல்லையில் அமெரிக்கா சுவர் எழுப்புவதற்கு தாங்கள் பணம் அளிக்கமாட்டோம், அமெரிக்காவில் வாழும் மெக்சிக்கோ மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்போம். சுவர் எழுப்பும் அமெரிக்காவின் முடிவை நிராகரிக்கிறேன். - எனவும் தெரிவித்துள்ளார்.

### ஆயர்களின் முயற்சியால் காங்கோ அரசுத்தலைவர் பதவி விலக இசைவு

2001 ஆம் ஆண்டிலிருந்து பதவியிலிருக்கும் காங்கோ அரசுத்தலைவர் ஜோசப் கபிலா அவரது பணிக்காலம் முடிந்தும் பதவியிலிருந்து விலகாமல் இருந்து வருகிறார். நாடெங்கும் போராட்டங்கள் இடம் பெற்றுவரும் வேளை அரசுத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உடன் கத்தோலிக்க ஆயர்கள் உரையாடலை நடத்தியமையை அடுத்து அவர் தற்போது பதவியிலிருந்து விலகுவதற்கு இசைவு தெரிவித்துள்ளார். காங்கோ சனநாயகக் குடியரசின் ஏறக்குறைய 8 கோடியே 13 இலட்சம் மக்களில் ஐம்பது விழுக்காட்டினர் கத்தோலிக்கராவர்.

## கரித்தாஸ் நிறுவனத்தின் கற்றலுக்கான உதவிகள்




கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் நடத்தப்படும் மகிழ்ச்சிகர கற்றலுக்கான செயற்திட்டத்தின் கீழ் அராலி வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, துணைவி அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் வட்டுக்கோட்டை மேற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கான புத்தகப் பைகளும் பெற்றோருக்கான வாழ்வாதார உதவிகளும் இயக்குநர் இயூஜீன் பிரான்சிஸ் அடிகளாரால் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் றொபேட் உதயகுமார் அவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் பங்குபற்றி மகிழ்வூட்டினர்.

செய்தியாளர்:
இ.நிரோசன் கரித்தாஸ்

## உண்மையின் எண்ணங்கள்

# பத்திரிசியார் கல்லூரியின் விளையாட்டுப் போட்டி

புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜனும் சிறப்பு விருந்தினர்களாக இலண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் அருளானந்தம் ஜெயராஜாவும் பிரிகேடியர் சுபசிங்கவும் கலந்து கொண்டனர்.

இலண்டன் பழைய மாணவர் தலைவர் அருளானந்தம் ஜெயராஜா உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

தமதுகல்லூரி நாள்களையும் சாதனைகளையும் பட்டியலிட்டு உலகெங்கும் வாழும் பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள் உங்கள் சாதனைகளைப் பார்த்து பெருமையடையச் செய்யுங்கள் என வேண்டுகோள் விடுத்தார்.

பிரதம விருந்தினர் இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன் தமதுரையில் ''இலங்கையில் யாழ்ப் பாணத்தவர்கள் கல்விக்காக அனைத்தையும் இழக்கத் தயாராக இருப்பவர்கள் என அறிந்து மகிழ்ந்தேன். இந்தியா புனரமைப்புச் செய்துள்ள துரையப்பா விளையாட்டு மைதானத்தை நன்கு பயன்படுத்துங் கள். இந்தியா வழங்கும் கல்விக்கான புலமைப் பரிசில்களைப் பற்றிய விவரங்களை அறிந்து படித்துப் பயனடையுங்கள். இதனைவிட இந்தியாவில் வழங்கப்படும் குறுகிய கால புலமைப்பரிசில் மூலம் இந்தியா சென்று வர உங்கள் அதிபர் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்'' என அழைப்பு விடுத்தார்.

இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணத்தில் அமைந்திருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். மாணவர்கள் கல்விக்கு வழங்கப்படும் இந்த வசதிகளையும் வாய்ப்புக்களையும் தெளிவாக அறிந்து முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்- என்றார்.

## போர்த்துக்கல் பாத்திமா அன்னை காட்சி அளித்த நூற்றாண்டு பரிபூரண பலன்

போர்த்துக்கல் பாத்திமா அன்னை காட்சி கொடுத்ததின் நூற்றாண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ள பரிபூரண பலன்களை பாத்திமா திருத்தலத்துக்குத் திருப்பயணம் செல்லுதல் - பாத்திமா அன்னை திருவுருவத்தின் முன்பாகச் செபித்தல் - பாத்திமா செல்ல இயலாதவர்கள் ஆன்மீக முறையில் இதில் பங்கெடுத்தல் ஆகிய மூன்று வழிகளில் பெறலாம். 27 நவம்பர் 2016 அன்று தொடங்கியுள்ள இந்த நூற்றாண்டு நிகழ்வுகள் 2017 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி நிறைவடையும்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், 8/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 077765147, info@tcnlnet.com





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




48

## இந்திய – இலங்கை ஒப்பந்தம்

ஓர் ஏளனப் புன்னகையுடன் மௌனம் சாதித்தார் பிரபாகரன். இந்த சுவாரசியமான விவாதத்தில் குறுக்கிட்டுக் குழப்ப நான் விரும்பவில்லை. எம்.ஜி. ஆருக்கு நிலைமை சங்கடமாகியது. விவாதம் காழ்ப்புணர்வைச் சீண்டி வருவதையும், இந்தியத் தூதுவர் நிதானமிழந்து உணர்ச்சி வசப்படுகிறார் என்பதையும் உணர்ந்து கொண்டார் முதல்வர்.

''நான் அவர்களுடன் தனியே பேச விரும்புகிறேன். தயவு செய்து, நீங்கள் சிறிது நேரம் வெளியே இருக்கிறீர்களா?'' எனப் பண்பாக டிக்சிட்டை வேண்டிக் கொண்டார் எம்.ஜி.ஆர் தயக்கத்துடன் அங்கிருந்து வெளியேறினார் இந்தியத் தூதுவர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நாம்ஏற்றுக்கொள்ள மறுக்கின்றமைக்கான காரணத்தை வினவினார் எம்.ஜி.ஆர். ஒப் பந்தத்தில் உள்ள அடிப்படையான குறைபாடுகளைத் தமிழகத் தலைவர்களுக்கு நாம் விரிவாக எடுத்து விளக்கினோம். மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட மாகாணசபைத் திட்டம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் எதனையும் நிறைவு செய்யவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம். பொதுசன கருத்து வாக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ் மாநிலத்தைத் தற்காலி கமாக இணைப்பதில் உள்ள ஆபத்தைத் தெளிவுபடுத்தினோம். ஈழத்து அரசியல் கட்சிகளும் ஏனைய விடுதலை அமைப்புகளும் இந்திய அரசின் அழுத்தத்துக்கும் மிரட்டலுக்கும் பணிந்து ஒப்பந்தத்தை ஆதரிக்கின்றார்கள் என்றும், எமது மக்களின் அரசியல் இலட்சியத்தை விட்டுக் கொடுக்க நாம் தயாராக இல்லை என்பதையும் உறுதிபடக் கூறினோம். தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வுகாணாத நிலையில், தமிழரின் தாயக மண்ணை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கும் சூழ்நிலையில் எமது ஆயுதங்கள் அனைத்தையும் கையளித்து, எமது போராளிகளைச் சரணடையுமாறு கேட்பது நியாயமற்றது; அநீதியானது என்பதையும் எம்.ஜி.ஆரிடம் எடுத்துக் கூறினோம்.

மிகவும் பொறுமையுடன் எமது விளக்கத்தைக் கேட்டறிந்து கொண்டார் முதலமைச்சர். எமது நிலைப்பாட்டில் உள்ள நியாயப்பாட்டை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் இந்தியாவின் கேந்திர புவியியல் நலனைப் பேணும் நோக்கத்துக்காகவே செய்து கொள்ளப் பட்டது என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார். இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிட்டாத சூழ்நிலை



யில் ஆயுதங்கள் கையளிக்கப்படுகின்றமையையும் அவர் விரும்பவில்லை. அத்துடன், விடுதலைப் புலிகள் வசம் இருந்த ஆயுதங்களில் கணிசமான தொகை தனது அன்பளிப்பு நிதியில் பெறப்பட்டவை என்பதும்

> ''சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு நீங்காத சூழ்நிலையில் தமிழரின் பாதுகாப்புக் கவசமாக விளங்கும் ஆயுதங்களைக் கைவிடுகின்றமை ஆபத்தானது என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். பிரபாகரனின் உறுதி தளராத நிலைப் பாட்டைப் பாராட்டிய எம்.ஜி.ஆர்., ஒப்பந்த விவகாரத்தில் புலிகளின் தலைமை எத்தகைய முடிவை எடுக்கின்றதோ அதற்குத் தனது முழு ஆதரவும் இருக்கும் என்றார்.''

அவருக்குத் தெரியும். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு நீங்காத சூழ்நிலையில் தமிழரின் பாதுகாப்புக் கவசமாக விளங்கும் ஆயுதங்களை கைவிடுகின்றமை ஆபத்தானது என் பதை அவர் ஏற்றுக்கொண்டார். பிரபாகரனின் உறுதி தளராத நிலைப்பாட்டைப் பாராட்டிய எம்.ஜி.ஆர்., ஒப்பந்த விவகாரத்தில் புலிகளின் தலைமை எத்தகைய முடிவை எடுக்கின்றதோ அதற்குத் தனது முழு ஆதரவும் இருக்கும் என்றார். முதலமைச்சருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விட்டு அங்கிருந்து வெளியேறினோம்.

முதலமைச்சரின் சந்திப்பு அறைக்கு வெளியே ஓர் இந்திய அதிகாரியுடன் கதைத்துக் கொண்டிருந்த டிக்சிட் எம்மை வழிமறித்தார். ''ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி முதலமைச்சர் வற்புறுத்தினார் அல்லவா?'' - என்று கேட்டார். நாம் சொல்வதறியாது தடுமாறி மௌனமாக நின்றோம். ''முதலமைச்சர் சொன்னபடியே செய்யுங்கள்'' - என்றார் டிக்சிட். ''அப்படியே செய்கிறோம்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம். நாம் உற்சாகத்துடன் அளித்த பதிலுக்குப் பின்னணியில் உள்ள புதிரை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு



பிரபாகரனின் அங்கீகாரத்தைப் பெறுவதில் தமிழக முதல்வரின் முயற்சி வெற்றி பெறவில்லை என இந்தியப் பிரதமருக்குத் தெரியவந்தது. இதனால் ராஜீவ்காந்தி பெரிதும் ஏமாற்றம் அடைந்தார். எனினும், தனது முயற்சியைக் கைவிட அவர் தயாராக இல்லை. கொழும்பு சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்பாக விடுதலைப் புலிகளின் தலைவரது அங்கீகாரத்தைப் பெற்றுவிடவேண்டும் என்பதில் ராஜீவ் காந்தி உறுதி பூண்டிருந்தார். எம்முடன் பேசி, எமது கருத்துக்களைக் கேட்டறிந்து, எமது இணக்கத்தைப் பெறுவதற்கு முயன்று பார்க்க அவர் முடிவெடுத்தார்.

1937 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் நாள் நள்ளிரவு அசோக் விடுதியில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த பிரபா கரனையும் என்னையும் அவசர அவசர மாக எழுப்பிய இந்திய புலனாய்வு அதிகாரிகள், பிரதமர் ராஜீவ் காந்தி எம்மை அவசரமாக சந்திக்க விரும்புகிறார் எனக் கூறினார்கள். உடனடியாகப் புறப்படுமாறு பணித்தார்கள். ஆயுதம் தரித்த கரும்பூனை அதிரடிப் படையினரின் வாகன அணி பின்தொடர, பிரதமரின் இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். வீட்டு வாசலில், வெள்ளை நிற தேசிய அங்கி அணிந்தவாறு எமக்காகக் காத்து நின்றார் பிரதமர். ராஜீவ் காந்தியுடன் இந்திய உள்ளகப் புலனாய்வுத் துறை அதிபர் நாராயணனும் தமிழக மந்திரி பண்டுருட்டி இராமச்சந்திரனும் நின்றுகொண்டு இருந்தனர். கவர்ச்சி ஊட்டும் புன்முறுவல் பூத்தபடி எம்மை அன்புடன் வரவேற்றார் பிரதமர். பிரபாகரனின் கரத்தைப் பற்றிக் கைலாகு கொடுத்தவாறு ''உங்களைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களை நேரில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்'' - என்றார் ராஜீவ்காந்தி. ''இவர்களை நான் அறிமுகம் செய்து வைப்பது அவசியமில்லை. இவர்கள் உங்களுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமானவர்கள்'' என்று இராமச்சந்திரனையும், நாராயணனையும் சுட்டியபடி சொன்னார் ராஜீவ்காந்தி. பிரத மரின் சந்திப்பு அறையில் கலந் துரையாடல் ஆரம்பித்தது. ''இந்திய - இலங்கை உடன்பாட்டை நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள் என அறிந்தேன். ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி விவரமாகக் கூறுவீர்களா? என்று கேட்டார் ராஜீவ். எமது நிலைப்பாட்டை விவரமாக விளக்கும்படி பிரபாகரன் என்னைப் பணித்தார். ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி நான் ஒவ்வொன்றாக எடுத்து விளக்கினேன்.

முதலில், இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புப் பற்றி மிகச் சுருக்கமான கண்டன ஆய்வை முன்வைத்தேன். மிகவும் இறுக்கமான நெகிழ்த்த முடியாத விதிகளைக் கொண்ட அரசியல்யாப்பு பெரும்பான்மையினரின் நலன்களைப் பேணும் வகையில் வரையப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் யாப்பின் கீழ், மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் மத்தியில் அர்த்த பூர்வமான முறையில் அதிகாரப் பகிர்வு செய்வது இயலாத காரியம் என விளக்கினேன்.

பரந்த நிறைவேற்று அதிகாரங்களையும் உடைய ஜனாதிபதியை அரச அதிபராகக் கொண்ட ஓர் இறுக்கமான ஒற்றையாட்சி அரசை சிறிலங்காவின் அரசியல்யாப்பு உருவாக்கம் செய்துள்ளது. இந்த ஆட்சியமைப்பில் அரசநிர்வாக அதிகாரங்கள் அனைத்துமே மத்தியில் குவிக்கப்பட்டு இருக்கின்றன. இப்படியான ஒற்றையாட்சி யாப்பை இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிபந்தனை இன்றி முழுமையாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாக, நியாய பூர்வமாக அதிகாரப் பகிர்வு செய்யும் வகையில் அரசியல் கட்டமைப்பில் அடிப்படை மாற்றம் செய்வது சாத்தியமற்றது எனச் சுட்டிக் காட்டினேன்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் பரிந்துரைக்கப்பட்ட மாகாண சபையின் அதிகாரங்களும் செயற்பாடுகளும் நிர்வாகத்துறைகளும் தெளிவான முறையில் வரையறுக்கப்படவில்லை. 'டிசெம்பர் 19' தீர்வு யோசனைகளின் அடிப்படையில் இந்த மாகாண சபை மேலும் திருத்தி அமைத்து மேம்பாடு செய்யலாம் என ஒப்பந்தத்தில் சொல்லப்படுகின்றது. ஆனால், இந்த 'டிசெம்பர் 19' தீர்வு யோசனைகளில் பல குறைபாடுகள் உள்ளன என சுட்டிக்காட்டி எமது இயக்கம் ஏற்கனவே அதனை நிராகரித்துள்ளது என்பதையும் பாரதப் பிரதமருக்கு எடுத்துரைத்தேன்.

(தொடரும்...)



# தொழில்நுட்பக்கதிர்





## தோல் புற்றுநோயைக் கண்டறிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்

தோல் புற்றுநோயை மருத்துவர்கள் உதவி இன்றி நாமே சோதனை செய்து கண்டுபிடிக்கும் புதிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஸ்டன்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், ஆரம்ப நிலையிலே துல்லியமான முறையில் தோல் புற்றுநோயைக் கண்டறியும் செயற்கை நுண்ணறிவு முறையை உருவாக்கியுள்ளனர்.

மருத்துவர்கள் உறுதி செய்வதை விட மிகத் துல்லியமாகச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நோயை கண்டறிந்து உறுதிசெய்கிறது. இதனை ஸ்மார்ட்போன்களிலே பொருத்தி அவரவர் தானாகவே பரிசோதிக்கக் கூடியவாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

தோல்புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், மூளைப்புற்றுநோய் என அதிகமான புற்றுநோய்கள் காணப்படுகின்றன.

இப் புற்றுநோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்த முடியும் என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆய்வை விட அதனை கண்டறிவதற்கான பரிசோதனை ஆய்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வருகின்றது.

இந்நிலையில், புற்றுநோயைக் கண்டுபிடிப்பதற்கு இப் புதிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

## ஸ்மார்ட் போன்களுக்காக புதிய நெகிழ்தன்மை கொண்ட திரைகள்



நெகிழ்தன்மை கொண்ட திரைகளை பல்வேறு நிறுவனங்கள் இதுவரை வடிவமைத்துள்ளன.

எனினும் இத் திரைகள் ஸ்மார்ட் கைபேசி களில் இதுவரை பயன்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் Japan Display Inc எனும் நிறுவனம் முழுமையாக நெகிழ்தன்மை கொண்ட தொடுதிரையை வடிவமைத்துள்ளது.

5.5 அங்குல அளவுடையதாகவும், 1920 x 1080 Pixel Resolution கொண்ட Full HD திரையாகவும் இது காணப்படுகின்றது.

இத் திரைகள் விரைவில் ஸ்மார்ட் கைபேசி களில் பயன்படுத்தப்படும் என அந்நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

## புதிய பதிப்பை அறிமுகம் செய்யும் google chrome



இணைய உலாவிகளில் முதன்மையாகத் திகழும் google chrome இன்றுவரை எந்தவொரு இணைய உலாவிகளாலும் முந்த முடியவில்லை.

கூகுள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த அப்பிளிக்கேஷன், பல பதிப்புகளாக வெளிவந்துள்ள நிலையில் தற்போது 54 ஆவது பதிப்பு வெளியர்கியுள்ளது.

தற்போது கைபேசிகளிலேயே அதிகளவில் இணையத்தளப் பாவனை மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தால் கைபேசி களுக்கே முக்கியத்துவம் கொடுத்து இப் புதிய பதிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதாவது, இதற்கு முன்னர் கைபேசிகளில் பயன்படுத்தப்பட்ட குரோம் உலாவிகளைக் காட்டிலும் 28 சதவீதம் அதிக வேகத்துடன் செயற்படக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய மேம்படுத்தல்களை செய்யும் Whatsapp




சமூகவலை தளங்களில் முன்னணி வகிக்கும் வாட்ஸ் அப் அடிக்கடி புதிய மேம்படுத்தல்களை வெளியிட்டு வருகின்றது.

அந்த வகையில் விரைவில் ஒரு புதிய விடயத்தை வாட்ஸ் அப் வெளியிடவுள்ளது.

அதாவது, ஆண்ட்ராய்ட் மற்றும் ஐபோன்களில் வாட்ஸ் அப் உபயோகப்படுத்துபவர்கள் தாங்கள் இருக்கும் Location ஐ நண்பர்கள் தெரிந்து கொள்ளும் வசதியை அறிமுகம் செய்யவுள்ளது.

மேலும் நண்பர்கள் தங்கள் வாட்ஸ் அப் ஸ்டேடஸ்களை மாற்றும் போதும், வாட்ஸ் அப் தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தும் போதும் பற்றிரி Low என இருந்தால் அது Notification களில் காட்டும் படியான அப்டேட்டும் விரைவில் வரவுள்ளது என WABetaInfo தனது twitter பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

## ORANGE நிறுவனத்துடன் கைகோக்கும் NOKIA

Nokia நிறுவனம் தனது அன்ரோயிட் கைபேசியை இன்னும் சில வாரங்களில் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்நிலையில் தனது சேவையை மேலும் விரிவுபடுத்தும் முகமாக கைபேசி வடிவமைப்பைத் தாண்டி மொபைல் வலையமைப்பு தொடர்பிலும் ஆர்வம் காட்டி வருகின்றது.

இதன் அடிப்படையில் ஐந்தாம் தலைமுறை மொபைல் வலையமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

வேறு சில நிறுவனங்களும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில் அனைத்து பரிசோதனை நிலையிலேயே உள்ளது.

எந்தவொரு நிறுவனமும் முற்றுமுழுதாக 5G தொழில்நுட்பத்தை இதுவரை உருவாக்கவில்லை.

எனவே, பிரபல இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமான Orange உடன் இணைந்து இத் தொழில்நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தற்போது உள்ள 4G தொழில்நுட்பத்தை விடவும் 5G தொழில்நுட்பம் பல மடங்கு வேகம் கூடியதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

# விபரீதப் பாதையில் திரும்புகின்ற வேலைநிறுத்த போராட்டங்கள்...!

சந்தியடியில் ஊர்வம்பு கதைக்கும் எல்லோரும் வந்து அமர்ந்திருந்தனர். அப்போது ரூபன் ''மச்சான், போனை ஒருக்காத் தா?'' என்று ஜீவனிடம் கேட்டு வாங்கினான்.

அதைக்கண்ட செல்லாச்சி ''வழக்கமாக ஜீவன்தான் போனுக்குள்ளை தலையை நுழைச்சுக் கொண்டு இருக்கிறவன். இப்ப ரூபனுக்கும் அந்த வியாதி தொத்தியிட்டுது போல இருக்கு'' என்று சிரித்தபடி சொன்னாள்.

''அதெல்லாம் ஒன்றும் கிடையாது. வேலைநிறுத்தங்களாலை பெரிய சிக்கலாக இருக்கு... அதுதான் அதை யார் தொடக்கி விட்டது என்று 'நெற்'றிலை பார்க்கத்தான் போனை வாங்கினனான்'' என்று பதில் சொன்னான் ரூபன்.

''அட'' என்று ஆச்சரியப்பட்ட ஏரம்பர் ''வேலைநிறுத்தங்களை எப்பவாம் தம்பி தொடங்கினவை?'' என்று கேட்டார்.

''யார் தொடங்கினது என்பதை விட, எதற்காக நடத்தப்பட்டது என்பதுதான் மிகவும் சுவாரசியமானது'' என்று அனைவரினதும் ஆவலைத் தூண்டினான் ரூபன்.

''இப்பதான் 'தும்மினது குற்றம்; இருமினது கஷ்டம்' என்று கண்டதுகளுக்கெல்லாம் வேலைநிறுத்தம் செய்யினம். முதன்முதல் எதுக்காகவாம் வேலைநிறுத்தம் செய்தவை?'' என்று கேட்டாள் செல்லாச்சி.

கைபேசியை ஜீவனிடம் திருப்பிக் கொடுத்த ரூபன், சொல்லத் தொடங்கினான்.

''உலக வரலாறில் பதிவாகியிருக்கிற முதல் வேலைநிறுத்தம், கிறிஸ்துவுக்கு முன் 1580 ஆம் ஆண்டு எகிப்திலை நடந்திருக்கு. அங்கு பிரமிட் கட்டிய தொழிலாளர்களுக்கு, உடல் ஆரோக்கியத்துக்காக உள்ளி கொடுக்கப்பட்டு வந்தது. ஒருமுறை அங்கு பணியாற்றுபவர்களுக்கு உரிய நேரத்தில் உள்ளி கொடுக்கப்படவில்லை. இதனால் அவர்கள் பணிக்குச் செல்லாமல் இருந்தனர். இதுதான் பதிவிலை இருக்கிற உலகின் முதலாவது வேலை நிறுத்தம்'' என்று சொல்லிவிட்டு கால்களை நீட்டிக் கொண்டான் ரூபன்.

ரூபனிடம் வாங்கிய கைபேசியைத் துருவிய ஜீவன் ''எப்பிடிப் பார்த்தாலும், எகிப்திலை பிரமிட் கட்டும்போதுதான் தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டிருக்கினம். அந்தத் தகவல்கள்தான் இப்ப பதிவுகளிலையும் எழுத்து மூலமாகவும் எங்களுக்குக் கிடைக்கின்றன'' என்று தன் பங்குக்குச் சொன்னான்.

அப்போது செல்லாச்சி ''அவங்கள் கண்டுபிடிச்சுப்போட்டுப் போட்டாங்கள். இந்த வேலைநிறுத்தத்தாலை நாங்கள்தான் கஷ்டப்படுகிறம்''என்றாள்.

''அதெப்படி செல்லாச்சி, தொழிலாளர் தங்கடை கஷ்ட நஷ்டங்களை தீர்க்கிறதுக்குத்தானே வேலை நிறுத்தங்களை செய்யினம். அதை எப்பிடி பிழையென்று சொல்லுறது?'' என்று கேட்டார் ஏரம்பர்.

அதற்கு செல்லாச்சி ''உங்களுக்கென்ன வசதியாக இருக்கிறியள்...அன்றாடம் காய்ச்சிகளுக்குத்தானே வேலைநிறுத்தங்களாலை வாற துன்பங்களும் படுறபாடுகளும் தெரியும்'' என்று பதிலளித்தாள்.

இதெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார் ''வேலைநிறுத்தம் என்பது கட்டக்கடைசியாக எடுக்கப்பட வேண்டிய ஆயுதம். ஆனால், இப்ப கனபேர் எடுத்த எடுப்பிலேயே முதல் தூக்குகிற ஆயுதமாக வேலைநிறுத்தம் மாறிக்கொண்டு வருகுது என்பதுதான் கவலையளிக்கிறது'' என்றார்.

''அதிலையும் படிச்சவையும் அந்தலைனிலேயே ஓடப்பார்க்கினம். இது இன்னும் சோகமாக இருக்குது'' என்று உள்குத்துக் குத்தினான் பேப்பர் தம்பி.

''இதிலை என்ன ஒளிவு மறைவு. உள்ளதைத்தானே கதைக்கிறம். விளக்கமாகச் சொல்லுமன்'' என்று தூண்டினார் வாத்தியார்.

விளக்கினான் பேப்பர் தம்பி.....

''மருத்துவர் ஒருவரை இரவு நேரம், ரோட்டிலை வைச்சு யாரோ தாக்கிப் போட்டினம். தாக்கினவையைக் கைது செய்யச் சொல்லி மற்ற மருத்துவர்கள் சில நாள்கள் வேலை நிறுத்தம் செய்திச்சினம்.'' என்று சொல்லிக் கொண்டிருந்த பேப்பர்தம்பியை இடைமறித்த ஏரம்பர் ''அதெப்படி, உயிரை காப்பாத்திற மருத்துவர்கள் மேலை கைவைக்கக் கூடாது தானே?'' என்றார்.

அப்போது கச்சான் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்த செல்லாச்சி ''உடம்பெல்லாம் வியாதிகளை வைச்சுக் கொண்டிருந்தால், டாக்குத்தர்மார் கடவுளாத்தான் தெரிவினம். நாங்கள்தான் இளக்காரமாகப் படுவம்'' என்றாள்.

மௌனமானார் ஏரம்பர். தொடர்ந்து சொன்னான் பேப்பர்தம்பி.....


''பொலிஸாரும் தாக்கியவையைக் கைதுசெய்து வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்துச்சினமாம். ஆனால் தாக்கப்பட்ட மருத்துவர் வழக்கு ஏதும் வேண்டாம் என்று சொல்லிப் போட்டாராம்'' எனக் கூறி நிறுத்தினான் பேப்பர் தம்பி.

''இதுக்கு முதலிலேயே சும்மா இருந்திருந்தால், வேலைநிறுத்தத்தாலை சனம் கஷ்டப்படாமலாவது இருந்திருக்கும்'' என்றான் ரூபன்.

''இதிலை எல்லாம் குறை பிடிக்காதையுங்கோ...மருத்துவர் என்றபடியால் மன்னிச்சுவிட்டிருக்கிறார் என்று நினையுங்கோவன்'' என்று சொன்னர் ஏரம்பர்.

இதைக் கேட்ட ஜீவன் ''அண்ணை நீங்கள் பிறக்கேக்கையே இப்பிடித்தானோ.. இல்லாட்டி இப்பதான் இப்பிடியோ?'' என்று கேட்டான்.

இதற்கு ஏரம்பர் பதில் சொல்ல முன்பாகவே பட்டென்று வெடித்த செல்லாச்சி, ''ஊரெல்லாம் ஓடிஓடி, ஈடுபிடிச்சுச் சொத்துச் சேர்க்கிறவருக்கு இதெல்லம் விளங்காதே...?'' என்று சொன்னாள்.



''அது சரி, வழக்கு நீதிமன்றத்துக்குப் போனால் ஏன் தாக்கினவை என்றெல்லாம்கேள்வி வரும்தானே''என்று பட்டும் படாமலும் சொன்னார் வாத்தியார்.

''வேலைநிறுத்தம் நடத்திற காலத்திலை உடனடியாக ஏற்படுகிற பாதிப்புகள் ஒருவிதம் என்றால்...சில வேலை நிறுத்தங்களாலை ஏற்படுகிற நீண்டகாலப் பாதிப்புகளை ஒருத்தரும் கவனத்திலை எடுக்கிறது இல்லை'' என்று கவலையுடன் சொன்னான் ரூபன்.

மற்றவர்கள் புரியாமல் பார்க்க, அதனை விளக்கிய ரூபன்... ''பல்கலைக்கழகங்களிலை நடக்கிற வேலை நிறுத்தங்களால், மாணவர் கல்வியை முடிக்கிற காலம் இழுபட்டுக் கொண்டு போகும். இதனாலை ஏற்படுகிறபாதிப்புகள் மாணவர்களினதும் பெற்றோரினதும் தலையிலைதான் விழுகிறது'' என்றான்.

''அறை எடுத்துத் தங்கிற பிள்ளைகள், வீட்டிலை நின்றாலும் காசுகட்ட வேணும். உரிய காலத்திலை படிப்பை முடிச்சு மட்டையை வாங்காட்டி வேலை வாய்ப்புகளும் தவறும்....எல்லாவற்றையும் விட வயசு மெல்லே ஏறும்'' என்று யதார்த்தத்தைச் சொன்னான் ஜீவன்.

''ஆனால் வேலைநிறுத்தம் செய்யிறவை புத்திசாலித்தனமாக சம்பளத்தை எடுத்துப் போட்டுத்தானாம் வேலை நிறுத்தத்திலை குதிப்பினம். அடுத்த சம்பளத்துக்குள்ளை மீண்டும் வேலைக்குப் போயிடுவினமாம். இல்லாட்டிலும் பிறகு வேலைநிறுத்தத்திலை நின்ற நாள்களுக்கும் சேர்த்து காசு வாற மாதிரித்தானாம் 'செட்டப்பாகப் போராடுவினம்'' என்று அனுபவத்தைப் பகிர்ந்தான் பேப்பர் தம்பி.

''தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் காப்பாற்றுகிறதுக்காகப் போராடிப் பெற்ற வேலைநிறுத்தம் என்ற மதிப்பு மிக்க ஆயுதம், கண்டவையிற்றையும் சிக்கிச் சீரழியிறதுதான் கொடுமையான விசயம்'' என்று சோகமாகச் சொன்னார் வாத்தியார்.

''இதிலை அரசியல்வாதிகள் முதல் அதிகாரிக்ள் வரையிலானவர்களின் கைங்கரியம் அகோரமாக இருக்கிறதுதான் இன்னும் அபாயமாக இருக்கு'' என்றான் பேப்பர் தம்பி.

அதனைத் தலையசைத்து ஏற்றுக்கொண்ட வாத்தியார் ''தமக்கு எதிரானவர்களுக்கு சிக்கலை உருவாக்க என்றே... அவர்களின் கீழுள்ளவர்களை தூண்டிவிட்டு வேலைநிறுத்தம் செய்ய வைப்பதும், சனம் கஷ்டப்படுறதைப் பற்றிக் கவலைப்படாது, வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளிச்சு, எப்பிடியாவது அவையின்றை வாக்குகளை பெற்றால் போதும் என்று நடக்கிறதும் நிலைமையை இன்னும் மோசமாக மாற்றுகிறது'' என்றார்.

''இதைவிட மோசமான நிலையொன்றும் உருவாகுது'' என்று எச்சரிக்கை மணியடித்த ரூபன் ''இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் வேலை நிறுத்தம் செய்யினம். அது அவையின்றை உரிமை என்று எடுத்தாலும், அரசாங்கப் பேருந்திலை கொடும்பாவி கட்டிக் கொண்டு ஊர்வலம் போகிறது எப்படிச் சரி என்று புரியவில்லை'' என்றான்.

''அரசாங்கச் சொத்துகளை தங்கள் மனம்போனபடி என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது தவறான முன்னுதாரணம் ஆகிவிட்டால், நாட்டில் சட்டம் ஒழுங்கு என்னாகும் என்பதை சம்பந்தப்பட்டவை கவனத்தில் எடுக்க வேணும்'' என்று எச்சரித்தார் வாத்தியார்.


''இன்னொன்றைக் கவனிச்சனீங்களோ?'' என்று கேட்ட பேப்பர்தம்பி ''இப்ப தொழிற்சங்கப் போராட்டங்களிலை பலதும் யாழ்ப்பாணத்திலை முடிவெடுக்கப்படுவதில்லை. கொழும்பிலை இருக்கிற தாய்ச்சங்கங்கள் சொல்லுறதின்படிதான் இங்கை இருக்கிறவை நடக்க வேண்டி இருக்கு. யுத்தத்தாலை பாதிக்கப்பட்டு இருக்கிற எங்கட சனத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, சிலர் இரங்கினாலும், தாய்ச்சங்க அனுமதியில்லாமல் எதுவும் செய்ய முடியாமல் இருக்காம்'' என்றான்.

''அவையும் என்ன செய்யிறது? தமிழ்த் தேசியம் என்றவுடன் 'இருதேசங்கள்'என்று சொன்னவைதான். தங்கடை புழைப்பு என்று வந்தவுடன் 'ஒரே நாடு' என்று பம்முகினம்'' என்றபடியே எழுந்தார் வாத்தியார்.

மற்றவர்களும் சிரித்தபடி எழுந்து நடக்கத் தொடங்கினார்கள். கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# அங்கவீனத்தை ஏற்படுத்தும் தொழுநோய்!

மருத்துவர் பொ.ஜெசிதரன்
சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.



உடலில் ஊனத்தை ஏற்படுத்தி, இன்னொருவரில் சார்ந்து வாழும் நிலையை ஏற்படுத்தும் நோய்களில் தொழு நோயும் ஒன்றாகும். இது பரம்பரை நோயல்ல. இது ஒரு தொற்று நோயாகும். இது Mycobac Terium Leprae எனும் ஒரு வகை பக்ரீரியாவால் ஏற்படுகிறது.

நோயாளி தும்மும் போதும் இருமும் போதும் சிந்தும் சிறுதுளிகளினால் (Dropleto) ஒருவரிடம் இருந்து மற்றையவருக்குப் பரவுகிறது. இதன் நோயரும்பு காலம் 3-5 வருடங்கள் வரை நீண்டு காணப்படலாம்.

இது எல்லா வயதினரையும் ஆண்,பெண் இரு பாலாரையும் தாக்கக் கூடியது. பெரும்பாலும் பொருளாதார வளம் குன்றிய குடும்பத்தினரே இலகுவில் பாதிப்புறுகின்றனர். தோல்மற்றும் நரம்புகளையே இந்நோய் முதன்மையாகத் தாக்குகின்றது.

முன்னைய காலங்களில் குஷ்ட ரோகம் என அழைக்கப்பட்டதும் இந்நோயே. ஆங்கிலத்தில் இந்நோயை Leprosy என அழைப்பர். இந்நோயை ஆரம்பநிலையிலேயே இனங்கண்டு, அதற்கான சிகிச்சையைப் பெற்றுவரின் பூரண குணமடையலாம். அங்கவீனம் அடைவதையும் தவிர்த்துக் கொள்ளலாம். இந்நோய் முற்றாகக் குணப்படுத்தக் கூடிய நோயே. அசண்டையீனமாக, கவனிக்காதிருப்போமானால் இந்நோயின் பாதிப்பு அதிகரித்து நிரந்தர அங்கவீனமுறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும்.

இந்நோயைக் குணப்படுத்தக் கூடிய மருந்து வகைகள் இங்கு யாழ்ப்பாணத்தில் கிடைக்கக் கூடியனவாக உள்ளன. குறிப்பாக, யாழ். போதனா வைத்திய சாலையின் தோல் நோய் சிகிச்சைப் பிரிவில் அவற்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ளவும் முடியும். அதிலும் விசேடம் என்னவென்றால், ஒரு நாள் மாத்திரை எடுத்தாலே, இதன் தொற்றும் தன்மை இல்லாது போவதுடன் அங்கவீனமுறும் துர்ப்பாக்கியமும் இல்லாது போகின்றமையாகும்.

யாழ்ப்பாணத்தின் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் மட்டுமே இந்நோயாளிகள் ஆரம்பத்தில் இனங் காணப் பட்டனர். ஆனால், இன்று அவ்வாறில்லாமல், இந்நோய்த் தாக்கம் பரவலாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. குருநகர், நாவாந்துறை போன்ற பகுதிகளிலும் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இந்நோயாளிகள், வேறு நோய்க்குச் சிகிச்சை பெறச் செல்லும்போது, விபத்தாகவே இந்நோய் இனங்காணப்பட்டுள்ளது. எனவே, எம்மத்தியில், தமக்கு இந்நோய் தொற்றியுள்ளது என அறியாது, இந்நோயுடன் வாழ்வோரின் எண்ணிக்கை, இதுவரை இனங்காணப்பட்டோரிலும் அதிகமாகவே இருக்க வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, இந்நோயின் ஆரம்ப அறிகுறிகளை நாம் அனைவரும் அறிந்திருத்தல் அவசியமாகின்றது.

குறிப்பாக, மக்களுடன் நேரடியாக அவர்களின் சூழலில் தொடர்ந்து சேவை வழங்கும் உத்தியோகத்தர்கள், இந்நோயின் அறிகுறிகளைத் தெரிந்திருப்பின், அவர்களை வழிப்படுத்தி சிகிச்சைக்குட்படுத்தி அவர்களின் வாழ்வு நிலை கீழ் நோக்கி வீழும் அபாய நிலையைத் தடுத்திட முடியும். சிகிச்சைக்குட்படுபவர்கள் தொடர்ந்தும் மாத்திரைகளை உள்ளெடுத்து வருகின்றமையை உறுதி செய்து கொள்ளவும் முடியும். இவ்வாறு செய்யின், இந்நோய் சமூகத்துக்கு மேலும் பரம்பலுறுவதைத் தடுத்திட முடியும். இந்நோய்க்கான மாத்திரைகளைப் பரிந்துரைக்கப்பட்ட காலம் வரை பாவித்துவரின் பூரண குணம் கிடைக்கும்.

ஆரம்ப காலங்களில் இந்நோய் பற்றி அறிந்திராமையால், இது ஒரு தெய்வக்குற்றம், சாபம் என நினைத்து பரிகாரம் தேடமுற்பட்டனர். நேர்த்தி, கழிப்பு என மூட நம்பிக்கைகளில் மூழ்கி, பணம் - நேரம் - செல்வம் இழந்து ஈற்றில் அவர்களைக் கைவிட்டு அல்லது காட்டுக்குத் துரத்தி விடும் நடைமுறைகளே இருந்தன. இவை எமது அறியாமையால் விளைந்தவையே. இவ்வாறு காட்டில் விரட்டப்பட்டு பழங்களையும், கிழக்கு வகைகளையும் உட்கொண்டு வாழ்ந்து வந்த மூதாட்டி ஒருவர் அண்மையில் பத்திரிகை நண்பர் ஒருவரால் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இந்தியாவில் நிகழ்ந்துள்ளது.

அமைதியாகவும்மெதுவாகவும் எதுவித ஆரவாரமுமின்றியும் இந்நோய் எம் சமூகத்தினுள் ஊடுருவி வருகின்றது. எனவே,நாம் அனைவரும் இந்நோய் பற்றி விழிப்புற்று பாதிப்புக்குள்ளானவர்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு சிகிச்சை அளிக்க உதவவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

> முன்னைய காலங்களில் குஷ்ட ரோகம் என அழைக்கப்பட்டதும் இந்நோயே. ஆங்கிலத்தில் இந்நோயை Leprosy என அழைப்பர். இந்நோயை ஆரம்ப நிலையிலேயே இனங்கண்டு, அதற்கான சிகிச்சையைப் பெற்றுவரின் பூரண குணமடையலாம்.

### நோயின் குணம், குறிகள்

இந்த நோயின் குணம் குறிகளைப் பார்ப்போமானால், தோலில் ஏற்படும் தேமல் போன்ற அடையாளங்களாகவோ அல்லது தழும்புகளாகவோ தோன்றும். இவை வெளிறிய நிறமாகவோ, சிவப்பு நிறமாகவோ அல்லது செங்கபில நிறமாகவோ காணப்படும். இவற்றில் கடி-சொறித் தன்மை இருக்காது. இவற்றில் உணர்வுத்தன்மை குறைவாகவோ அல்லது முற்றாக இல்லாததாகவோ காணப்படும். குறிப்பாக நோவு, தொடுகை, சூடு/வெக்கையை உணரும் தன்மை இருக்காது. இந்த அடையாளங்களில் உரோமங்களும் வியர்வைச் சுரப்பிகளும் கூடக் காணப்படமாட்டா. இவற்றை விட தோலில் சிறு சிறு கட்டிகளும் (Skin nodules) மினுமினுப்பான தடித்த தன்மையும் சிலரில் காணப்படலாம்.

> தைமாத கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று சர்வதேச தொழுநோய் தினம் அனுஷ்டிக்கப்பட்டது அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

நரம்புகளில் ஏற்படும் மாற்றங்களைப் பார்ப்போமானால் தடிப்படைந்த நரம்புகள், மணிக்கட்டு சோர்வடைதல் (Wrist drop), விரல்களை நீட்டமுடியாமை (Clawhand), பாதத்தை நிமிர்த்த முடியாமை அல்லது பாதம் சோர்தல் (Foot drop), விறைப்புறுதல் காரணமாக பாதம் அடிக்கடி பொருள்களுடன் மோதுண்டு மாறாத புண்கள் (Neuropathic ulcer) ஏற்படும். கண்களை முழுமையாக மூட முடியாமை இதனால் பிறபொருள்கள் கண்களினுள் விழுந்து கண்கள் சிவப்புறுதல்,வீங்குதல்போன்ற அறிகுறிகள் தோன்றும். கவனிக்காது விடுமெனில் பார்வையிழப்பு ஏற்படும்.

சாதாரணமாகத் தேமலுக்கு பூசப்படும் பூச்சு மருந்துகளுக்கு, இத்தோல் பாதிப்புக்கள் குணமடையமாட்டா. எனவே, மேற்சொன்ன ஏதேனும் ஓர் அறிகுறியாவது இருப்பின் அருகிலுள்ளவைத்தியரிடமோ அல்லது தோல்சிகிச்சை நிலையத்துக்கோ சென்று ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுதல் நன்று.

### பாதுகாப்பு முறைகள்

கால், கைகளில் விறைப்புத்தன்மை கொண்ட நோயாளிகளுக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். இது மீளமுடியாத அங்கக் குறைபாடுகளைக் காலப்போக்கில் ஏற்படுத்திவிடும். எனவே, அங்கங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் கவனம் செலுத்துதல் வேண்டும். சூடான பொருள்களையோ கூரான ஆயுதங்களையோ கையாளும் போது பாதுகாப்பான அங்கிகளை அணிந்து கொள்ளுதல், பொருத்தமான பாதணிகளை அணிந்து கொள்ளுதல், வீட்டிலிருந்து வெளிக்கிளம்பும் போது பாதுகாப்புக் கண்-கண்ணாடிகளை அணிந்து கொள்ளுதல். நித்திரை செய்யும் போதும் கண் பாதுகாப்பை உறுதி செய்தல் போன்ற தடுப்பு முறைகளில் கவனம் செலுத்துதல் நன்று.

இருமும் போதும், தும்மும் போதும் கைக்குட்டைகளைப் பாவித்தல், பொது இடங்களில் கண்டபடி துப்புவதைத் தவிர்த்தல் போன்ற பழக்கங்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றையவருக்கும் நோய் பரம்பலுறுவதைத் தடுத்திட முடியும்.

மருந்துப் பாவனைக் காலத்தில் தோல் நிறம் கருமையடைதல், சிறுநீர் சிவப்பு நிறமாகமாறுதல் என்பன போன்ற பக்க விளைவுகள் ஏற்படலாம். இவை பற்றி பயம் கொள்ளத் தேவையில்லை. சிகிச்சை நிறைவில் இவை பழைய நிலைக்குத் திரும்பும். சிகிச்சைக் காலத்தில் ஒவ்வாமையை ஏற்படுத்தும் உணவு வகைகளைத் தவிர்த்தல் நன்று.

இந்நோய்க்கான பரிசோதனையை குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் செய்து கொள்ள வேண்டும். தமக்கு நோய்த் தொற்று ஏற்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். சிகிச்சை பெற்று வரும் நோயாளியை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கான சமூக அந்தஸ்தையும் மரியாதையையும் பறித்தல் கூடாது. சிகிச்சை பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்நோயாளிகளுக்குப் பிரதேச செயலக - சமூக சேவைகள் திணைக்களத்தால் மாதந்தோறும் உதவிப்பணக்கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படுகிறது.

''நோயை ஆரம்ப நிலையில்
இனங்காண்போம்;
பூரண சுகம் பெறுவோம்''

---

## இலங்கையில் பாரதி...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் க. கைலாசபதி தொடர்ச்சியாக பாரதி ஆய்வுகளில் தீவிரமாக இருந்தவர். அதனால் அவரின் பாரதி மீதான ஆழ்ந்த கண்ணோட்டத்தைப் பரவலான வாசிப்புக்குப் பகிரவேண்டும் என்பதனால் பாரதி தொடர்பாக அவர் எழுதிய 22 கட்டுரைகளைத் தொகுத்து, சென்னையில் கைலாஸின் தோழர் செ. கணேசலிங்கன் தமது குமரன் பதிப்பகத்தால் 'பாரதி ஆய்வுகள்' என்ற பெயரில் வெளியிட்டார். இதுவரையில் மூன்று பதிப்புகளைக்கண்டுவிட்டதிலிருந்து அதன் பயன்பாட்டைப் புரிந்துகொள்ள முடியும்.

''பாரதியியலில் அளவற்ற ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்த கைலாசபதி, பாரதியியலில் பல புதிய ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறியவர். ஆய்வுநெறிகளை உருவாக்கியவர். அவற்றுள் ஒன்று பாரதி நூல்களுக்கு, ஆராய்ச்சிப்பதிப்பு வெளியிடவேண்டுமென்பதாகும். மூலப்பாடத்திறனாய்வுக் கண்ணோட்டத்தில் பாரதியின் எழுத்துக்களுக்கு- குறிப்பாகக் கவிதைகளுக்கு ஆதரபூர்வமான ஆராய்ச்சிப் பதிப்பு வெளியிட வேண்டுமென அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இக் கருத்தை அவரளவு அழுத்தமாக வற்புறுத்தியர் வேறொருவருமில்லை. இந்நாலில் இடம்பெறும் பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும் - சில குறிப்புகள், பாரதி நூற்றாண்டை நோக்கிச் செய்யவேண்டியவை, செய்யக்கூடியவை, பாரதி நூல் பதிப்புகள் முதலிய கட்டுரைகள் இது தொடர்பான அவர் கருத்துக்களைத் தெரிவிப்பனவாகும்.'' - இவ்வாறு இந்த நூலுக்கு பதிப்புரை எழுதியிருக்கும் பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு குறிப்பிடுகிறார்.

கைலாஸின் பாரதி ஆய்வுகள் நூல் உயர்தர வகுப்பு, மற்றும் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கும் உசாத்துணையாக பரிந்துரைசெய்யப்படவேண்டிய பாடநூலாகவும் திகழுகின்றது.

இலங்கையில் பாரதியின் சிந்தனைகள் எவ்வாறு வேரூன்றின என்பதை ஆராய்வதற்கும் இந்த நூல் பெரிதும் உதவும்.

(தொடரும்)

■ திருமதி சரோஜா சிவசந்திரன்

# பலவீனமான சமூக பாதுகாப்பு பலியாக்கப்படும் பெண்கள்...!



ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் ஜனவரி 24 ஆம் திகதி அடித்துக் கோரமாகக் கொலை செய்யப்பட்ட ஞானசேகரன் மேரி ரம்சியா என்ற (வயது 24) ஏழு மாதக் கர்ப்பிணிப் பெண் தொடர்பாக பல கேள்விகள், சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில் அந்தப் பெண்ணின் கொலை எவ்வாறான பாதுகாப்பற்ற சூழலில் இடம்பெற்றுள்ளது என்பதை அறிய நடந்த இடத்துக்குச் செல்வதற்கு ஆயத்தமானோம்.

ஜனவரி 26 ஆம் திகதி காலை எமது குழுவினர் நானும் புறப்பட்டு ஊர்காவற்றுறையை அடைந்தோம். பின்னர் அந்தப் பெண் வசித்து வந்த கரம்பொன் பகுதியை அடைந்தோம். பாதையில் நாம் சென்ற போது ஒரு சிலரே அங்கு காணப்பட்டனர். கொலையுண்ட பெண் தொடர்பான விவரங்களைக் கேட்டோம். பலர் அது பற்றித் தெரிய வில்லை என்றார்கள். தொடர்ந்து நாம் அந்தப் பெண் வசித்து வந்த வீட்டை அடையாளம் காண்பதற்கே சிரமப்பட வேண்டியிருந்தது. அந்தப் பெண்ணின் வீடு அமைந்திருந்த சண்முகநாதன் வீதியைத் தேடி அலைந்தோம்.

அந்தப் பிரதேசம் அடர்ந்த காடு போல, அடர்த்தியான பற்றைகள் நிறைந்து காணப்பட்டது. கைவிடப்பட்ட பல விசாலமான வீடுகள் பரந்து காணப்பட்ட அந்தப் பகுதியில் சண்முகநாதன் வீதியை தேடிய போது ஓர் மோட்டார் சைக்கிளில் இரு ஆண்கள் எமக்கு முன் வந்து நின்ற போது நாம் எமது வாகனத்தை நிறுத்தினோம்.

சிங்கள மொழியில் எங்கே போகின்றீர்கள் என்றார்கள். நாம் கொலையுண்ட அந்தப் பெண்ணின் வீட்டைத் தேடுகின்றோம் என்றோம். ஏன் என்றார்கள்? பார்க்க வேண்டும் என்றோம். பின் அவர்களோடு பேச்சைத் தொடர விரும்பாமையால் அங்கிருந்து அந்தப் பெண் வீட்டை அடைந்தோம்.

அங்கு யாருமில்லை. இறுதிச் சடங்குக்காக அவரது உடல் நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டது என்ற செய்தியை முன்னரே அறிந்திருந்தமையால் நாம் தடுமாறவில்லை.

தனியான ஒரு வீடு. அயலவர்கள் எவரும் அண்மையில் இல்லை. அரை கிலோ மீற்றர் தூரத்தில் முதியவர்கள் இருவர் இருந்தனர். சம்பவம் தொடர்பாகத் தகவல் கேட்டோம். அவர்கள் எதுவும் எமக்குத் தெரியாது என்று மறுத்து விட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் - தனிமையில் - ஓர் இளம் கர்ப்பிணிப் பெண் வாழ்ந்திருக்கின்றார் - வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார் என்பது அதிசயமே; ஆச்சரியமே.

நாம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களைச் சென்று சந்தித்தோம். அந்தப் பெண் பிரசவத் தாய்மார்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணத்தை பெறுவதற்கு இங்கு தங்களிடம் வருபவர் என்றும் கூறினார்கள்.

அத்துடன், அவர் வசிக்கும் இடம் மிகவும் தனிமையானது, பாதுகாப்பற்றது என்று ஆலோசனை வழங்கியுள்ளனர் என்று கூறினர்.

பெண்களுக்குப் பாதுகாப்பான சூழல் ஒன்றை உருவாக்கிக் கொடுப்பது குடும்பத்தினரதும், சமூகத்தினரதும் பொறுப்பாகும். குடும்பத் தலைவர்கள் பெண்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருத்தல் அத்தியாவசியம்.

இவ்வாறு குடும்பம், சமூகம் தம் பொறுப்புக்களில் இருந்து தவறும் போதே பெண்கள் மீதான அசம்பாவித சம்பவங்கள் ஏற்பட வேண்டிய வாய்ப்புக்கள் அதிகமாகின்றன.

அவர் வாழ்ந்து வந்த பிரதேசம் பரந்தளவான காணிகள் மற்றும் கைவிடப்பட்ட விசாலமான வீடுகள் காணப்பட்ட பகுதிகளாகும். இந்தக் காணிச் சொந்தக்காரர்களில் முன்னைய காலத்தில் சிறப்பாக வாழ்ந்து பெயர் பெற்றவர்கள். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அல்பிரட் தம்பையா, வி.என்.கனகரத்தினம், கிளப்பர்லசிங்கம், அருளர் போன்றவர்கள் எனலாம்.

தமது காணிகளையும் வீடுகளையும் அப்படியே விட்டுவிட்டு இவர்கள் இடம்பெயர்ந்து விட்டனர். காணிகளை மாற்றவும் இல்லை. வேறு அபிவிருத்திகளுக்காக வழங்கவும் இல்லை. இதனால் இந்தப் பிரதேசங்கள் பற்றைகள் அடர்ந்த யாருமற்ற பிரதேசங்களாகக் காணப்படுகின்றன.

இந்தப் பகுதிகளில் ஒரு சிலர் தமது தேவைகள் கருதி வசித்துவருவதனால் இன்றைக்கு இந்தப் பகுதிகளால் உரிய பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

தீவுப் பகுதி ஓரளவு அபிவிருத்திப் பாதையில் வளர்ச்சியடைய முயன்று வரும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான சம்பவங்களும் பிரச்சினைகளும் இந்தப் பிரதேச அபிவிருத்தியை புறம் தள்ளி விடுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறான அச்சமூட்டும் சம்பவங்களால் ஏனைய குடியிருப்பு மக்களும் அங்கிருந்து நகர்ந்துவிடக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

புங்குடுதீவில் 2015 இல் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட வித்தியா, நெடுந்தீவில் 2012 இல் வர்சினி, 2013 இல் மண்டைதீவில் நான்கு வயதுச் சிறுமி என்று துயரம் தொடர்ந்து கொண்டே செல்கிறது.

பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதனைத் தொடர்ந்து தற்போது நடந்திருக்கும் கொலை என்பன பெண்களுக்கு எந்த வகையிலும் பாதுகாப்பைக் கொடுக்கும் சூழலை ஏற்படுத்தித் தரவில்லை. போராட்டங்களும் அறிக்கைகளும் வந்து கொண்டேதான் இருக்கின்றன.

ஆனால் நலிந்து வரும் சமூகப் பொறுப்பு பெண்கள் மீதே காட்டப்படும் பாரபட்சம் யாவுமே அவர்களது வளர்ச்சிப்பாதையை சிதைத்து அவர்கள் மீதான சமூகப் பார்வையை திசை திருப்பி விடுகின்றன.

ஆகையால் இந்த விடயத்தில் குற்றவாளிகள் இனம் காணப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். தாமதப்படுத்தப்படும் நீதி, நீதியாகாது. ★

# சுதந்திர இலங்கையில் சுதந்திரமற்றவர்களாக வாழ்கின்றோம்

## வட மாகாண மாற்றுத்திறனாளிகள் தெரிவிப்பு

சுதந்திர இலங்கையில் நாம் சுதந்திரமற்றவர்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இயலாமை உள்ளவர்களின் சுதந்திரங்களும், உரிமைகளும் இலங்கையில் பேச்சளவில் காணப்படுகின்றதே தவிர செயலளவில் இல்லை.

-இவ்வாறு வட மாகாண மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் வே.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கையில் இயலாமையிலுள்ள மக்களின் சுதந்திரங்களும் உரிமைகளும் எந்தளவு பேணப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது தொடர்பாக வட மாகாண மாற்றுத்திறனாளிகளுக்கான அமைப்புக்களின் ஒன்றியம் ஊடகங்களுக்கும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை தனது 69 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் தருணம் இது. 1948 ஆம் ஆண்டு அடையப் பெற்ற இந்த சுதந்திரத்தின் அனுகூலங்கள் எந்தளவுக்கு இயலாமையிலுள்ள மக்களால் அனுபவிக்கக் கூடியதாக உள்ளது என்ற வினா எப்போதுமே மக்களின் மனதில் ஒரு பூதாகரமான வினாவாக இருந்து வருகின்றது.

தங்களது சுதந்திரமும் உரிமைகளும் முறையாக பேணி பாதுகாக்கப்படவில்லை என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் அரசியல் மற்றும் வாக்களிக்கும் உரிமை, நடமாடும் சுதந்திரம், தகவல் அறியும் உரிமை ஆகிய 3 முக்கியமான உரிமைகளின் மீறல்களை மட்டும் இந்த அறிக்கை சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

★ அரசியல் மற்றும் வாக்களிக்கும் உரிமைகள்- பல இயலாமையிலுள்ள நபர்கள் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தும், அவர்கள் இயலாமை காரணமாக குடும்ப அங்கத்தவர்களும் கிராம சேவை அதிகாரிகளும் அவர்களை வாக்காளர்களாக பதிவதைத் தவிர்க்கின்றனர், வாக்களிப்பு நிலையங்கள் அவர்களுக்கேற்ற அணுகுமுறை வசதிகளைக் கொண்டிருப்பதில்லை, வாக்களிப்பு நிலையங்களை மாடிகளில் அமைக்கும் போது சக்கர நாற் காலிகளில் வருகை தருவோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர், விழிப்புலனற்றவர்கள் வாக்களிப்பதற்கு வாக்குச்சீட்டுக்கள் இல்லை, செவிப்புலனற்ற வாக்காளர்களுக்கு தொடர்பாடல் வசதிகளைவழங்க வாக்களிப்பு நிலையங்களில் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் இருப்பதில்லை, வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகைதரும் இயலாமையிலுள்ள வாக்காளர்களைக் கையாளுவதற்கு வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றும் அதிகாரிகள் போதிய அறிவையும், பயிற்சியையும் பெற்றிருப்பதில்லை, அரசியல் கட்சிகள் இயலாமையிலுள்ள மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதில் காட்டும் ஆர்வம் அவர்களுக்கு தமது கட்சிகளில் அங்கத்துவம் வழங்குவதற்கோ அவர்களை தமது வேட்பாளர்களாக நிறுத்துவதற்கோ ஆர்வம் காட்டுவதில்லை, நாடாளுமன்றத்திலோ, மாகாண சபைகளிலோ, உள்ளூராட்சி மன்றங்களிலோ இயலாமையுள்ள மக்களின் பிரதிநிதித்துவம் இன்மையினால் அவர்கள் தொடர்பான சட்டங்களும் கொள்கைகளும் மற்றவர்களினாலேயே இயற்றப்படுகின்றன

★ நடமாடும் சுதந்திரம்- வீதிகளில் இயலாமையிலுள்ள நபர்கள் சுதந்திரமாக சென்று வரக் கூடிய அணுகும் வசதிகளைக் கொண்டவையல்ல, ரயில் நிலையங்களும், பஸ் நிலையங்களும், பஸ் தரிப்பிடங்களும் இயலாமையுள்ள மக்கள் சுதந்திரமாக பயன்படுத்த முடியாதபடி பல குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றன.

★ தகவல் அறியும் உரிமை - அச்சு வடிவில் சாதாரண மக்களுக்கு வழங்கப்படும் அரச தகவல்கள் எவையும் விழிப்புலனற்ற மக்களுக்கு எழுத்து வடிவில் வழங்கப்படுவதில்லை, தொலைக்காட்சி செய்திகளை செவிப்புலனற்றோரும் கேட்டுப் பயன் பெறும்வகையில் அவை சைகைமொழியில் ஒளிபரப்பு செய்யப்படுவதற்கு மிக, மிக குறைந்த முன்னுரிமையே வழங்கப்படுகின்றது. அல்லது வழங்கப்படுதில்லை என்றே கூறிவிடலாம்.- என்றுள்ளது. (ஐ-70)

# தமிழக அரசியலில் பரபரப்பு:

# முதல்வர் பதவிக்கு சசிகலா?

சென்னை, பெப்.05

அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் கட்சியின் பொதுச் செயலர் வி.கே. சசிகலா தலைமையில் இன்று நடைபெறவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னர், அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்களின் கூட்டம், சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இடம்பெற்றது..

இந்நிலையில், அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்களின் கூட்டம் மீண்டும் சசிகலா தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சில முக்கிய கோரிக்கைகள் தொடர்பாக சட்டப் பேரவை மூத்த உறுப்பினர்கள் பேசுவார்கள் எனவும், அதைத் தொடர்ந்து சசிகலாவும் உரையாற்ற வாய்ப்பிருக்கிறது என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



இந்நிலையில், சசிகலா முதல்வராகப் பொறுப்பேற்க ஒப்புதல் கடிதம் பெறுவதற்காகவே இன்றைய கூட்டம் கூட்டப்படவுள்ளது என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், சொந்த ஊர்களுக்குச் செல்ல இருந்த உறுப்பினர்களை சென்னையில் தங்கியிருக்குமாறு அ.தி.மு.க. தலைமை அறிவுறுத்தியுள்ளது. ஊருக்குச் சென்றவர்களையும் உடனடியாக சென்னைக்கு வருமாறும் கூறப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால், தொகுதிகளில் மக்கள் பிரச்சினைகள் தொடர்பான விவரங்களைப் பெறவே பேரவை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும், மாவட்ட நிர்வாகிகளும் அழைக்கப்பட்டிருக் கின்றனர் என்றும் பேரவை உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை சட்டப் பேரவையில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசும் போது, ''ஆளுநர் உரையில் பல நல்ல திட்டங்கள் உள்ளன. அதைப் பாராட்ட எதிர்க்கட்சிகளுக்கு மனமே இல்லை'' என்று தெரிவித்திருந்தார்.

இதற்குஎதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன்-

''எதிர்க்கட்சிகள் மனதாரப் பாராட்டவில்லை என்று முதல்வர் கூறினார். இப்போது பாராட்டுகிறேன். முதல்வராக நீங்களே தொடர்ந்து நீடிக்க வேண்டும்.''- என்றார். அப்போது, தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் சிரித்தனர். ஆனால், அ.தி.மு. கவின் எம்.எல். ஏக்கள் அமைதி காத்தனர்.

இந்நிலையில், இன்று அ.தி.மு.க. பேரவை உறுப்பினர்களின் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அ.தி.மு.க. தலைமையின் இந்த திடீர் நடவடிக்கையால் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கூட்டத்தில் சசிகலாவை முதல்வராக தெரிவு செய்வதற்கான முடிவு எட்டப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அவனியாபுரத்தில் இன்று ஏறுதழுவுதல்!

அவனியாபுரம், பெப்.05

மதுரை அவனியாபுரத்தில் இன்று ஏறுதழுவுதல் போட்டி இடம்பெறவுள்ளது. இந்த ஏறுதழுவுதலில் பங்கேற்க 900 இற்கும் மேற்பட்ட காளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாலமேட்டில் எதிர்வரும் 9 ஆம் திகதியும், உலகப் புகழ் பெற்ற அலங்கா நல்லூர் ஏறுதழுவுதல் 10 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

அவனியாபுரத்தில் இன்று நடைபெறும் ஏறுதழுவுதல் போட்டிக்கான ஏற்பாடுகளை விழாக் குழு மற்றும் கிராம மக்கள் செய்துள்ளனர்.

அவனியாபுரம் - திருப்பரங்குன்றம் வீதியில் உள்ள குருநாதன் கோவில் முன் உள்ள திடலில் ஏறுதழுவுதல் நடைபெற உள்ளது. ஏறுதழுவுதலில் பங்கேற்கும் வீரர்களுக்கும், காளைகளுக்கும் பல கட்டுப்பாடுகளை மாவட்ட நிர்வாகம் விதித்துள்ளது. தகுதியான காளைகள் மட்டும் ஏறுதழுவுதலுக்கு அனுமதிக் கப்படும் என்றும், இதற்காக அவனியாபுரம் கால்நடை மருத்துவ மனையில் காளைகளுக்கு பரிசோதனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெயலலிதா மரணம், ஷீலா பதவி விலகல்; மர்மமாக உள்ளன என்கிறார் மு.க. ஸ்டாலின்



எண்ணூார் , பெப்.05

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணம், அரசு ஆலோசகர் ஷீலா பால கிருஷ்ணன் பதவி விலகினார் என வெளியாகும் செய்தி என எல்லாமே இந்த அரசில் மர்மமாக உள்ளன என்று மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.கவின் செயல் தலைவரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின் நேற்று எண்ணூரில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு இருக்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால்; அரசு தரப்பில் இருந்து எதுவும் சொல்லப் படவில்லை. ராஜிநாமா செய்கிறார் என சொல்லப்படும் அந்த செய்தியும் வரவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது, ஓய்வுபெற்று இருக்கக் கூடியவர்களுக்குத் தான் அரசு பணியில் இந்த அரச முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஏற்கனவே பணி மூப்பு அடிப்படையில் சில பதவிகளை உருவாக்கித் தர வேண்டிய இந்த அரசு, இதுவரை அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒரு மிகப்பெரிய மர்மமான நிலையில் தான் இருக்கிறது.

குறிப்பாக, சொல்ல வேண்டுமென்றால், முதல்வராக இருந்த ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் என்ன என்பதும் மர்மமாக இருக்கின்றன.

அவரது மரணம் எப்படி நடந்தது என்பதும் மர்மமாக இருக்கிறது. அதுபோலவே, இப்போது அதிகாரிகள் ராஜிநாமாவா, இல்லையா என்பதும் மர்மமாக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

## தீபா அரசியல் பயணத்தைத் தொடங்கினார்; இடைத்தேர்தலில் போட்டியிடவும் முடிவு!

சென்னை, பெப்.05

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா அரசியல் பயணத்தைத் தொடங்கினார்.

ஆர்.கே.நகர் தொகுதியில் போட்டியிடுவது தொடர்பாக விரைவில் முடிவை அறிவிப்பேன் என்று தீபா தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் அவரது அண்ணன் மகள் தீபா அரசியலுக்கு வரவேண்டும் என்று அ.தி.மு.க.வில் ஒரு பிரிவினர் வலியுறுத்தி வந்தனர்.

தி.நகர் சிவஞானம் தெருவில் உள்ள தீபாவின் வீட்டுக்கு முன் தினமும் அ.தி.மு.க. தொண்டர்கள் திரண்டு வருகிறார்கள். வெளி மாவட்டங்களில் இருந்தும் அ.தி.மு.க.வினர் தீபாவைப் பார்ப்பதற்காக சென்னையில் குவிந்த வண்ணம் உள்ளனர்.

அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏக்கள் பலரும் தீபாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். தொண்டர்களின் விருப்பத்தை ஏற்று தீபா அரசியல் களத்தில் குதித்தார். எம்.ஜி.ஆர். பிறந்த நாளான கடந்த ஜனவரி 17 ஆம் திகதி இது தொடர்பான அறிவிப்பை தீபா வெளியிட்டார்.

மக்களுக்கு நல்லது செய்ய ஆசைப்படுகிறேன். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா காட்டிய வழியில் எனது அரசியல் பயணம் இருக்கும் என்றும் தெரிவித்த தீபா, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன் என்றும் கூறினார்.



அப்போது மக்களிடம் கருத்துக்களைக் கேட்டு அதற்கேற்ப செயற்பட உள்ளேன் என்றும் எனது அரசியல் பயணத்தை யாராலும் தடுக்க முடியாது என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் அண்ணா நினைவு நாளான நேற்று முன்தினம் மெரினாவில் உள்ள அண்ணா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய தீபா, ஆர்.கே.நகர் தொகுதிக்கு சென்று மக்களைச் சந்தித்துள்ளார்.

அங்குள்ள ஆதரவற்றோர் இல்லத்துக்குச் சென்ற தீபா, குழந்தைகள் மற்றும் முதியோர்களை சந்தித்து பேசியுள்ளார். அப்போது அவர்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளையும் வழங்கியுள்ளார்.

ஆர்.கே.நகர் தொகுதியில் போட்டியிடுவது தொடர்பாக விரைவில் முடிவை அறிவிப்பேன் என்றும், ஜெயலலிதா விட்டுச் சென்ற இடத்தை நிரப்புவேன் என்றும் அதிரடியாக அவர் அறிவித்துள்ளார். அவரது இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகவே பார்க்கப்படுகிறது.

ஜெயலலிதா பிறந்த நாளான எதிர்வரும் 24 ஆம் திகதி முக்கிய அறிவிப்பை வெளியிடுவேன் என்று தீபா கூறி இருந்தார். அதற்கான தொடக்கமாகவே தீபா ஆர்.கே.நகர் தொகுதியில் களம் இறங்கியுள்ளார் என்றும் அவரது ஆதரவாளர்கள் கூறியுள்ளனர்.

ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆர்.கே.நகர் தொகுதி, அவரது மறைவுக்குப் பின்னர் வெற்றிடமாக உள்ளது. அங்கு விரைவில் இடைத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இதனைக் குறிவைத்தே தீபா காய் நகர்த்தி வருகிறார்.

# ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை!

வொஷிங்டன், பெப்.05

ஈரான் அரசு சமீபத்தில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனை நடத்தியதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அந்நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அதிரடி நடவடிக்கையாக ஈரான், சிரியா உள்ளிட்ட 7 முஸ்லிம் நாடுகளில் உள்ள குடிமக்களுக்கான அமெரிக்க விசாவைத் தடை செய்தார்.

இதற்குப் பதிலடியாக ஈரானுக்குள் நுழைவதற்கு அமெரிக்கர்களுக்கு தடை விதித்தது ஈரான் அரசு.

இதேவேளை, ட்ரம்ப் இவ்வளவு காலம் வேறு உலகில் வசித்துவிட்டு இப்போதுதான் அரசியல் உலகிற்குள் அடியெடுத்து வைத்திருக்கிறார் என்று ஈரான் ஜனாதிபதி ஹசன் ருஹானி கருத்துத் தெரிவித்துள்ளார்.


ஈரான் நடத்திய அணுகுண்டுப் பரிசோதனை

மேலும், கடந்த சில நாள்களுக்கு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையைச் சோதனை செய்தும் பரபரப்பை ஏற்படுத்தியது ஈரான்.

ஈரானின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை மீறும் வகையில் ஈரான் ஏவுகணைச் சோதனை நடத்தியிருப்பதால், நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தது. ஆனால், இதனைப் பொருட் படுத்தாத ஈரான், அனுபவமில்லாத நபரின் அச்சுறுத்தல் பயனற்றது என்று கூறியுள் எதுடன், எந்த நடவடிக்கை யையும் சந்திக்கத் தயார் என்று கூறியது.

இதனால் கடும் கோபமடைந்த ட்ரம்ப், 'ஈரான் நெருப்புடன் விளையாடுகிறது. ஒபாமாவை போன்று நான் அல்லன் என்னிடம் அவர்கள் நினைப்பது நடக்காது' என கடுமையாகப் பதிலளித்தார்.

இந்தச் சூழ்நிலையில், ஈரான் மீது ட்ரம்ப் நிர்வாகம் புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

சீனா, லெபனான், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நிறுவனங்கள் உட்பட 12 நிறுவனங்கள், 13 நபர்களைக் குறிவைத்து இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

---

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பொலிஸார் சுட்டுக்கொலை!

## ஆப்கானிஸ்தானில் பரபரப்பு


காபூல், பெப்.05

ஆப்கானிஸ்தானில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பொலிஸார் உடன் பணி புரியும் பொலிஸார் சுட்டுக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பர்யாப் மாகாணத்தின் அல்மார் மாவட்டத்தில் சோதனைச் சாவடி உள்ளது. நேற்று முன்தினம் அதன் அருகே 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர்.

இதனால், அங்கு பதற்றம் ஏற்பட்டது. சடலங்களைக் கைப்பற்றிய, பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். அதில் கொல்லப்பட்ட அனைவரும் பொலிஸார் எனத் தெரியவந்தது.

மேலும், அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. கொல்லப்பட்டவர்களில் தந்தை, 2 மகன்கள், 2 மருமகன்கள் மற்றும் 3 பேர் உறவினர்கள் உள்ளடங்குவர்.



அவர்களில் 4 பேர் பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்துள்ளனர். ஏனைய 4 பேர் பொலிஸாருக்கு உதவும் அதிகாரிகளாக இருந்துள்ளனர்.

இவர்கள் உடன் பணி புரியும் பொலிஸார் ஒருவரே சுட்டுக் கொன்றுள்ளனர். அவர்கள் தலிபான் தீவிரவாதிகளின் ஆதரவாளர்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவத்துக்கு இதுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், ஒருவர் மட்டும் பொலிஸில் சரண் அடைந்துள்ளார். அவர் தலிபான் தீவிரவாதி எனக் கருதப்படுகிறார்.

---

# உக்ரைனில் இராணுவ ரீதியாக ரஷ்யா தலையிடுவதற்கு அமெரிக்கா கண்டனம்!

நியூயோர்க், பெப்.05

உக்ரைனில் இராணுவ ரீதியாக ரஷ்யா தலையிடுவதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐ.நா.வுக்கான அமெரிக்காவின் புதிய தூதர் நிக்கி ஹேலி ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டத்தில் தனது கன்னி உரையை ஆற்றினார்.

இந்த உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் என்னுடைய முதல் பேச்சு ஒரு கண்டனமாக அமைவது துரதிஷ்டவசமானது. எனினும், உக்ரைன் விவகாரம் குறித்துப் பேச வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

கிழக்கு உக்ரைன் பகுதியில் ரஷ்யாவின் செயற்பாடுகள் கடும் கண்டனத்துக்கு உரியவை. தற்போது கிழக்கு உக்ரைன் பகுதியில் கிளர்ச்சியாளர்களுக்கும் உக்ரைன் இராணுவத்துக்கும் இடையேயான சண்டை வலுத்து வருகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக உக்ரைன் மக்கள் ரஷ்யாவின் ஆதிக்கத்தால் அவதிப்பட்டு வருகின்றனர். உக்ரைன் மக்களுக்குத் துணையாக அமெரிக்கா நிற்க விரும்புகிறது.

உக்ரைனின் இறையாண்மையை மதித்து, கிளர்ச்சியாளர்களும் ரஷ்யாவும் நடந்து கொள்ளாவிட்டால் அந்தப் பகுதியில் கொந்தளிப்பு அடங்காது. உக்ரைனின் கிரீமியாவை ரஷ்ய இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. உக்ரைனின் வேறு சில பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் ஆக்கிரமித்துள்ளனர். அவர்களுக்கு ரஷ்யாவின் ஆதரவு உள்ளது.

உக்ரைனில் இராணுவ ரீதியாக ரஷ்யா தலையிடுவதற்கு அமெரிக்கா கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. உக்ரைனுக்கு சொந்தமான கிரீமியாவை விட்டு ரஷ்யா வெளியேறும் வரை, ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் தொடரும்.

ரஷ்யாவுடன் அமெரிக்கா





நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறது. அதற்காகத் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம்.

கிரீமியா பிராந்தியத்தில் உள்ள அவ்டீவ்கா என்னுமிடத்தில் உக்ரைன் இராணுவத்தினருக்கும் ரஷ்ய ஆதரவு பெற்ற படையினருக்கும் இடையே கடந்த சில நாள்களாக மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இரு தரப்பினரும் குண்டு வீச்சில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. சர்வதேச தலையீட்டால் ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் தாக்குதல் நடைபெற்று வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

# விழிகளை வெளியேற்றி சிறுவன் சாதனை!



இஸ்லாமாபாத், பெப்.05

பாகிஸ்தான், லாகூரைச் சேர்ந்த அகமது அலி என்ற 14 வயதுச் சிறுவன் தனது கண்களின் விழிகளை 10 மில்லி மீற்றர் தூரம் வெளியே துருத்திச் சாதனை படைத்துள்ளான்.

பாடசாலையில் கல்வி கற்கும் இந்தச் சிறுவன், தனது சாதனையை வீடியோ எடுத்து சமூகவலைத் தளங்களில் வெளியிட்டான். தற்போது தனது இச்சாதனை வீடியோவை கின்னஸ் உலக சாதனைக்காக அவன் அனுப்பி வைத்துள்ளான்.

---

# அமெரிக்காவின் பொருளாதார தடைகளுக்கு பதிலடி கொடுப்போம்!

தெஹ்ரான், பெப்.05

அமெரிக்கா விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடைகளுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் அரசு அறிவித்துள்ளது.

ஈரான் மீது ட்ரம்ப் நிர்வாகம் புதிய பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. சீனா, லெபனான், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நிறுவனங்கள் உட்பட 12 நிறுவனங்கள், 13 நபர்களைக் குறிவைத்து இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து, அமெரிக்காவுக்கு எதிராக விரைவில் பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

## ஈரான் அறிவிப்பு

இது தொடர்பாக ஈரான் வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பிராந்தியத்தில் பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் செயற்படும் சில அமெரிக்க தனி நபர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் தடை விதிக்க உள்ளோம். அந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

ஏவுகணை மேம்பாடு மற்றும் அவற்றின் செயல்திறன் அனைத்தும் தற்காப்பு நோக்கத்துடன் வடிவமைக்கப்




பட்டுள்ளது. பாதுகாப்பு தவிர மற்ற நடவடிக்கைகளுக்கு ஒருபோதும் அவை பயன்படுத்தப்படாது. இது ஈரான் மக்களின் உரிமை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆபிரிக்க உதைபந்தாட்டக் கிண்ணம்; இறுதிப் போட்டியில் மோதவுள்ளன கமரூன் மற்றும் எகிப்து அணிகள்!



காபோன், பெப்.05

ஆபிரிக்க உதைபந்தாட்டக் கிண்ணத்துக்கான அரை யிறுதிப் போட்டியில் கானா அணியை, கமரூன் அணி 2-0 என்ற கோல் அடிப் படையில் வெற்றி யீட்டி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

காலிறுதிப் போட்டியில் டி.ஆர்.கொங்கோ அணியை 2-1 என்ற கோல்கள் அடிப்படையில் கானா அணி வெற்றியீட்டி அரை யிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

அதேவேளை கமரூன் மற்றும் செனகல் அணியுடனான விறுவிறுப்பான காலிறுதிப் போட்டியில் முழு நேர போட்டி சம நிலையில் முடிவுற்றதால் மேலதிக நேரம் வழங்கப் பட்டது.

மேலதிக நேரத்திலும் இவ்விரு அணிகளும் எந்த வொரு கோலையும் போடாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவுற்றதால் பெனால்டி முலம் 1-0 கோல் அடிப் படையில் வெற்றியீட்டி கானா அணியுடனான அரையிறுதி போட்டிக்கு கமரூன் அணி தகுதி பெற்றிருந்தது.

அந்த வகையில், ஏற் கனவே கமரூன் அணியு டனான பல போட்டிகளில் தோல்வியுற்ற நிலையில், அணித் தலைவர் அசாமா கியான் வெற்றி பெறும் முனைப்பில் தனது அணியு டன் இந்தப் போட்டியில் களமிறங்கினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் போட் டியில், முதல் பாதி நேரத் தில் ஆக்ரோஷமாக மோதிக் கொண்ட போதிலும் இரு அணிகளுக்கும் கோல்க ளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.


எனினும், இரண்டாம் பாதியில், நடேய்யு நட்ஜுய் மற்றும் பசோகொக் முறையே 72, 90ஆவது நிமிடங் களில் பெற்றுக்கொண்ட இரண்டு கோல்களின் மூலம் இறுதிப் போட்டிக்குத் தெரிவா கியது.

அதேநேரம் எகிப்து மற்றும் புர்கினா பாசோ அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியில் முழு நேரப் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சம நிலையுற்றதால் பெனால்டி மூலம் 4-3 கோல் கணக் கில் எகிப்து வெற்றி பெற்று கமரூன் அணியுடனான இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இவ்விரு அணிகளுக் கிடையிலான இறுதிப் போட்டி மத்திய ஆபிரிக் காவிலுள்ள காபோன் நகரில் லிப்ரெவில் நடை பெறவுள்ளது.

அதேநேரம், மூன்றாம் இடத்துக்கான கானா அணி மற்றும் புர்கினா பாசோ அணிகளுக்கிடையிலான போட்டி நேற்றுச் சனிக் கிழமை காபோன், போர்ட் ஜென்டில்லில் நடைபெற் றுள்ளது.

# இவ்வாண்டு ஐ.பி.எல். போட்டியில் பீட்டர்சன் விளையாடமாட்டாராம்!



லண்டன், பெப்.05

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டியில் விளையாடப்போவதில்லை என்று இங்கிலாந்தைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர் கெவின் பீட்டர்சன் அறிவித் துள்ளார்.

10 ஆவது ஐ.பி.எல். இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி இந்தியாவில் எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டியில் விளையாடப் போவதில்லை என்று இங்கிலாந்தின் துடுப்பாட்ட அதிரடி வீரர் கெவின் பீட்டர்சன் நேற்று முன் தினம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்தில் நான் பங்கேற்கமாட்டேன். குளிர்காலத்தில் நான் அதிக அளவிலான போட்டிகளுக் காக வெளியூர்களில் சுற்றி னேன். இதனால் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வெளியூரில் நேரத்தை கழிக்க நான் விரும்ப வில்லை' என்று குறிப்பிட் டுள்ளார்.

கெவின் பீட்டர்சன் கடந்த ஆண்டு (2016) ஐ.பி.எல். போட்டியில் ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட்ஸ் அணி யில் இடம் பெற்று இருந் தார். காயம் காரணமாக 4 ஆட்டங்களில் மட்டுமே ஆடிய அவர் கடந்த டிசம்பர் மாதத்தில் அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகளிர் கிரிக்கெட் வளர்ச்சி குறித்து பெருமிதம் கொள்கிறார் சச்சின்!



டில்லி, பெப்.05

மகளிர் கிரிக்கெட்டின் வளர்ச்சி குறித்து பெருமை கொள்கிறேன் என்று சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள் ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை இணையத்தளத்தில் சச்சின் டெண்டுல்கர், மகளிர் உலகக்கோப்பை குறித்து தன் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட் டுள்ளவை வருமாறு:-

இந்த வருடம் இடம்பெற வுள்ள மகளிர் கிரிக்கெட் உலகக்கோப்பை குறித்து நான் மிகவும் ஆர்வமாக உள்ளேன்.

இங்கிலாந்தில் ஜூன் - ஜூலை மாதங்களில் இடம் பெறவுள்ள இந்தப் போட்டி தர மான வீரர்களின் பங்களிப்பினால் தரமான கிரிக்கெட்டை நமக்குத் தரும். சமீபகாலமாக மகளிர் கிரிக் கெட்டின் வளர்ச்சி கண்டு வருகிறது.

உலகில் பாலின வேறு பாடுகள் நிலவும் காலகட் டத்தில் விளையாட்டில் இது வேறுவிதமாக உள் ளது. வரலாற்றில் பெண்கள் தங்கள் பெருமையை நிலைநாட்ட கிரிக்கெட்டும் உதவுகிறது.

இந்தப் போட்டியில் இந்தி யாவைச் சேர்ந்த ஜுலான் கோஸ்வாமி, மிதாலி ராஜ் ஆகிய இருவரும் தங்களது திறமையை நன்கு வெளிப் படுத்துவார்கள் என்று நம்பிக்கை கொள்கிறேன். ஐசிசி மகளிர் உலகக் கோப்பை வெற்றி பெற எனக் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்ளுகின்றேன் என்று கூறியுள்ளார்.

# நாங்கள் யார் என்று உலகத்துக்கு காட்டுவோம்: பங்களாதேஷ் அணித்தலைவரின் நம்பிக்கை!



ஐதராபாத், பெப்.05

நாங்கள் யார் என்பதை விரைவில் இந்திய டெஸ் டின் போது உலகத்துக்கு காட்டுவோம் என்று பங்களாதேஷ் அணியின் அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹிம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள முஷ்பிகுர் ரஹிம் தலை மையிலான பங்களாதேஷ் அணி ஒரே ஒரு டெஸ்ட் போட்டி கொண்ட தொட ரில் விளையாடவுள்ளது.

இந்த டெஸ்ட் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை ஐதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்தப் போட்டி குறித்து முஷ்பிகுர் ரஹிம் கூறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியா- பங்களாதேஷ் டெஸ்ட் போட்டியின் போது எங்களால் என்ன செய்ய முடியும் என்பதை உலக கிரிக்கெட்டுக்கு நாங்கள் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்தப் போட்டியில் செயல்படும் விதத்தை பார்த்து இந்தியாவே எங் களை அழைக்க விரும்புகி றோம்.

என்னை பொறுத்தவரை இது டெஸ்ட் போட்டி அவ் வளவுதான், வரலாற்று சிறப்பு மிக்க போட்டி என்று நான் நம்பவில்லை.

சமீபத்தில் நடைபெற்ற போட்டிகளில் ஏற்பட்ட அனு பவத்தைக் கொண்டு மிகச் சிறப்பாக செயற்படுவோம் என்ற நம்பிக்கை உள்ளது, அணியின் ஒட்டுமொத்த முயற்சிதான் நல்ல முடிவுகளை கொடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# கேப்பாபிலவில் போராடும் மக்களுக்கு ஆதரவாக அங்கு நேற்று மக்கள் பேரணி

*அரசியல்வாதிகளும் பங்கேற்பு*

முல்லைத்தீவு, பெப்.05

முல்லைத்தீவு கேப்பாபிலவில் தமது காணிகளை விடுவிக்கக்கோரி போராட்டம் நடத்தும் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தைப் புறக்கணித்தும் நேற்று கேப்பாபிலவில் பேரணி ஒன்று இடம்பெற்றது.

கேப்பாபிலவுஇலங்கைவிமானப்படைத் தலைமையகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாக நேற்றுக் முற்பகல் 10 மணிக்கு இந்தப் பேரணி ஆரம்பமாகி வற்றாப்பளை புதுக்குடியிருப்பு பிரதான வீதி வழியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இருந்த இடத்தைச் சென்றடைந்தது.



எமது உறவுகளும் நாங்களும் இருக்க இடமின்றி வீதிகளில் இருக்கும் போது எங்களுக்கு என்ன சுதந்திர தினம் எனக் கூறிய அவர்கள் சுதந்திர தினத்தை எதிர்க்கிறார்கள் எனவும் கூறினர். அந்தப் பேரணியில், கேப்பாபிலவுமக்கள், பிலக்குடியிருப்பு மக்கள், வர்த்தகர்கள், முள்ளியவளைமுச்சக்கரவண்டி சங்கத்தினர், நலன்விரும்பிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடக்குமாகாணசபைஉறுப்பினர்களான து.ரவிகரன், சிவநேசன் போன்றோரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில்ஈடுபட்டவர்கள் 'இராணுவமே எமது சொந்த நிலத்தை விட்டு வெளியேறு', 'வான்படையே எமது மண்ணில் எம்மை வாழ விடு', 'நல்லாட்சி அரசே எம்மை திரும்பிப்பார்', 'காலி முகத்திடலில் சுதந்திரதினம் வீதியில் நாம்', 'எமது மண்ணை ஆக்கிரமித்து எம்மையோ வீதியில் அலையவிட்டு நல்லிணக்கம் பேசுவது முறையா' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளைத் தாங்கியிருந்தனர். (ம-8)

# கேப்பாபிலவு மக்களின் காணிகளை அந்த மக்களிடம் கையளியுங்கள்

*சிவசக்தி ஆனந்தன் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்*

முல்லைத்தீவு, பெப்.05

கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களின் காணிகளை அவர்களிடம்கையளிப்பதற்குநடவடிக்கை எடுங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந்தன் கடிதம் அனுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம்வெள்ளிக்கிழமை இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களின் காணிகள் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி விடுவிக்கப்படும் என அரசாங்க அதிகாரிகளும், பாதுகாப்புத் தரப்பினரும் அறிவித்திருந்தனர். அதனால், 8 வருடங்களின் பின் தமது சொந்த நிலங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையுடனும் ஆவலுடனும் மக்கள் காத்திருந்தனர். ஆயினும் காணிகள்வழங்கப்படவில்லை.

இந்நிலையில் கடந்த 31.01.2017 இல் இருந்து 84 குடும்பங்கள் கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு விமானப்படை முகாமுக்கு முன்பாக குழந்தைகள், கர்ப்பவதித் தாய்மார்கள், முதியோர்கள் சகிதம் இரவு பகலாக வீதியோரத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நானும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், பிரதேசசெயலாளர், விமானப்படை அதிகாரிகள்சகிதம்பொதுமக்களின்காணிகளை நேரில்பார்வையிட்டோம்.

அந்தக் காணிகள் விமானப்படைத் தளத்திற்குள்ளோ, வனபரிபாலன திணைக்களத்திற்குள்ளோ அடங்கவில்லை. இதனால் அந்தக் காணிகளை விடுவிப்பதில்எவ்விதபிரச்சினையும் இல்லை. அரசாங்கத்தால் வழங்கப்பட்டகாணிக்குரிய உறுதிப்பத்திரங்களும் அந்த மக்களிடம் உண்டு.

எனவே அவர்களின் காணிகளை விடுவிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய பணிப்புரைகளைவழங்குங்கள் எனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம)

# வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஊழல், மோசடிகள் ஒழிக்கப்படவேண்டும்

*சுதந்திர தின உரையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன*

கொழும்பு, பெப்.05

வளமான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஊழல், மோசடிகள் இல்லாதொழிக்கப்படவேண்டும். அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக உண்மையானவர்களாகச் செயற்படவேண்டும்என்றுஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.



நாட்டின் தேசிய ஒற்றுமைக்காகஎமதுஅரசாங்கத்தால்முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் தேசிய, சர்வதேச மட்டங்களில் வரவேற்பைப் பெற்றுள்ளன. எமது இந்த வேலைத் திட்டங்களுக்கு எதிராக நாட்டுக்குள் செயற்படுபவர்களை நாட்டுக்கு எதிராக செயற்படுபவர்களாகவே நான் பார்க்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் 69 ஆவது சுதந்திரதினநிகழ்வுகள்நேற்றுக் காலை கொழும்பு, காலி முகத்திடலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி தனதுரையில் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதிதொடர்ந்துஉரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

உலகம் பூராகவும் சுமார் 6,000மொழிகள்பேசப்படுகின்றன. அனைத்துமொழிகளிலும் சுதந்திரம்என்றசொல்முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. அன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து மக்களும்சுதந்திரத்துக்காகப்போராடினார்கள். உயிர்த்தியாகம்செய்தார்கள். அன்றைய சுதந்திரத்துக்கும் இன்றைய சுதந்திரத்துக்கும்குறிப்பிடத்தக்கவித்தியாசம் இருக்கின்றது.

இன்றைய சுதந்திரம் தொடர்பில் நோக்கும்போது, மனிதசுதந்திரம், ஊடக சுதந்திரம், பேச்சு சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம்போன்றனதொடர்பில் பேசப்படுகின்றது. சமூக அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு செயற்பட வேண்டும்.

இந்த யுகத்தில் பிரதானமாக பொருளாதார சுதந்திரத்துக்கே முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். 21 ஆம் நூற்றாண்டில் எமது தாய்நாட்டில் சமூக உறுதிப்பாடு, பொருளாதார உறுதிப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும். பொருளாதாரசுதந்திரத்தை ஏற்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் உண்மையானவர்களாகச் செயற்பட வேண்டும்.

அனைத்து நடவடிக்கைகளின் போதும் எமது கடமைகளை உண்மையாக நிறைவேற்றவேண்டும். ஊழல்மோசடி இல்லாத சமூகத்தை உருவாக்க வேண்டும். இந்த நாட்டின் அரசியல்தலைவர்கள், படித்தவர்கள், இராஜதந்திரிகள், சமூகம்அனைவரினதும் பொறுப்பு இதில் முக்கியமானது.

இதற்காக வியர்வை சிந்தி பங்களிப்பு வழங்கும் விவசாய சமூகம் மற்றும் அனைவரதும் அர்ப்பணிப்பு முக்கியமானது. எமது நாட்டின் பொருளாதார சுதந்திரத்துக்காக நாம் அனைவரும் செயற்பட வேண்டும்.

இன்று அரசு சமாதானம், சகவாழ்வு, நல்லிணக்கத்துக்கு முக்கியத்துவம்வழங்குகின்றது. எமதுநாட்டில்இருக்கின்றவர்கள் படித்த மக்கள். அதனால் நாடு என்ற வகையில் எமக்கு முன்னேறும் திறமை எம்மிடம் உள்ளது. - என்றார். (ம)

## வீதியோட்ட நிகழ்வு

கொக்குவில் இந்துக் கல்லூரியின்வருடாந்தஇல்லமெய்வன்மைப் போட்டியின் வீதியோட்டநிகழ்வு இன்றுஞாயிறுக் காலை 6 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி கே.கே.எஸ். வீதி வழியாக கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நிறைவடையும். இந்நிகழ்வை யூனியன் கல்லூரி அதிபர் வரதன் ஆரம்பித்து வைப்பார். (இ)

# வவுனியா நகரசபை மைதானத்தில் சுதந்திர தினக் கொண்டாட்டம்

*வடக்கு ஆளுநர் கலந்துகொண்டார்*

வவுனியா, பெப்.05

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று வவுனியாநகரசபைமைதானத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி. றோகண புஸ்பகுமார தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே கலந்துகொண்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் உரையாற்றியிருந்தார்.

இலங்கையின் தேசியக் கொடியை வடக்கு மாகாண ஆளுநர் ஏற்றிவைத்தார். வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகள் சிங்கள மொழியிலும், வவுனியா மடுக்கந்த மகாவித்தியாலய சிங்கள மாணவர்கள் தமிழ்மொழி யிலும் தேசிய கீதத்தை இசைத்தனர்.

ஊர்காவல் படை, பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் அணிவகுப்பும் நடைபெற்றது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வவுனியா மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-100)

# சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் நேற்று தமிழர்கள் ஆர்ப்பாட்டம்




கொழும்பு, பெப்.05

இலங்கையின் 69ஆவது சுதந்திரதினகொண்டாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று லண்டனில்தமிழர்கள்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுதந்திரதினத்தைஅனைத்து இலங்கையரும் கொண்டாடுவதற்கு வரவேண்டும் என லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம்அழைப்புவிடுத்திருந்த நிலையில் லண்டனில் உள்ள இலங்கைத்தூதரகத்துக்கு முன்பாக இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒடுக்கப்படும் மக்களாகிய எங்களுக்கு இந்த நாள் கொண்டாடும் தினம் அல்ல. இது எமது சுதந்திர தினம் அல்ல. சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வில் இன, மத வேறுபாடின்றி நமது எதிர்ப்பைப் பதிவு செய்வதன் மூலம் இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் நமது கோரிக்கைகளை ஒன்றிணைந்து முன்வைக்க வேண்டியது அவசியம் என போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின்சுதந்திரதினம் தமிழர்களுக்கானது அல்ல, அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும், எல்லா இரகசிய சித்திரைவதை தடுப்பு முகாம்களும் மூடப்படல் வேண்டும், தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்களில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும், சுதந்திரமான சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும், கல்வி மற்றும் சுகாதாரம் தனியார் மயப்படுத்தப்படல்நிறுத்தப்படவேண்டும், அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், மார்ணவர்கள் , மக்கள் மீதான கொலைச் சம்பவங்களில் தொடர்புடையவர்களும் கொலையாளிகளும்தண்டிக்கப்படவேண்டும், மலையக மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், மலையக மக்களின் ஊதியக் கோரிக்கைகள்நிவர்த்திசெய்யப்பட வேண்டும், மதத் தலங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும், முஸ்லிம் மக்களின் கலாசாரம் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு விடுதலைப்புலிகளின் கொடியைஏந்தியவண்ணம்தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஒ)

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழில் சுதந்திர தின நிகழ்வு



இலங்கையின் 69 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் அணி வகுப்பு மரியாதையுடன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று கொண்டாடப்பட்டன.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்பட தேசியக் கொடியை அரச அதிபர் நா.வேதநாயகன் ஏற்றிவைத்தார்.

மதகுருமார், முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் நேற்றைய சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்குபற்றினர்.

சுதந்திர தின நிகழ்வுகளை முன்னிட்டு ஏ9 வீதி மற்றும் கச்சேரி – நல்லூர் வீதிகள் மூடப்பட்டிருந்தன.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோர் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆகியோருடன் நடத்திய கலந்துரையாடல்களை அடுத்து அந்தப் போராட்டங்கள் முடிவுக்குவந்தன.

வவுனியாவில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் முன்னர் சேவையாற்றியதைப் போன்று அரச, தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடும். புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையில், மாவட்டத்தில் இருந்து தூரப்பிரதேசங்களுக்கான போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் என்றும் முடிவு எட்டப்பட்டது.

அரச மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலைப் பணியாளர்கள் கடந்த நான்கு தினங்களாக பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இரு தினங்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், நேற்று வவுனியா மாவட்டச் செயல கத்தில் உயர்மட்டச் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், அமைச்சர் ரிசாத் பதியூதின், வடக்கு போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன், வடக்கு சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்களான ஜயதிலக, மயூரன், வவுனியா அரசாங்க அதிபர், பொலிஸ் தரப்பினர், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து துறையைச் சேர்ந்த வட மாகாணத்துக்கு பொறுப்பானவர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட உள்ளூர் சேவைகளை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து இரு தரப்பினரும் இணைந்து செயற்படும் வகையில் இணைந்த நேர அட்டவணையின் பிரகாரம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அந்த அட்டவணை தயாரிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு இரண்டு தரப்பினரும் இணங்கியுள்ள நிலையில், எவராவது அதனை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-100)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியாத அப்பாவிப் பிள்ளைகள் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் வங்கிக் கடனொன்றைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டிலேயே பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எமது கடமை. இதனால் தனியார் பல்கலைக்கழகங்களை எதிர்ப்பது பாசாங்குத்தனம் ஆகும்.

நாட்டில் உள்ள சர்வதேசப் பாடசாலைகளில் சுமார் 4 இலட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அங்கு கல்வி பயிலும் அனைவரும் செல்வந்தர்கள் அல்லர்.

அவர்கள் ஒருவர் கூட அரச பல்கலைக்கழகங்களுக்குச் செல்லமுடியாது. அப்படியாயின் அவர்கள் பட்டப்படிப்பைப் பெறுவதற்கான இடமொன்றை உருவாக்க வேண்டும்.

இந்த நிலையில் பல்கலைக் கழக மாணவர்களும், மருத்துவர்களும் முன்னெடுக்கும் போராட்டம் தவறானது.– என்றார்.

## சீனாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கான இலங்கையின் தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு முதலீடு செய்ய வரும் சீனர்களிடம் சீன இராணுவத்துக்கு வசதிகள் செய்துகொடுக்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரப் பகுதி சர்வதேச வர்த்தகத்துக்கு முக்கியமான பகுதி என்பதால், அங்கு தேவையற்ற பிரச்சினைகளை தோற்றுவிக்க முடியாது. – என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அம்பாந்தோட்டை துறைமுகப்பகுதியில் சீனா, பாகிஸ்தான், இந்தியா, போன்ற நாடுகளுடன் நட்பு ரீதியில் இலங்கை பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றது எனவும் கருணாசேன கொடித்துவக்கு கூறினார். (ம)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று கேப்பாபிலவுக்குச் சென்ற வடக்கு முதல்வர், அங்கு போராட்டத்தில் ஈடுபடும் மக்களைச் சந்தித்து உரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

கேப்பாபிலவு மக்களின் போராட்டம் நியாயமானது. மக்களின் போராட்ட உண்மைகள் வெளியே தெரியவரவேண்டும். அவ்வாறு தொடர்ந்தும் செய்திகள் வெளிச்சென்றால் இந்தப் பிரச்சினையை இலகுவில் தீர்க்க முடியும் என்று நம்புகின்றேன்.

கடந்தமுறை முல்லைத்தீவில் இராணுவத்தினருடன் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை ஜனாதிபதிக்கு சரியாகத் தெரியாது.

எனவே, இந்த மக்களின் போராட்டத்துக்கு நான் ஆதரவு தெரிவிக்கும் அதேவேளை இவ்விடயத்தை ஜனாதிபதிக்கு உடன் தெரியப்படுத்தவுள்ளேன். மக்களின் பூர்வீக நிலங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன். – என்றார்.

மக்களுடன் கலந்துரையாடிய வடக்கு முதலமைச்சர், பின்னர் விமானப் படையினரின் முகாமுக்குச் சென்று அங்கு ஒரு மணிநேரத்துக்கும் அதிகமான நேரம் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்) (ம-81)

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப்போராட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், க.சர்வேஸ்வரன், வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் ச.சஜீவன் மற்றும் காணாமற் போனோரின் உறவினர்கள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

அந்தப் போராட்டத்தைத் தடுத்துநிறுத்துவதற்காகப் பொலிஸார் பொய்யான காரணங்களைக் கூறி நீதிமன்றத் தடை உத்தரவு ஒன்றைப் பெற்றிருந்தனர் எனப் போராட்டக்காரர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதாவது சுதந்திர தினத்தன்று மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் கடற்றொழிலாளர்கள் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என எழுதப்பட்டு அந்தத் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது என அவர்கள் கூறினர்.

ஆனால், அந்த தடை உத்தரவுக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் தமது போராட்டம் வேறு என்று கூறிய தாங்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர் என அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்திருந்தனர். அவர்கள், 'காணாமற்போன இருபதாயிரம் பேருக்கு அரசே பதில் சொல்', 'தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'இராணுவம் ஆக்கிரமித்துள்ள நிலங்களை விடுதலை செய்', 'புதிய நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதை தடுத்து நிறுத்து', 'இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களுக்கான நீதி விசாரணையை சர்வதேச நீதிபதிகளிடம் ஒப்படை', 'இனப்பிரச்சினைக்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் தீர்வைக் காண்' போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தினர். (ம)

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் அதிகரித்துள்ள ஆர்ப்பாட்டங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கை கள் என்பன குறித்து மஹிந்த ராஜபக்ஷவிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள், பணிப் பகிஷ்கரிப்புக்கள் என்பன நாளுக்கு நாள் இரட்டிப்பாக அதிகரித்து வருகின்றன. இன்று நாட்டில் பொருள்களின் விலை வேகமாக அதிகரித்து வருகின்றது. பொது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசு செவிசாய்ப்பதில்லை.

நான் ஆரம்பித்த கொழும்பு – கண்டி அதி வேகப் பாதைக்கு அருகில் மீண்டும் அடிக்கல் நாட்டி அபிவிருத்திப் பணியை இந்த அரசு ஆரம்பித்துள்ளது. என்னைப் பேசிக் கொண்டே இவ்வாறு செயற்பட்டு வருகின்றனர் எனவும் மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார். (ஒ)

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் ஆக்கிரமித்து முகாம் அமைத்துள்ள நிலையில், அந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி அப்பிரதேச மக் கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

படைமுகாமின் வாயிலில் தகரக் கொட்டகை ஒன்றை அமைத்து அங்கிருந்தவாறு குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள் எனப்பலரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் நேற்றைய சுதந்திர தினத்தைப் புறக்கணிக்கும் முகமாக போராட்டத்தில் ஈடுபட்ட இடத்தில் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டதுடன் கறுப்பு பட்டிகளையும் அணிந்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு அயற்பிரதேச மக்களும், இளைஞர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து உணவுகளை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, பல்வேறு அரசியல்வாதிகளும் நேற்று கேப்பாபிலவுக்குச் சென்று அந்த மக்களைச் சந்தித்தனர். வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், துரைரசரன், க.சிவநேசன் ஆகியோரும் அங்கு சென்று மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.பிரதீபன், கேப்பாபிலவு விமானப்படை அதிகாரி மற்றும் பல அதிகாரிகள் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் போது படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் மாவட்ட செயலகத்தின் ஊடாக வேலைத் திட்டங்களை இடம்பெற்று வருகின்றன எனக் கூறிய அரச அதிபர், மேலதிகாரிகளுடன் பேசி தீர்வைப் பெற்றுத் தருவார் எனவும் தற்போது போராட்டத்தை கைவிடுங்கள் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆனால், தமது காணிகள் கையளிக்கும் வரை போராட்டம் தொடரும் என பொதுமக்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர். (ம-8)

## நேற்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவரால் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ள முடியவில்லை எனவும், இது தொடர்பில் விழா ஏற்பாட்டுக் குழுவுக்கு எதிர்க்கட்சித்தலைவர் அறிவித்திருந்தார் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மட்டுமே நேற்றைய விழாவில் கலந்து கொண்டிருந்தார். (ஒ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றன.

பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், படைத் தளபதிகள், மதகுருமார், வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இதன் போது படையினரின் சாகச நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஒ)

## சுதந்திர தின நிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லாட்சி அரசுக்கு எதிராக பொதுபலசேனா, சிங்ஹலே போன்ற பேரினவாத அமைப்புக்களும், நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில போன்ற சில சிங்கள அரசியல்வாதிகளும் போர்க்கொடி தூக்கினர்.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு பேர் உச்சநீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் மனுவையும் தாக்கல் செய்திருந்தனர். விசாரணையின் இறுதியில் அந்த மனு உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

## நிதி அமைச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் கீழுள்ள காணி அமைச்சும் வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது. காணி அமைச்சர் டி.எஸ்.குணவர்த்தன கடந்த ஆண்டு ஜனவரியில் காலமாகியதை அடுத்து இது வரை காணி அமைச்சராக எவரும் நியமிக்கப்படவில்லை.

நிதி அமைச்சுக்கு அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபிர் ஹாசிமின் பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிதி அமைச்சுப் பதவிக்கு இராஜாங்க அமைச்சர் சரத் அமுனுகமவின் பெயர் அடிபட்ட போதிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அவருக்கு அந்தப் பதவியை வழங்குவதை ஐ.தே.கட்சியினர் முழுமையாக எதிர்க்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுதந்திர தினம் முடிந்த கையோடு நிதி அமைச்சுப் பொறுப்பில் இருந்து ரவி கருணாநாயக்க விடுவிக்கப்பட வேண்டும் என்ற தமது முடிவை ஜனாதிபதியே பிரதமருக்குத் தெரியப்படுத்தி விட்டார் என்றும் கூறப்படுகின்றது.

நாட்டுக்கு நிதி தேடும் முயற்சியாக தற்போதைய நிதி அமைச்சர் என்ற வகையில் ரவி கருணாநாயக்க கொண்டு வந்து அறிவித்த பல திட்டங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரில் தலையிட்டு நிறுத்தினார் என்பது தெரிந்ததே.

அதேநேரம் நாட்டின் வருமானத்தைக் கூட்டுவதிலும் ரவி கருணாநாயக்க முக்கிய பங்கை வகித்திருந்தார். (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.38 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672/3 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.